KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
வீட்டு மோட்கேஜ் பிரச்சினையா? சட்ட ஆலோசனை தேவையா?
அழையுங்கள் தயா PK கந்தையா BA, LLB (Hons)(வழக்கறிஞர்)

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Reality Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
Tel : 416-284-7000
$1000 $20/month

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
JEYA SHANTHY SIVASOTHY
647.268.2710
AAXEL

மலர்:- 33, 30 October 2026 இதழ்:- 32

ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

GT Brokers
Protect You & Your Family
Critical Illness I No medical Life
Disability Income I Mortgage Life
Travel & Visitor I Life Insurances.
RRSP I RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund

OVER 10 YEARS EXPERIENCE
RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST
ARVIN-KING
RABINTHIRARAJ
Broker
416-200-7001
TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage

15வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணிக்கு உறவுகளே! நவம்பர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

என் இனிய உறவுகளே! அன்பு இல்லம், பாரதி இல்லம், செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இல்லங்களில் வாழும் குழந்தைகளுக்காக வருடத்தில் ஒரு நாள் உங்கள் பிறந்த நன்நாள், திருமண நன்நாள், குழந்தைகளின் பிறந்தநாள், உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இவர்களையும் நினைத்து ஒரு நாள் உணவளிக்க முன் வாருங்கள்! தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதிலும் விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும். 15வது வருடத்தில் தொடரும் சேவை. ஈழநாடு பத்திரிகையின் அறப்பணியில் நீங்களும் பங்கு கொள்ளுங்கள். விபரங்களை 10ம் 11ம் 12ம் 1ம் 16ம் பக்கங்களில் காணலாம். தொடர்புகளுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600

2009 ஏப்ரல் ஆனந்தபுரச் சமரில் காயமடைந்த 300 விடுதலைப்புலிகள் படுகொலை செய்யப்பட்டனர்?

INTERNATIONAL TRUTH AND JUSTICE PROJECT

இலங்கை இராணுவம் 2009 ஏப்ரல் மாதம் ஆனந்தபுரத்தைக் கைப்பற்றிய போது கடுமையாகக் காயமடைந்த நிலையில் ஒரே கட்டடத்துக்குள் விட்டுச் செல்லப்பட்ட 300க்கும் மேற்பட்ட விடுதலைப்புலிகள் இயக்கப் போராளிகள் படுகொலை செய்யப்பட்டதாக சர்வதேச உண்மைக்கும், நீதிக்குமான செயற்திட்டத்தின் புதிய அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இறுதிக்கட்டப் போரில் தப்பிப்பிழைத் தவர்கள் அளித்த வாக்கு மூலங்களின் அடிப்படையில் சர்வதேச உண்மைக்கும், நீதிக்குமான செயற்திட்டத்தினால் தயாரிக்கப்பட்டு 'ஆனந்தபுர மோதல்' எனும் தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (24ம் பக்கம் பார்க்க)

கட்டுநாயக்காவில் கைதானவரை மல்லாகம் நீதிமன்றம் பிணையில் விடுவிப்பு!

இந்தியாவிலிருந்து தாயகம் திரும்பிய வேளையில் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்துப் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட நபர் நேற்று யாழ்ப்பாணத்திற்கு அழைத்து வரப்பட்டு மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். யாழ்ப்பாணம், சண்டிலிப்பாய் பிரதேசத்தைச் சேர்ந்த 50 வயதான இவர், விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைந்து சு.ப. தமிழ்ச்செல்வனின் சாரதியாகப் பணியாற்றியுள்ளார். (24ம் பக்கம் பார்க்க)

ஸ்காபரோ - ரூஜ்பார்க் தொகுதி - சவுத்வெஸ்ட் தொகுதிகளில் நீதன் - பார்த்தி மீண்டும் வெற்றி!

இடைத்தேர்தல் அச்சம் காரணமாக கனடிய பொருட்கள் மீது விதிக்கப்பட்ட வரியை 50 வீதமாகத் தளர்த்தும் ட்ரம்ப்!

கனடா மீதான டிரம்பின் வரிக்கொள்கையை விமர்சித்த ஒபாமா!

அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்பின் வர்த்தகக் கொள்கைகளை கடுமையாக விமர்சித்துள்ள முன்னாள் ஜனாதிபதி பாரக் ஒபாமா, அமெரிக்காவின் நெருங்கிய நட்பு நாடுகளில் ஒன்றான கனடா மீது விதிக்கப்பட்டுள்ள வரிகளை கிண்டல் செய்துள்ளார். மேலும், இத்தகைய நடவடிக்கைகள் நுகர்வோருக்கான பொருட்களின் விலையை உயர்த்துகின்றன என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

சனிக்கிழமையன்று டெட்ராய்ட்டில் நடைபெற்ற ஜனநாயகக் கட்சியின் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் உரையாற்றிய ஒபாமா, அமெரிக்கா தனது வடக்கு அண்டை நாட்டுடன் முரண்படுவது எவ்வளவு விசித்திரமானது என்பதைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

அடுத்த மாதம் நடைபெறவுள்ள அமெரிக்க இடைத்தேர்தலுக்கு முன்னதாக, கனடாவுடனான டிரம்பின் வர்த்தகப் போர் ஒரு விவாதப் பொருளாக உருவெடுத்துள்ள நிலையில் ஒபாமாவின் இந்தக் கருத்துக்கள் வெளிவந்துள்ளன. கனடா மற்றும் அமெரிக்கத் தொழிற்சாலைகளை இணைக்கும் ஒருங்கிணைந்த விநியோகச் சங்கிலிகளை நம்பியுள்ள முதன்மை வாகன உற் பத்தி மாநிலமான மிச்சிகனில், இரு நாடுகளுக்கு இடையிலான பொருளாதார உறவுகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை ஆகும்.

கனடா – அமெரிக்க எல்லையைக் கடந்து வரும் பாகங்களை நம்பி உற்பத்தி நடைபெறும் ஒரு துறையில், விலையைக் குறைப்பதாகக் கூறிய டிரம்பின் வாக்குறுதிகளுக்கு மாறாக இந்த வரிகள் செயல்படுகின்றன என்று ஒபாமா வாதிட்டார். ஒரு வாகனத்தை உருவாக்குவதில் இரு நாடுகளின் பல இடங்களிலிருந்தும் பெறப்படும் பாகங்கள் அடங்கியுள்ளன என்றும், இதன் காரணமாக இறக்குமதி செய்யப்படும் பொருட்களை மட்டும் விலையேறச் செய்யாமல், ஒட்டு மொத்த உற்பத்திச் செலவையே இந்த வரிகள் உயர்த்தக்கூடும் என்றார்.

கொடுங்கோலனைப் போல் டிரம்ப் ஆட்சி! கமலா ஹரிஸ் கடும் விமர்சனம்!

ஒரு கொடுங்கோலனைப் போல டொனால்ட் ட்ரம்ப் ஆட்சி நடத்தி வருவதாக முன்னாள் துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸ் கடுமையாக விமர்சித்துள்ளமை அமெரிக்காவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

அமெரிக்காவில் இடைக்காலத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், பிரச்சார கூட்டங்கள் சூடு பிடித்து வருகிறது. இந்நிலையில், ஜனநாயகக் கட்சி வேட்பாளர்களுக்கு ஆதரவு திரட்டும் விதமாக பல இடங்களில் பிரச்சாரம் செய்து வரும் கமலா ஹாரிஸ், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் ஆட்சியை மேற்கண்டவாறு விமர்த்துள்ளார்.

ட்ரம்ப் தலைமையிலான அரசின் கொள்கைகள், பொருளாதார நிலை, சுகாதாரத் திட்டங்கள், வெளிநாட்டுக் கொள்கை ஆகியவற்றில் உள்ள குறைபாடுகளை இதன்போது கமலா ஹாரிஸ் சுட்டிக்காட்டியிருந்தார். பிரச்சார கூட்டத்தில் தொடர்ந்து பேசிய கமலா ஹாரிஸ் மிகவும் சக்தி

வாய்ந்தவர்களாகத் தோன்றும் சிலர் திறமையற்றவர்கள் என்பது அம்பலமாகியிருக்கிறது. மக்கள் தங்கள் மனதில் உள்ள கோபத்தை வாக்குச் சீட்டின் மூலம் வெளிப்படுத்த வேண்டிய தருணம் வந்து விட்டது என்றும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அமெரிக்கா விதித்துள்ள பல தசாப்த கால பொருளாதாரத் தடைக்கு எதிரான நிலைப்பாட்டைக் கனடா தொடர்ந்து பேண வேண்டும் என கியூபா கேட்டுக்கொண்டுள்ளது.

கியூபாவிற்கு ஆதரவளிக்கும் நாடுகளுக்கு அமெரிக்கா தனது அழுத்தங்களை அதிகரித்து வரும் பின்னணியில் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. கடந்த காலங்களைப் போலவே கனடா இப்போதும் எங்களுடன் நிற்கும் என நாங்கள் நம்புகிறோம்' என்று கனடாவுக்கான கியூபா தூதர் ரொட்ரிகோ மால்மியெர்கா டயஸ் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா விதித்துள்ள பொருளாதார, வர்த்தக மற்றும் நிதித் தடைகளை நீக்கக் கோரி 1992 முதல் ஒவ்வொரு ஆண்டும் கியூபாவினால் கொண்டு வரப்படும் தீர்மானத்தின் மீது ஐக்கிய நாடுகள் சபையில் அடுத்த வாரம் வாக்கெடுப்பு நடைபெறவுள்ளது.

அமெரிக்காவின் அச்சுறுத்தல்கள் மற்றும் அழுத்தங்களுக்கு மத்தியிலும், நாட்டின் சுதந்திரத்தையும் இறையாண்மையையும் ஒரு போதும் விட்டுக்கொடுக்கப் போவதில்லை என்றார்

கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: 416.439.0224, Cell: 416.450.5011

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com

EELANADU

203 Gardiner Dr
Bradford - ON
L3Z 0J5 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

1 SANKAR INTERNATIONAL
2425 EGLINTON AVE EAST
(EGLINTON / KENNEDY)

2 NEW OCEAN SUPER MARKET
5635 FINCH Ave
(MARKHAM / FINCH Ave)

3 AGP MART
4A WADE AVE
TORONTO

4 KALAIMAHAL BOOK DEPOT
595 PARLIAMENT ST
TORONTO

5 UTHAYA SUPER MARKET
5010 STEELES AVE WEST
ETOBICOKE

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகை யிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.

கனடாவாழ் கருணையாளர்களின் கவனத்திற்கு!

என் இனிய உறவுகளே! கனடாவாழ் கருணையாளர்களே! முல்லைத்தீவு பிராந்தியத்தில் அமைந்துள்ள பாரதி இல்லம், கிளிநொச்சியில் அமைந்துள்ள அன்பு இல்லம் மற்றும் செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இல்லங் களில் வாழும் குழந்தைகளது உணவுத் தேவையை கடந்த 14 ஆண்டுகளாக தங்கு தடையின்றி நிறைவேற்றி வந்தவர்கள் நீங்கள்.

தற்போதைய பொருளாதார நெருக்கடிகள், வீட்டு அடமான வட்டி வீத அதிகரிப்புக்கள் போன்ற பல்வேறு நெருக்கடிகள் காரணமாக இந்தக் குழந்தைகளுக்கான உதவிகள் குறைந்துள்ளது. இதனால் இக்குழந்தை களின் வாழ்வாதாரம், கல்வி, சுகாதாரம் என்று பல்வேறு நெருக்கடிகளை எதிர் கொள்ளும் நிலையேற்பட வாய்ப்புள்ளது என்பதால் ஒவ்வொரு தமிழரும் குறிப்பாக கனடியத் தமிழர்கள் இக் குழந்தைகளுக்காக வருடத்தில் ஒருநாள் வரும் உங்கள் பிறந்த நன்நாள்கள், திருமண நன்நாள்கள், உங்கள் குழந்தைகளின் பிறந்த நன்நாள்கள் மற்றும் உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இக்குழந்தைகளையும் நினைத்து ஒருநாள் உணவளிக்க முன்வாருங்கள்!

தர்மம் தலை காக்கும். கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் பார்க்க அன்னதானம் வழங்குவதிலும் பார்க்க உங்கள் பெயரால் பசியாறும் குழந்தைகளின் வாழ்த்துக்கள் உங்களை மட்டுமல்ல உங்கள் சந்ததி வாழ வைக்கும்.

நீங்கள் வழங்குகின்ற உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் உறுதிப்படுத்திக் கொள்ள eelanadu.ca என்ற மின்னிதழில் வெள்ளிக்கிழமை தோறும் பார்வையிடலாம். உங்கள் ஆதரவே இக்குழந்தைகளின் வாழ்வாதாரம்.

இலங்கை சிறுவர் நன்னடைத்தை மற்றும் பராமரிப்பு கண்காணிப்பு அதிகாரிகளின் அறிவுறுத்தலுக்கு அமைய குழந்தைகளின் புகைப்படங்கள் தவிர்க்கப்பட்டுள்ளன. மேலதிக விபரங்களுக்கும் தொடர்புகளுக்கும் ஈழநாடு பரமேஸ் 416 8419600 (கனடா) eelanadu1993 @gmail.cam என்ற மின்னஞ்சலில் தொடர்பு கொள்ளவும்.

ஸ்காபரோ - ரூஜ்பார்க் தொகுதி - சவுத்வெஸ்ட் தொகுதிகளில் நீதன் - பார்த்தி மீண்டும் வெற்றி!

டொராண்டோவில் அக்டோபர் 26ஆம் தேதி நடைபெற்ற மாநகராட்சித் தேர்த லில், ஸ்கார்பரோ ரூஜ் பார்க் (25ஆம் வட்டாரம்) தொகுதியில் தற்போதைய மாநகராட்சி உறுப்பினர் நீதன் ஷான் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

2025ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் நடைபெற்ற இடைத்தேர்தலில் வெற்றி பெற்று டொராண்டோ மாநகராட்சியில் இணைந்த நீதன் ஷான் தற்போது

மீண்டும் மக்களின் ஆதரவைப் பெற்றுள்ளார். நீதன் ஷான், முன்னதாக டொரா ண்டோ மாவட்டப் பாடசாலைச் சபை யின் தலைவராகவும் பணியாற்றியுள்ளார்.

இதே போன்று ஸ்காபரோ சவுத்வெஸ்ட் தொகுதியில் பார்த்தி கந்தவேள் அவர்கள் மீண்டும் வெற்றி பெற்றுள்ளார். இதே வேளை Ajax நகரில் திரு ரஞ்சித் பரணி வாசகம் அவர்கள் முதன்முறையாக வெற்றி பெற்றுள்ளார்.

இவை தவிர TDSB கல்விச்சபை உறுப்பினராக டாக்டர் அனு ஶ்ரீஸ்கந்த ராஜா அவர்கள் மீண்டும் தெரிவாகியுள் ளார். செல்வி ரவிச்சா ரவீந்திரன் அவர் கள் முதன்முறையாக TDSB கல்விச் சபை உறுப்பினராகத் தெரிவாகியுள்ளார். மொத்தம் 5 தமிழர்கள் இம்முறை தெரி வாகியுள்ளார். அனைவருக்கும் வாழ்த்து க்களும் பாராட்டுக்களும் உரித்தாகுக.

இது இவ்வாறிருக்க ஈழத்தமிழர்களின் இனிய நண்பர் பற்றிக் பிரவுண் 3வது முறையாக பிரம்டன் நகர முதல்வராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். தேர்தல் முடிவுகளின்படி 55வீதத்திற்கும் மேலான வாக்குகளைப் பெற்று அவர் வெற்றி பெற்றுள்ளார்.

பட்ரிக் பிரவுன் அவர்கள் தமிழீழத் தேசியக் கொடியை அங்கீகரித்ததும், தமிழின அழிப்பு நினைவுச் சின்னத்திற்கு ஆதரவு அளித்ததும், தமிழர்களின் அடையாளம், நினைவேந்தல் மற்றும் நீதிக்கான பயணத்தில் மிக முக்கியமான பங்களிப்புச் செய்தவர் என்பது குறிப்பிட த்தக்கது.

Balachandran Law Office

Balachandran Muthaiah
Barrister, Solicitor & Notary

குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்

2401 Eglinton Ave East, Suite 300
Toronto, Ontario M1K 2M5
416 755 5544



சிவப்பு பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 112 குற்றவாளிகள் 13 நாடுகளில் தலைமறைவு

சிவப்பு பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 112 குற்றவாளிகள் 13 நாடுகளில் தலைமறைவாக உள்ளமை கண்டறியப்பட்டுள்ளதாகவும் அந்த சந்தேக நபர்களை நாட்டிற்கு அழைத்து வருவதற்குத் தேவையான அவசர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் உதவிப் பொலிஸ் அத்தியட்சகருமான எஃப்.யு. வுட்லர் தெரிவித்தார்.

முழு நாடுமே ஒன்றாக தேசிய செயல்பாட்டின் முன்னேற்றம் குறித்து தெளிவுபடுத்துவதற்காக 29 ஒக்டோபர் 2026 நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதி பொதுப்பாதுகாப்பு அமைச்சர், பிரதி அமைச்சர் மற்றும் பொலிஸ்மா அதிபர் ஆகியோரின் நேரடி மேற்பார்வையின் கீழ், இந்த மூன்று ஆண்டுகளில் வெளிநாடுகளில் இருந்த சிவப்பு பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 68 சந்தேகநபர்களை நாட்டுக்கு கொண்டுவர முடிந்துள்ளது.

குற்றச் செயல்கள் மூலம் ஈட்டப்படும் சட்டவிரோத சொத்துக்கள் தொடர்பிலும் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதற்கமைய, 2024 ஆம் ஆண்டில் 1.490 மில்லியன் ரூபா, 2025 ஆம் ஆண்டில் 1.549 மில்லியன் ரூபா மற்றும் 2026 ஆம் ஆண்டின் இது வரையான காலகட்டத்தில் 1.656 மில்லியன் ரூபா பெறுமதியான தங்கம், காணி, வாகனங்கள் மற்றும் பணம் ஆகியவற்றை அரசுடமையாகுவதுக்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

மேலும் கடந்த மூன்று ஆண்டுகளில் 2.835 கிலோ ஹெரோயின், 3.550 கிலோ ஐஸ், 11.167 கிலோ கஞ்சா மற்றும்297 கிலோ கொக்கைன் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன. குறித்த குற்றவாளிகளை 2027 ஆம் ஆண்டிற்குள் நாட்டிற்கு அழைத்து வர முடியும் என்றும், அதன் பின்னர் அவர்களுக்கு எதிராக சட்டத்தை கடுமையாக அமுல்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இக்குற்றவாளிகள் போதைப்பொருள் கடத்தல் மூலமே சட்டவிரோதமாக பணம் சம்பாதிக்கின்றனர் எனச் சுட்டிக்காட்டிய பொலிஸ் ஊடகப் பேச்சாளர், அந்தச் சட்டவிரோதப் பணத்தில் ஈட்டப்பட்ட சொத்துக்கள் தொடர்பில் பொலிஸின் இரண்டு விசேட பிரிவுகள் ஊடாக 24 மணி நேரமும் விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

ஹரக்கட்டாவுக்கு பிணை வழங்க மறுப்பு

வெலிசறை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பிரபல போதைப் பொருள் கடத்தல்காரர் எனக் கூறப்படும் ஹரக் கட்டா என்ற நதுன் சிந்தக விக்ரமரத்ன உள்ளிட்ட மூன்று பிரதிவாதிகளின் பிணை விண்ணப்பங்களையும், மேலும் இரண்டு பிரதிவாதிகளை விடுவிக்குமாறு அவர்களது சட்டத்தரணிகளால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளையும் கொழும்பு மேல் நீதிமன்றம் 29 ஒக் 2026 அன்று நிராகரித்துள்ளது. கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி புத்திக சி. ராகல இந்த உத்தரவைப் பிறப்பித்தார். தமது நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவுக்கு எதிராக சட்டமா அதிபரினால் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மேன்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் பிணை விண்ணப்பங்களைக் பரிசீலிக்க முடியாது என்றார்.

JOIN US FOR THE
Advancing Mental Health Equity for Tamil Communities
PARNERSHIP TOWN HALL

Saturday, October 31 1–3 p.m.
Scarborough Health Network–Centenary Hospital
Dr. Bruce Johnston Conference Room, 3rd floor
2867 Ellesmere Rd., Scarborough

Jaffna Medical Faculty Overseas Alumni Canada is hosting a town hall in partnership with Scarborough Health Network. This event brings together physicians, healthcare professionals serving Tamil communities, community organizations, and leaders to foster dialogue, strengthen connections, and advance mental health equity for Tamil communities.

Together, participants will explore opportunities to improve awareness, access, system navigation, and culturally responsive care.

WHAT TO EXPECT

- Presentation of a report created in partnership with Ontario Health that highlights current status, priorities, and next steps
- Perspectives from physicians, community leaders, and invited guests
- Moderated discussion and question period
- Informal networking reception with light refreshments

Register by Tuesday, October 27, 2026
Scan the QR code or visit tinyurl.com/tamil-mental-health
For questions or more information, please contact Dr. Sri Navaratnam at info@jmfoa.ca

SHN SCARBOROUGH HEALTH NETWORK | Love, Scarborough

பொது அழைப்பிதழ்

ஒன்ராறியோவில் தமிழ் சமூகத்திற்கான மனநல சமத்துவத்தை முன்னேற்றுதல் நகர மன்றம் (Town Hall) JMFOA Canada- Scarborough Health Network உடன் இணைந்து நடத்தும் இந்த நகர மன்ற நிகழ்வில் கலந்து கொள்ள அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

கடந்த ஒன்பது மாதங்களாக எமது சமூகத்துடன் மேற்கொள்ளப்பட்ட விரிவான கலந்துரையாடல்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட அறிக்கையின் முக்கிய கண்டு பிடிப்புகளும், மனநல சேவைகளை மேம்படுத்துவதற்கான செயலுக்கான அழைப்பும் இந்நிகழ்வில் வெளியிடப்படும். சுகாதாரத் தலைவர்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மற்றும் சமூக உறுப்பினர்கள் கலந்து கொண்டு கருத்துப் பரிமாற்றம் செய்வார்கள்.

நாள்: 2026 அக்டோபர் 31, சனிக்கிழமை நேரம்: பிற்பகல் 1:00 — 3:00

இடம்: Dr. Bruce Johnston Conference Room- 3rd floor- Scarborough Health Network – Centenary Hospital-- 2867 Ellesmere Rd.- Scarborough

இந்நிகழ்வு இலவசம் அனைவரும் வரவேற்கப்படுகிறீர்கள். இடங்கள் குறைவாக உள்ளதால் முன்கூட்டியே பதிவு செய்யவும்: tinyurl.com/tamil-mental-health

செம்மணி புதைகுழி அகழ்வு:- சர்வதேச நிபுணத்துவம் அவசியம் - சுமந்திரன் வலியுறுத்தல்

செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வு வேலைகள் மீண்டும் நடைபெறுகிற வேளையிலே, சர்வதேச நிபுணத்துவம் அங்கே கட்டாயம் இருக்க வேண்டும். இப்பொழுது ராஜ் சோமதேவவினால் கொடுக்கப்பட்ட இந்த அறிக்கை, அதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது என இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலாளரான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் 27 ஒக் 2026 செவ்வாய்க்கிழமை இலங்கை தமிழ் அரசுக் கட்சி மற்றும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி தலைவர்கள் சந்தித்து கலந்துரையாடிய பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போது சுமந்திரன் இதனை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்

செம்மணி அறிக்கை நாங்கள் முழுமையாகப் படித்து, அதற்கான ஒரு மறுப்பை கொடுக்க வேண்டும். ஏற்கனவே பேராசிரியர் ராஜ் சோமதேவா இரண்டு இடைக்கால அறிக்கை இதற்கு முதல் கொடுத்திருக்கிறார். இப்பொழுது கொடுக்கப்பட்டது மூன்றாவது இடைக்கால அறிக்கை.

முதல் கொடுத்த இரண்டு அறிக்கையிலும் 'மனிதப் புதைக்குழி' என்கின்ற பதம் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. குற்றச் செயல்கள் இடம் பெற்றதற்கான தடயங்கள் இருப்பதாக சொல்லியிருக்கிறார். ஆகவே, மூன்றாவது இந்த இடைக்கால அறிக்கையிலே, அதற்கு மாறுபட்ட கருத்தை அவர் சொல்லியிருப்பதை நாங்கள் அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. அதனை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது.

ஆனால், இதுவொரு இடைக்கால அறிக்கை. அதுவும் ஒரு தொல்லியல் நிபுணருடைய இடைக்கால அறிக்கை ஆகையினாலே நாங்கள் ஏற்கனவே சொன்னதைப் போல இந்த நிலையிலேயே சர்வதேச நிபுணத்துவம் தேவையாக இருக்கிறது. சர்வதேச மேற்பார்வை இல்லாமல், செய்யப்படுகிற இந்த அகழ்வாராய்ச்சியிலே, ஒருவர் இப்படியான ஒரு அறிக்கையைக் கொடுத்து விடுவது, மிகவும் ஒரு பாதிப்பை ஏற்படுத்துகிறது.

உண்மைத்தன்மை சந்தேகத்திற்குரியதாக இருக்கிறது. ஆகவே, திரும்பவும், இந்த அகழ்வு வேலைகள் நடைபெறுகிற வேளையிலேயே, சர்வதேச நிபுணத்துவம் அங்கே கட்டாயம் இருக்க வேண்டும். இப்பொழுது கொடுக்கப்பட்ட இந்த அறிக்கை, அதன் முக்கித்துவத்தையும் வலியுறுத்துகிறது.

ஆனால், அறிக்கையில் இருக்கிற முரண்பாடான கருத்துக்கள், அறிக்கையை நாங்கள் ஏற்றுக் கொள்ள முடியாத விடயங்கள் பல இருக்கின்றன. அது குறித்து, வருகிற நாட்களிலே நாங்கள் சில நடவடிக்கைகள் எடுப்போம். நான் ஏற்கனவே நீதிமன்றத்திலே ஆஜராகி இது சம்பந்தமான பல விடயங்களை முன் வைத்திருக்கிற காரணத்தினாலே, அடுத்த நீதிமன்றத் தவணையிலே அதனைச் செய்வதாக உத்தேசிக்கிறேன் என்றார்

வெற்றிக்குப் பின் டொரண்டோ மக்கள் குறித்து ஒலிவியா சோ பெருமிதம்!

கனடாவின் டொரண்டோ நகரின் முதல்வருக்கான தேர்தலில் கடும் போட்டி நிலவி வந்த நிலையில், ஒலிவியா செள தனது முதன்மைப் போட்டியாளரான நகர சபை உறுப்பினர் பிராட் பிராட்போர்டை வீழ்த்தி, மீண்டும் முதல்வராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

எளிய மற்றும் நடுத்தர மக்களின் வாழ்க்கைச் செலவுகளைக் குறைத்தல் என்ற விஞ்ஞாபனத்தை முதன்மையாகக் கொண்டு இவர் இந்த வெற்றியைப் பெற்றுள்ளார் என்பதும் சுட்டிக் காட்டத்தக்கது.

ஒலிவியா செள 54.2% அடிப்படையில் தோராயமாக 5,32,201 வாக்குகளும் பிராட் பிராட்போர்ட் 41.1% அடிப்படையில் தோராயமாக 4,04,013 வாக்குகளும் பெற்றனர்.

இதனடிப்படையில், 1,28,000க்கும் அதிகமான வாக்குகள் வித்தியாசத்தில் ஒலிவியா செள மாபெரும் வெற்றி பெற்றுள்ளார். வெற்றிக் கொண்டாடத்தின் பின், ஒலிவியா செள கருத்து தெரிவிக்கையில்,

டொராண்டோ மக்கள் தங்கள் முடிவை அறிவித்து விட்டார்கள். எனக்கு வாக்களித்தவர்கள், வாக்களிக்காதவர்கள், வாக்களிக்கும் உரிமை இல்லாதவர்கள் என டொராண்டோவைத் தங்கள் இல்லமாகக் கொண்டு உழைக்கும் ஒவ்வொருவருக்கும் நான் கூறுகிறேன். நானும் உங்களுக்கான முதல்வர் தான் என நெகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

தோல்வியை ஒப்புக் கொண்ட பிராட் பிராட்போர்ட், ஒலிவியா செளவுக்குத் தொலைபேசியில் வாழ்த்துத் தெரிவித்ததுடன் மக்களின் தீர்ப்பை ஏற்றுக் கொள்வதாகவும் கூறினார்.

பசில் ராஜபக்ஷவுக்கு பிடியாணை!

மாத்தறை, பிரவுன்ஸ் ஹில் பகுதியில் அமைந்துள்ள ஒன்றரை ஏக்கர் காணியை நிதி தூய்தாக்கல் மூலம் கொள்முதல் செய்தார் என்ற வழக்கு தொடர்பாக முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷவைக் கைது செய்வதற்கு மாத்தறை நீதவான் நீதிமன்றம் திறந்த பிடியாணை பிறப்பித்துள்ளது.

நிதி குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மாத்தறை நீதவான் நீதிமன்றத்தில் சமர்ப்பித்த விரிவான விசாரணை அறிக்கையை அடுத்தே இந்த திறந்த பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. சட்டபூர்வமான வருமான ஆதாரங்களை நிரூபிக்கத் தவறியதை அடுத்து, குறித்த பிரவுன்ஸ் ஹில் காணியின் பயன்பாட்டை முடக்கி மாத்தறை மேல் நீதிமன்றம் அண்மையில் உத்தரவிட்டிருந்தது. தொடர்ச்சியாக நீதிமன்றத்தில் முன்னிலையாகத் தவறியதைத் தொடர்ந்து, முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷவுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகளை நிதி குற்றப் புலனாய்வுப் பிரிவு தீவிரப்படுத்தியுள்ளது.

24 குற்றச்சாட்டுக்கள் - 59 சாட்சிகள் மூவரடங்கிய மேல் நீதிமன்றத்தில் நாமல்

சர்ச்சைக்குரிய எயார்பஸ் விமானக் கொள்வனவு விவகாரத்தில், நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்சவுக்கு எதிராக நீதிமன்றம் முக்கிய உத்தரவொன்றைப் பிறப்பித்துள்ளது. 100 மில்லியன் ரூபாய் கையூட்டல் பெற்றதாகவும் சட்ட விரோத பணப் பரிமாற்றத்தில் ஈடுபட்டதாகவும் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் தொடர்பில் நாமல் ராஜபக்ச தற்போது விளக்கமறியலில் வைக்க ப்பட்டுள்ளார். இந்த வழக்கில் நாமல் ராஜபக்ச உள்ளிட்ட நால்வருக்கு எதிராக 24 குற்றச்சாட்டுகளின் கீழ் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் வழக்கில் 59 சாட்சிகள் பட்டியலிடப்பட்டுள்ளதாக பிரதி சொலிசிட்டர் ஜெனரல் ஜனக பண்டார நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளார். இந்நிலையில், 28 ஒக் 2026 புதன்கிழமை கொழும்பு நிரந்தர மூவரடங்கிய மேல் நீதிமன்ற நீதிபதிகள் குழாம் முன்னிலையில் நாமல் ராஜபக்ச ஆஜர் படுத்தப்பட்டார். இதன்போது விளக்கமறியலை நவம்பர் மாதம் 19ஆம் திகதி வரை நீடிக்க நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஈழத்தமிழர் சமூகத்தில் கமரா இருந்தால் ஊடகவியலாளரா?

ஈழத்தமிழர் சமூகத்தில் ஒருகாலத்தில் பத்திரிகையாளர் சந்திப்பு என்ற சொல்லுக்கு பெரும் மதிப்பும் மரியாதையும் இருந்தது. பின்னர் வானொலி, தொலைக்காட்சி வளர்ச்சியுடன் அது செய்தியாளர் சந்திப்பு ஆனது. இன்று சமூக ஊடகங்களின் காலத்தில் கையில் கமராவும் கைத்தொலைபேசியும் வைத்திருக்கும் எவரையும் ஊடகவியலாளர் என்று அழைக்கும் நிலைக்கு நாம் வந்து விட்டோம். இது ஊடக வளர்ச்சியா? அல்லது ஊடகத்தின் தரம் வீழ்ச்சியடைவதற்கான அறிகுறியா? என்பதை நாம் ஆழமானப் பார்க்க வேண்டும்.

இன்று ஈழத்தமிழர் சமூகத்தில் ஒரு Facebook பக்கம் வைத்திருப்பவர், ஒரு YouTube சேனல் நடத்துபவர், நிகழ்ச்சிகளைப் பதிவு செய்து வெளியிடுபவர் எனப் பலரும் மீடியா என்ற பெயரில் அழைக்கப்படுகின்றனர். ஆனால் ஒரு கேள்விக்கு மட்டும் பதில் இல்லை. ஊடகவியலாளருக்குரிய பொறுப்பு அவர்களிடம் இருக்கிறதா?

ஊடகம் என்பது கமரா அல்ல! ஊடகம் என்பது போன் அல்ல! ஊடகம் என்பது Facebook Live அல்ல. ஊடகம் என்பது உண்மையைத் தேடும் பொறுப்பு.

செய்தியைச் சரி பார்ப்பது, இரு தரப்பையும் கேட்பது, அதிகாரத்திடம் கேள்வி கேட்பது, தவறான செய்தியைத் திருத்துவது இவையே ஊடகத்தின் அடிப்படைகள். இவை இல்லாமல் கையில் கமராவைத் தூக்கிக் கொண்டு நிகழ்ச்சிகளுக்கு வருபவர்களை எல்லாம் ஊடகவியலாளர்கள் என்று அழைப்பது, பல ஆண்டுகளாக ஈழத்தமிழர் சமூகத்தில் உண்மையான ஊடகப் பணியைச் செய்து வருபவர்களின் உழைப்பையும் மரியாதையையும் கேள்விக்குள்ளாக்குகிறது.

ஆனால் குற்றம் கமராவுடன் வருபவர்களிடம் மட்டும் இல்லை. அவர்களை அழைக்கும் நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களிடமும் இருக்கிறது. இன்று ஈழத்தமிழர் சமூகத்தில் பல நிகழ்ச்சிகளுக்கு ஊடக அழைப்பு என்ற பெயரில் யார் வேண்டுமானாலும் அழைக்கப்படுகின்றனர். அப்படியானால் அது ஊடகச் சந்திப்பா? அல்லது இலவச விளம்பரச் சந்திப்பா? ஒரு உண்மையான செய்தியாளர் சந்திப்பில் கமராக்கள் மட்டும் இருக்கக் கூடாது. புகழ்ந்து பேசுவதற்காக மட்டும் ஊடகம் இருக்க முடியாது. இன்று ஈழத்தமிழர் சமூகத்தில் அரசியல் கட்சிகள், சமூக அமைப்புகள், வர்த்தக நிறுவனங்கள், ஆலயங்கள், பொது அமைப்புகள் என பலரும் ஊடகச் சந்திப்புகளை நடத்துகின்றனர்.

Facebookல் போடுவார். YouTubeல் போடுவார். எங்கள் நிகழ்ச்சி அதிகம் பேரைச் சென்றடையும் என்ற ஒரே காரணத்திற்காக அழைக்கப்படுகின்றார்கள். அவர்கள் எப்படி நடந்து கொள்கின்றார்கள்? அண்மையில் நடந்த மாபெரும் தமிழ்விழா நிகழ்வில் இரண்டு கமராக்காரர்கள் குடி வெறியில் மோதிக் கொண்டனர். தூசனா பூஷணமாக மாறினர். காவலாளிகள் கைத்தாங்கலாகத் தூக்கிக் கொண்டு போய் வாகனத்தில் ஏற்றிக் கலைத்து விட்டுள்ளனர்.

விழா அமைப்பாளர்களிடம் ஒரு வேண்டுகோள் என்னவென்றால் ஊடகம் என்ற பெயரில் யாரையும் அழைக்க வேண்டாம். யார் செய்தியாளராக வருகிறார் என்பதை அறியுங்கள். அவர் எந்த ஊடகத்தை பிரதிநிதித்துவப்படுத்துகிறார் என்பதை அறியுங்கள். அவர் செய்திகளை வெளியிடுகிறாரா அல்லது வெறும் நிகழ்ச்சி காணொளிகளைப் பதிவிடுகிறாரா என்பதைப் பாருங்கள். கமராவை ஊடகமாக நினைக்காதீர்கள். கமராவை வைத்திருப்பவரை ஊடகவியலாளராக அழைக்காதீர்கள்.

சமூக ஊடகங்களை நாம் எதிர்க்கவில்லை. அவை இன்றைய காலத்தின் வலிமையான தகவல் சாதனங்கள். ஆனால் சமூக ஊடகத்தில் இருப்பது மட்டும் ஒருவரை ஊடகவியலாளராக மாற்றி விடாது. எனவே ஈழத்தமிழர் சமூகத்தில் இனிமேல் ஊடகச் சந்திப்பு நடத்துபவர்கள் ஒரு கேள்வியைத் நீங்களே கேட்க வேண்டும்:

நாம் ஊடகவியலாளர்களை அழைக்கிறோமா? அல்லது கமராக்களை அழைக்கிறோமா? கமரா செய்தியைப் பதிவு செய்யும். ஆனால் உண்மையைத் தேடுவது ஊடகவியலாளர். இந்த இரண்டையும் ஒன்றாகக் கருதும் நிலை தொடர்ந்தால், நாளை உண்மையான ஊடகவியலாளருக்கும் வெறும் கமரா வைத்திருப்பவருக்கும் இடையிலான வித்தியாசமே தெரியாமல் போய்விடும்.

ஈழத்தமிழர் சமூகத்திற்கு இன்று தேவை அதிகமான மீடியாக்கள் அல்ல. அதிகமான பொறுப்புள்ள ஊடகவியலாளர்கள். கமராவை எண்ணாதீர்கள். நம்பகத்தன்மையை எண்ணுங்கள். பார்வையாளர்களின் எண்ணிக்கையை எண்ணாதீர்கள். மக்களின் நம்பிக்கையை எண்ணுங்கள்.

இந்தியாவில் இருந்து நாடு கடத்தப்பட்ட புலி உறுப்பினர் கொழும்பில் கைது!

இந்தியாவிலிருந்து இலங்கைக்கு நாடு கடத்தப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர் ஒருவரைக் கைது செய்து விசாரணைகளை முன்னெடுப்பதற்குப் பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவு நடவடிக்கை எடுத்துள்ளது.

கடந்த 2015 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் அமைப்பை மீண்டும் மீள கட்டியெழுப்ப முயன்ற குற்றச்சாட்டில் இந்திய பாதுகாப்புப் படையினரால் இவர் கைது செய்யப்பட்டார். அங்கு நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை செய்யப்பட்டு குற்றவாளியாக நிரூபிக்கப்பட்டதை அடுத்து அவருக்கு 10 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. குறித்த சிறைத்தண்டனை நிறைவடைந்த நிலையில் அவரை இலங்கைக்கு நாடுகடத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இதற்கமைய, கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை அவர் சென்றடைந்தார். இதன் போது அங்கு தயார் நிலையில் இருந்த பொலிஸ் பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவின் உத்தி யோகத்தர்கள் குழுவினால் அவர் கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்ட சந்தேகநபர் யாழ்ப் பாணம் – சண்டிலிப்பாய் பிரதேசத்தைச் சேர்ந்த 50 வயதுடைய ஒருவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் தொடர்பாக உளவுப் பிரிவினரால் வழங்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் மேலதிக விசாரணை களை முன்னெடுப்பதற்காக 72 மணிநேர தடுப்புக் காவல் உத்தரவு பெறப்பட்டுள்ளது. பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மனித உரிமைகளைப் பாதிக்கும் சட்ட மூலம்:- அரசாங்கத்திற்கு சர்வதேச மன்னிப்புச்சபை எச்சரிக்கை

முன்மொழியப்பட்ட ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களைத் தடுக்கும் சட்டமூலத்தை உடனடியாகத் திரும்பப் பெறுமாறு இலங்கை அரசாங்கத்திற்கு சர்வதேச மன்னிப்புச் சபை (Amnesty International) அழைப்பு விடுத்துள்ளதுடன், அது அதிகாரிகளுக்கு வரம்பற்ற அதிகாரங்களை வழங்கி அடிப்படை மனித உரிமைகளைப் பலவீனப்படுத்தும் என்றும் எச்சரித்துள்ளது.

செவ்வாய்க்கிழமை (27) வெளியிடப்பட்ட அறிக்கையொன்றில், முன்மொழியப்பட்ட சட்டமூலத்தை தேசிய மக்கள் சக்தி (NPP) அரசாங்கம் கொண்டு வந்த சட்டங்களிலேயே மிகவும் கவலைக்குரிய சட்டங்களில் ஒன்றாக இந்த சர்வதேச மனித உரிமைகள் அமைப்பு விவரித்துள்ளது.

இந்த சட்டமூலத்தின் கீழ் சந்தேக நபர்களை விசாரணை இன்றி இரண்டு ஆண்டுகள் வரை சிறை வைக்க முடியும் என்றும், மூத்த பொலிஸ் அதிகாரிகளிடம் பெறப்பட்ட வாக்குமூலங்களை நீதிமன்றத்தில் ஆதாரமாகப் பயன்படுத்த அனுமதிக்க முடியும் என்றும், நீதிமன்ற நடவடிக்கைகள் குறித்த ஊடகச் செய்திகளுக்குக் கட்டுப்பாடு விதிக்க முடியும் என்றும் சர்வதேச மன்னிப்புச் சபை எச்சரித்துள்ளது. மேலும், நீதிமன்ற உத்தரவு ஏதுமின்றி காவல்துறை சோதனைகளை மேற்கொள்ளவும், தொலைபேசி பதிவுகள், சந்தாதாரர் விவரங்கள் மற்றும் சாதனத்தின் இருப்பிடத் தரவுகள் உள்ளிட்ட தனிப்பட்ட தகவல்களைப் பெறவும் அனுமதிக்கும் விதிகள் குறித்து இது கவலைகளை எழுப்பியது.

முன் மொழியப்பட்ட இந்தச் சட்டமூலம் இலங்கையின் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் (PTA) கீழ் முன்னதாக தன்னிச்சையான தடுப்புக்காவல், சித்திரவதை மற்றும் பிற மனித உரிமை மீறல்களுக்கு வழிவகுத்த சூழல்களை மீண்டும் உருவாக்கக்கூடும் என்று அந்த அமைப்பு எச்சரித்துள்ளது.

சர்வதேச மன்னிப்புச் சபையின் கூற்றுப்படி இந்தச் சட்டமூலத்தின்படி சந்தேக நபர்கள் மீது குற்றம் சாட்டுவதற்கு முன்பு ஓராண்டு வரையிலும் அதனைத் தொடர்ந்து மேலும் ஓராண்டு வரையிலும் விசாரணைக்கு முந்தைய தடுப்புக்காவலில் வைக்க அனுமதிக்கப்படுவார்கள். ஒரு நபர் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் குழுவைச் சேர்ந்தவரா என்பதைத் தீர்மானிக்கும் போது நீதிமன்றங்கள் அந்த நபரின் உடை, பச்சை குத்தல்கள், கை சைகைகள், மொழி, அவர் கொண்ட தொடர்புகள் மற்றும் அவர் சென்ற இடங்கள் ஆகியவற்றைக் கருத்தில் கொள்ளக்கூடும் என்பது குறித்து அந்த அமைப்பு கவலை தெரிவித்தது.

இத்தகைய விதிகள் பாரபட்சமான ஆள் அடையாளப்படுத்தலை ஊக்குவித்து, நியாயமான விசாரணைக்கான உரிமையைக் குலைக்கக்கூடும் என்று சர்வதேச மன்னிப்புச் சபை எச்சரித்தது.

உதவிப் பொலிஸ் அத்தியட்சர் பதவிக்கு மேலான பொலிஸ் அதிகாரிகளிடம் அளிக்கப்பட்ட வாக்குமூலங்களை ஆதாரமாக ஏற்றுக்கொள்ள அனுமதிக்கும் விதிகள் மற்றொரு முக்கிய கவலையாக உள்ளது.

முன் மொழியப்பட்ட இந்தச் சட்டமூலம், சித்திரவதை அல்லது பிற கொடுமைகள் நிகழ்ந்தன என்பதை நிரூபிக்கும் சுமையை குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீது சுமத்தும் என்று அந்த அமைப்பு கூறியது. மேலும், தனிநபர்கள் காவல்துறைக்குத் தகவல் அளிக்க வேண்டும் என்ற விதிகளையும் சர்வதேச மன்னிப்புச் சபை விமர்சித்தது அவ்வாறு செய்யத் தவறினால், ஏழு ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை அல்லது ரூ. 200,000 அபராதம் விதிக்கப்படும்.

நீதிமன்ற மேற்பார்வையின்றி தொலைத்தொடர்பு மற்றும் டிஜிட்டல் பதிவுகளை அணுகுவது, பத்திரிகையாளர்களின் தகவலாளர்கள், வழக்கறிஞர்களின் தகவல்தொடர்புகள் மற்றும் சட்டப்பூர்வமான போராட்டங்களை ஏற்பாடு செய்பவர்களைக் கண்காணிப்புக்கு உள்ளாக்கக்கூடும் என்று அந்த அமைப்பு எச்சரித்தது.

சட்டத்தை முழுமையாகத் திரும்பப் பெற்றுக்கொண்டு, அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்கும் அதே வேளையில் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களை எதிர்த்துப் போராடுவதற்கான நடவடிக்கைகள் குறித்து அர்த்தமுள்ள பொது ஆலோசனைகளைத் தொடங்குமாறும் சர்வதேச மன்னிப்புச் சபை அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் இலங்கை சட்ட வல்லுநர்கள் சங்கம் ஆகிய இரண்டும் முன் மொழியப்பட்ட சட்டத்தைத் திரும்பப் பெறுமாறு அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ள நிலையில், அவை எழுப்பிய இதே போன்ற கவலைகளைத் தொடர்ந்து இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் குழுக்களுக்கு எதிரான முயற்சிகளை வலுப்படுத்தவும், கடுமையான குற்றங்களை எதிர்த்துப் போராடுவதில் சர்வதேச ஒத்துழைப்பை ஆதரிக்கவும் முன்மொழியப்பட்ட சட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது என்று அரசாங்கம் கூறி வருகிறது.

இந்த சட்டமூலம் ஒக்டோபர் 6 அன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டு, ஒக்டோபர் 20 அன்று நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. அங்கு அது முதல் வாசிப்பு நிலையில் உள்ளது.

SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION

Vivekananthan Sasitharan
Barrister, Solicitor & Notary Public

Rajabalini Sasitharan
Barrister, Solicitor & Notary Public

Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

Family Law
- Divorce
- Custody & Support

Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases

Sasitharan Law Professional Corporation
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

சிறைக்கைதிகளான மதத் தலைவர்களின் மத உடைகள் தொடர்பான புதிய விதிகள்!

இலங்கையில் சிறைகளில் அடைக்கப்படும் பௌத்த துறவிகள் குறிப்பிட்ட நிபந்தனைகளின் கீழ் தங்களுடைய காவி உடையை அணிய அனுமதிக்கும் புதிய விதிமுறைகளை அறிமுகப் படுத்தி அரசாங்கம் விசேட வர்த்தமானி அறிவித்தல் ஒன்றை வெளியிட்டுள்ளது.

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரின் ஒப்புதலுடன், சிறைச் சாலைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் (அத்தியாயம் 54) சிறைச்சாலை திணைக்களத்தின் நிலையியல் கட்டளைகளைத்திருத்தி செவ்வாய்க்கிழமை (20) திகதியிடப்பட்ட இந்த வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

புதிய விதிமுறைகளின்படி, பௌத்த துறவி ஒருவர் சிறையில் அடைக்கப்படும் போது, சிறைச்சாலை சேர்க்கையின் போது அவருடைய காவி உடையை அகற்றுவது தொடர்பில் சிறைச்சாலைகள் ஆணையாளர், பௌத்த விவகாரத் திணைக்களத்துடன் கலந்தாலோசிக்க வேண்டும் என கூறப்பட்டுள்ளது.

பௌத்த விவகாரத் திணைக்களம் இது குறித்து உரிய நிகாயா (பிரிவு) அல்லது மகா சங்கத்திற்குத் தெரிவித்து, தனது தீர்மானத்தை 10 நாட்களுக்குள் சிறைச்சாலைகள் ஆணையாளருக்குத் தெரிவிக்க வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அக்காலப்பகுதிக்குள் எவ்வித பதிலும் கிடைக்கப் பெறாவிடின், சிறைச்சாலைகள் ஆணையாளர் உரிய விதிமுறைகளின்படி தேவையான நடவடிக்கைகளை எடுக்கலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தத் திருத்தங்கள், சிறையில் அடைக்கப்பட்ட பௌத்த துறவிகள் ஒரு கைதியாக சிறைச்சாலைக்கு வெளியே அழைத்துச் செல்லப்படும்போது தங்களுடைய காவி உடையை அணியவும் அனுமதி அளிக்கின்றன.

இருப்பினும், குறித்த துறவி காவி உடை அணிவதற்கு உரிய நிகாயா (பிரிவு) அனுமதி அளிக்கவில்லை எனில், சிறைச்சாலைகள் ஆணையாளர் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் சிறையில் அடைக்கப்பட்ட ஏழு வேலை நாட்களுக்குள் உரிய நிகாயாவிடமிருந்து தேவையான அனுமதியைப் பெறுமாறு சிறைச்சாலைகள் ஆணையாளர் பௌத்த விவகாரத் திணைக்களத்தைக் கேட்டுக்கொள்ள வேண்டும்.

தேவையான மாற்றங்களுடன், இந்த விதிமுறைகள் பிற மதங்களின் குருமார்களுக்கும் பொருந்தும் என அந்த வர்த்தமானியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சிறையில் அடைக்கப்பட்ட பௌத்த துறவிகளை நடத்தும் விதம் மற்றும் காவலில் இருக்கும் போது அவர்கள் மத உடைகளை அணிய அனுமதிக்கப்பட வேண்டுமா என்பது குறித்து பொதுமக்கள் மத்தியில் விவாதம் நடைபெற்று வரும் நிலையில் இந்த புதிய விதிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

செம்மணி அகழ்வு ஆய்வுகளும் வெளிப்படைத் தன்மையின் அவசியமும்

யாழ்ப்பாணம் செம்மணி புதைகுழி அகழ்வாராய்ச்சி தொடர்பில் தொல்பொருளியல் பேராசிரியர் ராஜ் சோமதேவினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இடைக்கால அறிக்கைகள் தொடர்பில் பல்வேறு தரப்பினராலும் கருத்துகளும் ஆட்சேபனைகளும் முன் வைக்கப்பட்டு வருகின்றன.

நீதிமன்ற நடவடிக்கைகளுக்கும் நீதித்துறைசார் விசாரணைகளுக்கும் எவ்வித இடையூறும் இன்றி, உண்மைகள் துல்லியமாக வெளிவர வேண்டும் என்பதே அனைத்துத் தரப்பினரதும் எதிர்பார்ப்பாக உள்ளது.

அண்மையில் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் சார்பில் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள நகர்த்தல் பத்திரத்தில், சோமதேவவின் இடைக்கால அறிக்கையை நிராகரிக்க வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. முந்தைய அறிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட 'மனிதப் புதைகுழி' என்ற பதம் தற்போதைய இடைக்கால அறிக்கையில் தவிர்க்கப்பட்டிருப்பதாகவும், இது ஆய்வின் துல்லியத்தன்மையை பாதிக்கும் என்றும் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

அதேபோன்று, பாராளுமன்றத்திலும் இது குறித்த விவாதங்கள் எதிரொலித்துள்ளன. அகழ்வு ஆய்வுகள் தொடர்பான அறிக்கைகளில் முரண்பாடுகள் காணப்படுவதாகவும் சர்வதேச நிபுணர்களின் பங்களிப்புடன் முறையான முழுமையான ஆய்வுகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும் பாராளுமன்ற உறுப்பினர் இலங்கை தமிழரசு கட்சியின் உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் வலியுறுத்தியுள்ளார்.

மேலும், அகழ்வாராய்ச்சி அறிக்கை மற்றும் செம்மணி புதைகுழி விவகாரம் குறித்து பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் தனது கவலைகளையும் கருத்துகளையும் வெளிப்படுத்தி, இந்த விவகாரத்தில் முழுமையான வெளிப்படைத் தன்மையும் சர்வதேசத்தின் தலையீட்டு அவசியம் என்பதை வலியுறுத்தியுள்ளார்.

மறுபுறம், அரசாங்கத் தரப்பில் அமைச்சர் பிமால் ரத்நாயக்க சபையில் கருத்துத் தெரிவிக்கையில், செம்மணி அகழ்வுப் பணிகள் மற்றும் தற்போதைய நிலைவரங்கள் தொடர்பாக ஏதேனும் சந்தேகங்கள் அல்லது பிரச்சினைகள் இருப்பின், அது குறித்து கலந்துரையாடத் தயார் எனத் தெரிவித்துள்ளார்.

தற்போது இந்த விடயம் நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருப்பதனால், நீதிமன்றத்தின் சுயாதீனமான முடிவுகளுக்கும் நீதிசார் வழிமுறைகளுக்கும் முழுமையான மதிப்பை அளிக்க வேண்டியது அனைவரினதும் கடமையாகும். அதே வேளை, பாதிக்கப்பட்ட குடும்பங்களின் நியாயமான சந்தேகங்களைத் தீர்ப்பதற்கும், உண்மைகளைக் கண்டறிவதற்கும் தேவையான அனைத்து தொழில் நுட்ப மற்றும் அறிவியல்சார் வெளிப்படைத்தன்மையை உறுதிப்படுத் துவது அவசியமானதாகும்.

பிரபல சமையல் கலைஞர் தாமு காலமானார்!

பிரபல சமையல் கலைஞர், செப் தாமு உடல்நலக் குறைவால் தமது 72 வயதில் காலமானார். கடந்த ஒரு வாரமாகவே உடல்நலம் பாதிக்கப்பட்டு சென்னையில் உள்ள தனியார் வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வந்த அவர் 25 ஒக்டோபர் 2026 காலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

தாமோதரன் எனும் இயற்பெயர் கொண்ட தாமு, சமையல் கலையில் கைதேர்ந்தவர். இந்தியா முழுக்க பல்வேறு ஸ்டார் ஓட்டல்களில் பணியாற்றி உள்ளார். உலகின் பலவகையான உணவுகளையும் சமைத்து அசத்தி உள்ளார்.

2010ம் ஆண்டில் தொடர்ந்து 24 மணி நேரம் 30 நிமிடங்கள் 12 வினாடிகளில் 617 விதமான உணவு வகைகளை சமைத்து கின்னஸ் உலக சாதனை படைத்துள்ளார்.

2004ல் சென்னை பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட உணவக மேலாண்மை மற்றும் சமையல் கலைத் தொழில் நுட்பத்தில் முனைவர் பட்டம் பெற்ற முதல் இந்தியச் சமையல்காரர் என்ற பெருமையையும் பெற்றார்.

சமையல் கலையில் இவர் ஆற்றிய சிறப்பான பங்களிப்பை கவுரவிக்கும் விதமாக மத்திய அரசு இவருக்கு பத்மஸ்ரீ விருது வழங்கி கௌரவித்தது.

சமையல் தாண்டி சமையல் நிகழ்ச்சியிலும் நடுவராக பங்கேற்றுள்ளார். தவிர சமையல் நிகழ்ச்சியையே கலகலப்பாக வழங்கும் விஜய் டிவியின் 'குக் வித் கோமாளி" நிகழ்ச்சியின் முதன்மை நடுவராகவும் திகழ்ந்தார். இதன்மூலம் மக்கள் மத்தியில் இன்னும் பிரபலமானார். 'கள்ளப்படம், ஒரு பக்க கதை" உள்ளிட்ட ஓரிரு படங்களிலும், வெப்தொடர் ஒன்றிலும் நடித்துள்ளார்.

அவரது மறைவுக்கு திரையுலகினர், சமையல் கலைஞர்கள் உள்பட பல்வேறு தரப்பினர் தங்களது இரங்கலை தெரிவித்தனர்..

CIAவுடன் சேருங்கள்! கியூபா மக்களை வலியுறுத்தும் மார்க்கோ ரூபியோ



கியூபாவில் ஆட்சி மாற்றத்தை விரும்பும் மக்கள், அமெரிக்காவின் மத்திய உளவு அமைப்பான சிஐஏவுடன் இரகசியமாக இணைந்து செயல்படுமாறு அமெரிக்க வெளியுறவு அமைச்சர் மார்கோ ரூபியோ வலியுறுத்தியுள்ளார்.

கியூபாவின் கம்யூனிஸ்ட் அரசுக்கு எதிராக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் தலைமையிலான நிர்வாகம் பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது. இந்த நிலையில், மார்கோ ரூபியோ 24 ஒக் 2026 இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

கியூபாவில் மாற்றத்தை ஏற்படுத்த விரும்புவோருக்கு இதுவே சரியான தருணம் எனக் குறிப்பிட்டுள்ள அவர், நிறைவேற்றப்படாத வாக்குறுதிகள், ஊழல் மற்றும் ஒரு சிலருக்கே கிடைக்கும் சலுகைகள் காரணமாக ஏற்பட்டுள்ள அதிருப்தியைப் பயன்படுத்தி, சிஐஏவுடன் ரகசியமாக இணைந்து தாங்கள் விரும்பும் மாற்றத்தை உருவாக்குமாறும் அழைப்பு விடுத்துள்ளார்.

அதேவேளை ஏற்கனவே, கியூபாவுக்கு எதிராக எரிசக்தி கட்டுப்பாடுகளை விதித்துள்ள அமெரிக்கா, அந்நாட்டுக்குக் கச்சா எண்ணெயைக் கொண்டு செல்லும் கப்பல்களைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதன் காரணமாக கியூபாவில் மின்சாரம் மற்றும் எரிசக்தி உள்ளிட்ட அத்தியாவசியத் தேவைகளுக்கான தட்டுப்பாடு அதிகரித்துள்ளதாகக் கூறப்படுகிறது

ஈரானைத் தொடர்ந்து கியூபாவுக்கு எதிராகவும் கடற்படைக் கப்பல்கள் மூலம் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படலாம் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இடைத்தேர்தல் அச்சம் காரணமாக கனடிய பொருட்கள் மீது விதிக்கப்பட்ட வரியை 50 வீதமாகத் தளர்த்தும் ட்ரம்ப்!

கனடாவின் சில பொருட்கள் மீது விதிக்கப்பட்டிருந்த 50 சதவீத இறக்குமதி வரியைத் தளர்த்த ட்ரம்ப் நிர்வாகம் தீர்மானித்துள்ளது. வெள்ளை மாளிகையின் அறிவிப்பின்படி எதிர்வரும் 30ஆம் திகதி முதல் ஒட்டு மரப்பலகைகள், காகிதப் பொருட்கள், சில வகை இயந்திரங்கள் மற்றும் குளிரூட்டும் உபகரணங்கள் உள்ளிட்ட பொருட்கள் மீதான இறக்குமதி வரிகள் குறைக்கப்படவுள்ளன.

அமெரிக்காவின் மைனே மாநிலத்தில் நடைபெறவுள்ள கடுமையான போட்டி நிறைந்த செனட் தேர்தலில் மீண்டும் வெற்றிபெறப் போட்டியிடும் குடியரசுக் கட்சி செனட்டர் சூசன் கொலின்ஸ், தாம் விடுத்த கோரிக்கைக்கு அமைய இந்த வரிச் சலுகை வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். இதன் மூலம் தனது மாநிலத்தின் விவசாயத் துறைக்கு குறிப்பிடத்தக்க நிவாரணம் கிடைக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஆகஸ்ட் மாதம் அமெரிக்காவுக்கும் கனடாவுக்கும் இடையிலான வர்த்தகப் பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து, சுமார் 20 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான கனேடியப் பொருட்களுக்கு அமெரிக்கா 50 சதவீத இறக்குமதி வரியை விதித்திருந்தது.

அதற்குப் பதிலடியாக, கனேடியப் பிரதமர் மார்க் கார்னி தலைமையிலான அரசாங்கமும் அமெரிக்கப் பொருட்கள் மீது பதில் வரிகளை விதித்தது.

இந்தநிலையில் அமெரிக்க இடைக் காலத் தேர்தலில் காங்கிரஸின் கட்டுப்பாடு குடியரசுக் கட்சியிடமா அல்லது ஜனநாயகக் கட்சியிடமா என்பது, ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் அடுத்த இரண்டு ஆண்டுகால ஆட்சியின் கொள்கைத் தீர்மானங்களில் தாக்கத்தை ஏற்படுத்தும் எனக் கருதப்படுகிறது. இதனால் கனேடிய பொருட்கள் மீதான வரிகளைக் குறைக்கும் தீர்மானம் அரசியல் மற்றும் பொருளாதார ரீதியாகவும் கவனம் பெற்றுள்ளது.

இதற்கிடையில், இரு நாடுகளுக்கும் நன்மை பயக்கும் வகையில், கனடாவின் உரிமைகளைப் பாதுகாக்கும் வர்த்தக உறவை ஏற்படுத்துவதற்கான பேச்சுவார்த்தைகளில் ஈடுபடத் கனடா தயாராக இருப்பதாக கனடாவின் உள்நாட்டு வர்த்தக அமைச்சர் டொமினிக் லெப்லாங்க் தெரிவித்துள்ளார்.

கனடாவை வந்தடைந்த 2 போர் விமானங்கள்

ஒட்டாவா அமெரிக்காவிடம் இருந்து எத்தனை F-35 போர் விமானங்களை வாங்குவது என்பது குறித்து கனடா அரசாங்கம் இன்னும் ஆலோசித்து வரும் நிலையில், புதிய F-35 போர் விமானங்கள் இரண்டை கனடா பெற்றுள்ளது.

கனடாவின் ரோயல் கனடிய விமானப்படை லாக்ஹீட் மார்ட்டின் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட இரண்டு போர் விமானங்களையும் வெள்ளிக்கிழமை பெற்றுக் கொண்டதாக சமூக ஊடகத்தில் அறிவித்துள்ளது. இதனுடன், அரிசோனா மாநிலத்தின் பீனிக்ஸ் நகரில் எடுக்கப்பட்ட புகைப்படம் ஒன்றையும் வெளியிட்டுள்ளது. அந்தப் புகைப் படத்தில் ஒரு விமானத்தில் கனடாவின் மேப்பிள் இலைச் சின்னம் காணப்படுகிறது. புதிய விமானங்களைக் கொண்டு கனடிய விமானப்படை விமானிகளுக்கான பயிற்சியை எப்போது ஆரம்பிக்கும் என்பதை உடனடியாகத் தெரிவிக்க முடியவில்லை. அமெரிக்கத் தூதுவர் பீட் ஹோக்ஸ்ட்ரா அண்மையில் இந்த விமானங்களை உலகின் மிகச் சிறந்த போர் விமானம் எனப் புகழ்ந்திருந்தார்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கனடாவுக்கு எதிராகத் தொடர்ச்சியாக வர்த்தக அச்சுறுத்தல்களையும், கனடாவை அமெரிக்காவுடன் இணைத்துக் கொள்வது தொடர்பான கருத்துகளையும் வெளியிட்டு வரும் நிலையில், இந்த விமானக் கொள்வனவு குறித்து கனடியப் பிரதமர் மார்க் கார்னி மீளாய்வொன்றை ஆரம்பித்திருந்தார். இந்த மீளாய்வு ஒரு வருடத்திற்கு முன்னரே நிறைவடைந்திருக்க வேண்டியதாகும்.

கடந்த ஆண்டு, அமெரிக்காவின் இராணுவ மேலாதிக்கத்தைத் தக்க வைத்துக் கொள்ளும் நோக்கில், தனது நட்பு நாடுகளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட திறன்களைக் கொண்ட போர் விமானங்களை வழங்குவது குறித்துச் சிந்திப்பதாக ட்ரம்ப் தெரிவித்திருந்தார். இதற்கிடையில், அமெரிக்காவின் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லாயிட் ஆக்ஸ்வொர்த்தி, F-35 போர் விமானங்களில் பயன்படுத்தப்படும் மென்பொருளைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் வாஷிங்டனிடம் இருப்பதாக எச்சரித்துள்ளார்.

Chapel Ridge
FUNERAL HOME & CREMATION CENTRE

Serving the Tamil Community OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

At Need Funeral Arrangements

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- Vistation
- Funeral & Memorial Service
- Reception
- Burial
- Cremation

Vilosanan Sivatharman
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை

Christeen Seevaratnam
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

Pre-Arranging: A Wise Choice...

FINANCIAL BENEFITS
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

EMOTIONAL BENEFITS
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com

செம்மணி மனிதப் புதைகுழியும் இன்னொரு தொடர்கதையாகுமா?

ஞானசார தேரருக்கு காவியுடை அணிவது தொடர்பான பிரச்சனை நீதிமன்றத்தையும் தாண்டி மகா பாரதத்தின் துகிலுரி படலம் போல நீண்டு செல்கிறது. கடந்த 23ம் திகதி .வரை நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தும் போது காவியுடை அணிய வேண்டுமென ஒரு கோரிக்கையாக முன் வைக்கப்பட்டிருந்த நெருக்கடி வேறு வகையாக தீர்க்கப்பட்டுள்ளது.

பௌத்த பிக்குகள் கொழும்பு விகாரமா தேவி பூங்காவில் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அதே சமயம் ஞானசார தேரரை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தாது வீடியோ மூலம் காணொளி வழியாக விசாரணை நடத்தப்பட்டது. பௌத்த பாரம்பரிய முறைப்படி இவருக்கு காவியுடை அணிய அனுமதிக்குமாறு விடுக்கப்பட்ட வேண்டுகோள் இதன் போது நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது. இதேபோன்று சிறைத்தண்டனை அனுபவிக்கும் மற்றைய பிக்குகளுக்கும் காவியுடை அணிவிக்க வேண்டுமென கேட்டால் என்ன செய்வது என்று கேள்வி எழுப்பிய நீதிபதி புத்திக சி.ரகல இந்த வேண்டுகோளை நிராகரித்து விட்டார்.

குற்றவியல் திருத்தச் சட்டடத்தின் கீழ் குற்றத்தை ஒப்புக் கொண்டு இரு தரப்பும் இணக்கப்பாட்டுக்கு வருவது தொடர்பாக அடுத்த தவணையில் சமர்ப்பணங்களை முன்வைக்க

வேண்டுமென உத்தரவிட்ட நீதிபதி, வழக்கை அடுத்த 29ம் திகதிக்கு ஒத்தி வைத்தார். இவ்விவகாரம் தொடர்பாக நீதிமன்றம் வழங்கும் தீர்ப்பை ஏற்றுக் கொள்ள அரசாங்கம் தயாராகவுள்ளதாக ஏற்கனவே ஜனாதிபதி அநுர குமர ஒப்புக் கொண்டுள்ளார். அது வரை பௌத்த பிக்குகள் போராட்டம் தொடருமா அல்லது அவர்களை பூங்கா விலிருந்து அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா என்பது அடுத்து வரும் நாட்களில் தெரிய வரும். பிக்குகள் உண்ணவும், உறங்கவும், உடற் பயிற்சி செய்யவும், உல்லாசமாகப் பொழுது போக்கவும் விகாரமாதேவி பூங்கா தொடர்ந்து டமளிக்க முடியாது போகலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

இது ஒரு புறமிருக்க, இப்போது புதிய சவால் ஒன்று பெரும் பிரச்சனையாக ஏற்கனவே பாதிக்கப்பட்டிருக்கும் தமிழர்களை முன்னிலைப்படுத்தி உருவாக்கப்பட்டுள்ளது. செம்மணி சித்தாப்பாத்தி மயான புதைகுழியிலிருந்து மீட்கப்பட்ட 500க்கும் அதிகமான மனித எச்சங்கள், எலும்புக்கூடுகள் தொடர்பாக தொல்லியல் நிபுணர் பேராசிரியர் ராஜ் சோமதேவ கடந்த வாரம் சமர்ப்பித்த அறிக்கையே .தன் தோற்றுவாய். மனிதப் புதைகுழி விவகாரம் தொடர்பாக வெளியிடப்பட்ட

நான்காவது இடைக்கால அறிக்கை இது.

உண்மைகளை மூடி மறைக்கும் திட்டமிட்ட செயலே இந்த அறிக்கை என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திர குமார் பொன்னம்பலம் குற்றம் சாட்டியுள்ளார். இதற்கு முன்னர் செம்மணி விவகாரம் தொடர்பாக வெளியிடப்பட்ட அறிக்கைகளில் தெரிவிக்கப்பட்டிருந்த ஆய்வின் முடிவுகளை இப்போது வெளியிடப்பட்டிருக்கும் அறிக்கை தலைகீழாக மாற்றியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

செம்மணி மனிதப் புதைகுழி மீது நேர்மையான நீதியான விசாரணை டம்பெற வேண்டுமெனில் சர்வதேச உதவியுடன் அது மேற்கொள்ளப்பட வேண்டுமென தொடர்ந்து கோரப்பட்டு வருகின்ற போதிலும், இதுவரை அரசாங்கம் அதற்கு இணங்கவில்லை. பல்வேறு மனித உரிமைகள் அமைப்புகளும் இதனையே கோரி வருகின்றன. முன்னைய அரசாங்கங்களைப் போல இப்போதைய அரசாங்கமும் படையினரின் குற்றங்களை மூடி மறைத்து காலத்தை இழுத்தடித்து நீதியை மறுத்து வருவதை நான்காவது இடைக்கால அறிக்கை நிரூபித்து நிற்கிறது.

தற்போது வெளியிடப்பட்ட அறிக்கையில் மனிதப் புதைகுழி என்ற சொற்பதம் திட்டமிட்டு தவிர்க்கப்பட்டுள்ளது. இராணுவச் சிப்பாய் சோமரட்ண ராஜபக்ச இக்கொலைக் களத்தை 1998ல் வெளிப்படுத்தும் போதே இதனை மனிதப் புதைகுழி என்று தெரிவித்திருந்தார். அப்போது வடபகுதியில் பல மனிதப் புதைகுழிகள் இருந்தன. அவை பற்றி இப்போது எவரும் பெருமளவில் பேசாது மறைக்கப்பட்டு விட்டது.

யாழ்ப்பாணம் சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மாணவி கிரிசாந்தி குமாரசாமி படுகொலை வழக்கில் சிறைத் தண்டனை பெற்ற இந்த ராணுவச் சிப்பாய் சோமரட்ண ராஜபக்சவே செம்மணி சித்துப்பாத்தி மயானக் கொலைக்களத்தை முதன்முறையாக பகிரங்கப்படுத்தியவர். தமக்கு போதிய பாதுகாப்பு வழங்கப்படுமாயின் நேரடியாக விசாரணையில் பங்குபற்றி சாட்சியமளிக்க தாம் தயாராகவிருப்பதாக இவர் பல தடவை கூறியும், அரச தரப்பு இதனை செவிசாய்க்கவில்லை.

நீதிமன்ற உத்தரவுக்கு இணங்க செம்மணி புதைகுழி தோண்டப்பட்ட போது மூன்று குழந்தைகளின் எச்சங்கள் உட்பட 19 மனித எலும்புக்கூடுகள் முதலில் மீட்கப்பட்டன. இந்த வருடம் ஆகஸ்ட் 20ம் திகதிவரை 582 எலும்புக்கூடுகளும் மனித எச்சங்களும் மீட்கப்பட்டன. 1997ம் ஆண்டு சர்வதேச மன்னிப்புச்சபையின் அறிக்கையின் பிரகாரம் 1995-1996 வரையான காலப்பகுதியில் இப்பிரதேசத்தில் 648 பேர் காணாமல் போயுள்ளனர். .வர்களுக்கு என்ன நடந்தது என்பதை ராணுவச் சிப்பாய் சோமரட்ண ராஜபக்ச அப்போதே வெளிப்படுத்தியிருந்தார். ராணுவத்தால் சுற்றி வளைக்கப்பட்டு கொண்டு செல்லப்பட்ட இவர்கள் சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்டனர் என்றும், இது போன்ற சம்பவங்கள் தொடர்பாக இருபது இராணுவ அதிகாரிகளின் பெயர்களையும் .வர் வெளிப்படுத்தியிருந்தார்.

நல்லூர் பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள்ளிருக்கும் செம்மணி சித்துப்பாத்தி மயானத்தை சீரமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்த ஊழியர்கள் 2025 பெப்ரவரியில் அங்கு தென்பட்ட மனித எச்சங்களை பகிரங்கப்படுத்தினர். அந்த வருட மே மாதம் நீதிமன்ற உத்தரவுக்கிணங்க புதைகுழிகள் தோண்ட ஆரம்பிக்கப்பட்டு தொல்பொருள் ஆய்வாளர் ராஜ சோமதேவ .தற்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டார்.

புதைகுழிகளைத் தோண்ட தோண்ட குழந்தைகள், சிறுபிள்ளைகள், வளர்ந்தோர் எனப்படுவோர் அரைகுறை ஆடைகளுடனும் நிர்வாணமாகவும் தனித்தும் கூட்டமாகவும் நிஷ்டையில் இருப்பது போலவும் எலும்புக்

கட்டுரையாளர்:-
பனங்காட்டான்

கூடுகளாக மீட்கப்பட்டனர்.

இது தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் அமைப்பு 2025 செப்டம்பரில் வெளியிட்ட அறிக்கையில், சட்டத்துக்குப் புறம்பான நீதி விசாரணைகளற்ற படுகொலைகள் இடம் பெற்றிருப்பது தெரிகிறது என சுட்டிக்காட்டியிருந்தது.

தற்போது ராஜ சோமதேவ தமது நான்காவது அறிக்கையில் தொற்று நோய் அல்லது இயற்கைப் பேரழிவு காரணமாக இறந்தவர்கள் புதைகுழிகளுக்குள் சடலங்களாக இருக்கலாமென கூறியிருப்பது சான்றுகளற்ற அவரது ஊகம். இதை நிரூபிக்க சர்வதேச மருத்துவ ஆய்வுகூடங்கள், மருத்துவ சேவைகள் போன்றவை சாட்சியங்களாக இருக்க வேண்டும்.

தொற்றுநோய் காரணமாக இறந்தவர்கள் எனில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் மாநகர சபை சுகாதார பிரிவு, நல்லூர் பிரதேச சபை உட்பட பல்வேறு சுகாதார மருத்துவ அமைப்புகள் இது விடயத்தில் நிரூபிக்கக்கூடியவாறு இருக்க வேண்டும். இவை எதுவுமே இல்லாத நிலையில் தனி ஒருவரின் ஊகத்தின் அடிப்படையிலான அறிக்கை நிரூபிக்கப்பட முடியாத ஒன்றாதலால் அது நிராகரிக்கப்பட வேண்டியது.

எந்த விடயமாயினும், சட்டப்படியே இடம் பெறுமென்று கூறிவரும் அநுர

குமர அரசு செம்மணி மனித புதைகுழி விடயத்தை எவ்வாறு கையாளப் போகிறது என்பதை மனித உரிமை ஆர்வலர்கள் எதிர்பார்த்திருக்கின்றனர்.

செம்மணி சித்துப்பாத்தி மனிதப் புதைகுழியும் காணாமலாக்கப்பட்டோரின் போராட்டம் போன்று விடை காண முடியாத இன்னொரு தொடர்கதை யாகுமா?

15வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

உறவுகளே! ஒக்டோபர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.

தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா

செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)

பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)

உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)

உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)

பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்

இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள். அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

15 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 14 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒரு நாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ? ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

”தர்மம் தலை காக்கும்” “கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்ன தானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

24 ஒக்டோபர் 2026 2026 முதல்30 ஒக்டோபர் 2026 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர் களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த செப்டம்பர் முதல் 14வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

மேலதிக விபரங்களுக்கு:-

ஈழநாடு பரமேஸ் 416 841 9600

14வது ஆண்டு நினைவஞ்சலி

திரு சந்திரசேகரம்பிள்ளை அன்னலிங்கம்

கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாவும் கொண்டிருந்த திரு சந்திரசேகரம் பிள்ளை அன்னலிங்கம் அவர்களது 14வது ஆண்டு நினைவு நாள் 26 ஒக்டோபர் 2026 திங்கட்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு சந்திரசேகரம்பிள்ளை அன்னலிங்கம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

1வது ஆண்டு நினைவஞ்சலி

திரு இளங்குமரன் சிவஞானம்

வேலணை மேற்கு 7ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாவும் கொண்டிருந்த திரு இளங்குமரன் சிவஞானம் அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாள் 01 நவம்பர் 2026 ஞாயிற்றுக் கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு இளங்குமரன் சிவஞானம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

30வது ஆண்டு நினைவஞ்சலி



திரு கந்தையா பேரின்பநாதன்

அரியாலையைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு கந்தையா பேரின்பநாதன் (லெப் கேணல் நாதன்) அவர்களது 30வது ஆண்டு நினைவு நாள் 26 ஒக்டோபர் 2026 திங்கட்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது சகோதரி திருமதி யோகாம்பிகை இலங்கேஸ்வரன் அவர்கள் அன்னாரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு நாதன் அவர்களை நினைவு கூர்ந்த் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினர் உறவினர்கள் நண்பர்கள் ஆகியோருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

நினைவழியா நினைவுகள்

திருமதி சத்தியபாமா கௌரி குகன்

ஹட்டன் நுவரெலியாவைப் பிறப்பிடமாகவும் அவுஸ்திரேலியாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி சத்தியபாமா கௌரி குகன் அவர்களது நினைவழியாத நினைவு நாள் 28 ஒக்டோபர் 2026 புதன்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி சத்தியபாமா கௌரி குகன் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

17வது ஆண்டு நினைவஞ்சலி

திருமதி பொன்னையா அன்னம்மா

கச்சாய் வீதி கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி பொன்னையா அன்னம்மா அவர்களது 17வது ஆண்டு நினைவு நாள் 21 ஒக்டோபர் 2026 புதன்கிழமையாகும். அன்றைய நாளுக்காக அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக 24 ஒக்டோபர் 2026 சனிக்கிழமை பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி பொன்னையா அன்னம்மா அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

15வது ஆண்டு நினைவஞ்சலி

திரு வே.இ.இராசையா அவர்கள்

புங்குடுதீவு 12ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த சமூகத் தொண்டர் திரு வே.இ.இராசையா அவர்களின் 15வது ஆண்டு நினைவு நாள் 27 ஒக்டோபர் 2026 செவ்வாய்க்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு இராசையா அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்

18 ஒக்டோபர் 2026 ஞாயிற்றுக்கிழமை அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு இரகுநாதர் மயில்வாகனம் அவர்களது 11வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.

19 ஒக்டோபர் 2026 திங்கட்கிழமை வேலணை முடிப்பிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பத்மாவதி கணபதிப்பிள்ளை அவர்களது 11வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.

24செப்டம்பர் 2026 வியாழக்கிழமை யாழ்.மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு. ஜெயேந்திரன் இராஜேந்திரன் அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய நாளுக்காக அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக 21 ஒக்டோபர் 2026 புதன்கிழமை பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



24 செப்டம்பர் 2026 வியாழக்கிழமை யாழ்.மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு. ஜெயேந்திரன் இராஜேந்திரன் அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய நாளுக்காக அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக 21 ஒக்டோபர் 2026 புதன்கிழமை அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.

24 செப்டம்பர் 2026 வியாழக்கிழமை யாழ்.மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு. ஜெயேந்திரன் இராஜேந்திரன் அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய நாளுக்காக அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக 21 ஒக்டோபர் 2026 புதன்கிழமை செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.

23 ஒக்டோபர் 2026 வெள்ளிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு கோணேஸ்வரன் இராசையா அவர்களது இனிய பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திரு கோணேஸ்வரன் இராசையா அவர்கள் தனது குடும்பத்தானருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்

21 ஒக்டோபர் 2026 புதன்கிழமை யாழ்.கச்சாய் வீதி கொடிகாமத்தைச சேர்ந்த திருமதி பொன்னையா அன்னம்மா அவர்களது 17வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய நாளுக்காக அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக 24 ஒக்டோபர் 2026 சனிக்கிழமை பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.

25 ஒக்டோபர் 2025 ஞாயிற்றுக்கிழமை யாழ்.நல்லூரைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருக்கும் திரு திருமதி சசிதரன் சசிகலா தம்பதிகளின் செல்வப்புதல்வன் மயூரன் அவர்களின் 34வது இனிய பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திரு மயூரன் அவர்கள் தனது பெற்றோர்கள் உறவுகளுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.

26 ஒக்டோபர் 2026 திங்கட்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி சோபர் பீற்றர் ஆன் இணையர்களின் செல்வப்புதல்வன் எரின்டன் பீற்றரின் 16வது இனிய பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் எரின்டன் தனது பெற்றோர்கள் உறவுகளுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.

26 ஒக்டோபர் 2026 திங்கட்கிழமை யாழ்.அரியாலையைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வாழ்விடமாகவும் கொண்டிருந்த லெப்.கேணல் நாதன் என்று அழைக்கப்படும் திரு கந்தையா பேரின்பநாதன் அவர்களது 30வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது சகோதரி யோகாம்பிகை இலங்கேஸ்வரன் அவர்கள் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்.

26 ஒக்டோபர் 2026 திங்கட்கிழமை கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு சந்திரசேகரம்பிள்ளை அன்னலிங்கம் அவர்களது 14வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.

27 ஒக்டோபர் 2026 செவ்வாய்க்கிழமை புங்குடுதீவு 12ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த சமூகத் தொண்டர் திரு வே.இ.இராசையா அவர்களது 15வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.

28 ஒக்டோபர் 2026 புதன்கிழமை ஹட்டன் நுவரெலியாவைப் பிறப்பிடமாகவும் அவுஸ்திரேலியாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி சத்தியபாமா கௌரி குகன் அவர்களது நினைவழியாத நினைவு நாளுக்காக அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.

30 ஒக்டோபர் 2026 வெள்ளிக்கிழமை இங்கிலாந்தில் (UK) வாழும் டாக்டர் திரு அரங்கன் அஸ்மிதா இணையர்களது 7வது இனிய திருமண நன்நாளாகும். அன்றையதினம் இணையர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்

19 ஒக்டோபர் 2026 திங்கட்கிழமை வேலணை முடிப்பிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பத்மாவதி கணபதிப்பிள்ளை அவர்களது 11வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.

செம்மணி அறிக்கையும் தமிழ்மக்களின் பயங்களும்

செம்மணிப் புதைகுழி தொடர்பான பேராசிரியர். ராஜ் சோமதேவவின் அறிக்கை இடைக்கால அறிக்கை தான். அது இறுதி அறிக்கை அல்ல. மேலும் அந்த அறிக்கையில் பல இடங்களில் இருக்கலாம் என்று தான் கூறப்பட்டிருக்கிறது. சில விடயங் களில் உரிய துறைசார் நிபுணத்துவ அறிவைப் பெற்றுக் கொண்டு தான் முடிவுக்கு வரலாம் என்பதும் கூறப் பட்டிருக்கிறது. எனவே அந்த அறிக் கையில் கூறப்பட்டவைகள் அனைத் தும் இறுதியானவை அல்ல. எனினும் இனி வரக்கூடிய அறிக்கைகளிலும் முடிவுகளிலும் அது செல்வாக்குச் செலுத்தும் என்பதும் உண்மை.

அந்த அறிக்கையில் பிரதானமாக எங்கே பேராசிரியர் பிசகுகிறார் என்றால், தொகையாக அவ்வளவு எலும்புக் கூடுகளும் கண்டு பிடிக்கப்பட்ட அந்த இடத்தில் புதைக்கப்பட்டவர்கள் என் னென்ன காரணங்களுக்காக அவ்வாறு அவசரமாக புதைக்கப்பட்டிருக்கலாம் என்பதைக் கூறும் இடத்தில் அவர் இயற்கை அனர்த்தங்களைக் கூறு கிறார். பெருந்தொற்று நோய்களைக் கூறுகிறார். ஆனால் யுத்த அனர்த்தம் என்று ஒரு விடயத்தை மட்டும் வசதி யாக மறந்து விடுகிறார். அறிக்கையில் பிரதான பலவீனமாகவும் அறிக்கையை சர்ச்சைக்குரியதாகவும் மாற்றும் இடம் அதுதான்.

அந்த விடையத்தில தான் அவரு டைய அறிக்கை இதற்கு முன் அவர் வெளியிட்ட முதலிரண்டு இடைக்கால அறிக்கைகளோடும் முரண்படுகிறது. அதை விட முக்கியமாக கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு வெளியிட்ட அறிக்கையோடும் முரண் படுகிறது. அதாவது செம்மணிப் புதைகுழிக்கு உள்ள அரசியல் பரிமா ணத்தை நீக்கும் உள்நோக்கம் அந்த அறிக்கையில் உண்டா? என்று தமிழ் மக்களைச் சந்தேகிக்க வைக்கிறது.

செம்மணியைப் போன்ற எனைய புதை குழிகளிடமிருந்து செம்மணி எங்கே வேறுபடுகிறது என்பதற்கு பேராசிரியர் கூறும் விளக்கம். இந்தப் புதை குழி யில் உடல்கள் ஏதோ ஒரு விகிதமளவு க்கு பண்பாட்டு வழமைகளைப் பின்பற்றிப் புதைக்கப்பட்டிருக்கின்றன என்பது தான். ஆனால் அதே அறிக்கையில் வேறு சில இடங்களில் அவ்வாறான பண்பாட்டு நம்பிக்கைகள் பின்பற்றப்படவில்லை என்பதையும் அவர் கூறுகிறார். இங்கே கேள்வி என்னவென்றால் எப்படிப்பட்ட பண் பாட்டு நம்பிக்கைகளை செம்மணி புதைகுழிக்குள் காணப்படும் எலும்புக் கூடுகள் பிரதிபலிக்கின்றன? என்பது தான்.

அது ஒரு சுடலை அங்கே உடல்கள் தகனம் செய்யப்படுமே தவிர புதைக்கப் படுவது குறைவு. சட்ட ரீதியாகச் சந்தேகிக்கப்படும் இறப்புக்களில் உடல்கள் புதைக்கப்படுவதுண்டு. எரிக்கப்படுவதற்கு அனுமதி இல்லை. ஆனால் அவ்வாறு புதைக்கப்படுவது என்பது அருந்தலானதே தவிர பொது வானதோ பெரும் போக்கோ அல்ல. ஏனென்றால் சித்துப் பாத்தி ஒரு சுடுகாடு. இடுகாடு அல்ல.

ஒரு சுடுகாட்டுப் பிரதேசத்தில் உடல் கள் புதைக்கப்பட்டமை என்பது அசாதாரணம். அந்த அசாதாரண நிலைமையை பேராசிரியர் இயற்கை அழிவு அல்லது பெருந்தொற்று என்று கூறுகிறார். ங்கே பின்வரும் கேள்வி களை எழுப்பலாம்.

முதலாவது கேள்வி பெருந் தொற்று காரணமாக உடல்கள் புதைக்கப்படுமா ?எரிக்கப்படுமா? பொதுவாக எரிக்கப் படுவது தான் வழமை. அப்படி எரிக்கப் போனதால் தான் கோவிட் பெருந் தொற்று காலகட்டத்தில் முஸ்லிம்களோடு கோத்தாபய அரசாங் கத்துக்கு முரண்பாடுகள் ஏற்பட்டன. இரண்டாவது கேள்வி. சித்துப் பாத்தி மயானத்தில் அவ்வாறு உடல்கள் புதைக்கப்பட்டிருக்கக்கூடிய சாத்தியக் கூறுகள் இருந்தனவா? இந்தக் கேள்விக்கு விடை காண்பது என்றால் சித்துப் பாத்தியின் வயதைக் கணிக்க வேண்டும்.

சித்துப் பாத்தி மயானமானது அரச பதிவுகளில் சித்துப்பாத்தி சுடலை என்று 1972ல் தான் பதியப்பட்டிரு க்கிறது. எனினும் அதற்கு முன்பு 1950களின் நடுப்பகுதியில் அருகில் இருந்த ஒரு காணிப் பதிவின்படி இது ஒரு சுடலையாக இருந்திரு க்கிறது. அதற்கு முன்னால் போனால் பிரித்தானியரின் ஆட்சிக் காலத்தில் 1930களில் அது ஒரு பொது நிலமாக பிரயோகத்தில் இருந்திருக்கிறது என்ற தகவலையும் ஊரவர்கள் கூறுகிறார்கள். இந்தக் கணக்கின்படி பார்த்தால், சித்துப் பாத்தியின் வயது. ஆக மிஞ்சிப் போனால் 90 ஆண்டுகளைத் தாண்டாது.

மூன்றாவது கேள்வி. அவ்வாறு சித்துப்பாத்தியின் 90 ஆண்டு காலப் பரப்புக்குள் யாழ்ப்பாணத்தைத் தாக்கிய இயற்கைப் பேரழிவுகள் எத்தனை? பெரும் தொற்று நோய்கள் எத்தனை?

அதிகம் இல்லை. 1934, 35களில் மலேரியா நாட்டைத் தாக்கியிருக் கிறது. ஆனால் அதனால் யாழ்ப்பாண த்தில் உயிர்சேதம் அதிகம் இல்லை என்று கூறப்படுகிறது. அதற்குப்பின் சுனாமி தாக்கியது. அப்பொழுது உடல்களை கரையோரங்களில் தான் புதைத்தார்கள். சித்துப் பாத்திக்கு கொண்டு வரவில்லை. அதன்பின் கோவிட்-19.அங்கு உடல்கள் எரிக்கப் பட்டன. புதைக்கப்படவில்லை.

அப்படியென்றால் கடந்த 90 ஆண்டு களில் யாழ்ப்பாணத்தைத் தாக்கிய இயற்கைப் பேரிடர்கள் அல்லது பெருந்தொற்று நோய்கள் போன்றவற் றால் தொகையாக கொல்லப்பட்டவர் கள் அங்கே புதைக்கப்பட்டிருப்பதாக எப்படிச் சந்தேகிப்பது?

நாலாவது கேள்வி. தமிழ் மக்களின் கடந்த 90 ஆண்டு கால வாழ்வில் ஏற்பட்ட அனர்த்தங்கள் என்று பார்த் தால் இயற்கை அனர்த்தங் கள்.பெருந்தொற்று நோய்கள் மட்டும் தானா? அவற்றை விட பாரதூரமான உயிரச்சமான பேரழிவை ஏற்படுத்திய அனர்த்தங்கள் இருக்கவில்லையா? கடந்த நான்கு தசாப்தங்களுக்கும் மேலான யுத்தம் எந்த வகைக்குள் அடங்கும் ?

போர்க்காலத்தில் தான் யாழ்ப்பாணத்த வர்கள். இறந்தவர்களின் உடல்களைப் புதைக்க முடியாத நிலைமைகள் காணப்பட்டன.படை நடவடிக்கை களின் போது அல்லது பேரிடப் பெயர்வுகளின் போது அல்லது தொடர் இடர்ப் பெயர்களின் போது அவ்வாறு இறந்தவர்களின் உடல்களைப் புதைப் பதற்கு அவகாசம் இருக்கவில்லை. அல்லது உரிய முறைப்படி பண் பாட்டு வழமைகளின்படி புதைப்ப தற்கு. எரிப்பதற்கு அவகாசம் இருக்க வில்லை.

ஐந்தாவது கேள்வி அவ்வாறு உடல் களை தமிழ் மக்கள் புதைத்தார்கள் என்பதற்குமப்பால். அந்த உடல்களு க்கு உரியவர்களைக் கடத்திக் கொலை செய்தவர்கள் புதைத்திருக்கி றார்கள். கிரிஷாந்தி கொலை வழக்கில் தண்டிக்கப்பட்ட சோமரட்ன ராஜபக்ச அதை நீதிமன்றத்தில் தெரிவித்திருக் கிறார். அவ்வாறு கடத்திக் கொலை செய்த நபரை புதைக்கும் போது அல்லது எரிக்கும் போது கொலை யாளிகள் அந்த உடலுக்கு உரிய மரியாதையைக் கொடுப்பதில்லை.

செம்மணிப் புதை குழியை வெளியே கொண்டு வந்த கிரிசாந்தி படுகொலை விடயத்திலும் கிரிசாந்தியின் உடலும் அவருடைய குடும்பத்தவர்கள் மற்றும் அயலவர்களின் உடலும் அவ்வாறு உரிய மரியாதைகளோடு புதைக்கப் பட்டிருக்கவில்லை. அது போன்ற பல நூறு உடல்களை உரிய மரியாதைகள் இன்றிப் புதைத்ததாக இப்பொழுது சிறையில் இருக்கும் சோமரட்ன ராஜ பக்ஷ திரும்பத்திரும்ப கூறியிருக்கி றார். கடந்த வாரம். அவரை மீண்டும் விசாரிப்பதற்கு குற்றப் புலனாய்வுத் துறை நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுத்திருக்கிறது.

எனவே சோமதேவவின் அறிக்கையில் தமிழ்மக்கள் அதிகம் சந்தேகப்படும் இடம் அதுதான். கடந்த 90 ஆண்டு கால அனர்த்தங்களைச் சுட்டிக்காட்டிய பேராசிரியர் போர் என்ற விடயத்தை மட்டும் சுட்டிக்காட்டவில்லை. நவீன தமிழ் வரலாற்றில் ஈழத் தமிழர்கள் சந்தித்த அசாதாரண நிலைமைகளில் மிகவும் கொடுமையான ஒரு காலத்தை அனுபவத்தை அந்த அறிக்கை ஊகமாகக்கூட சுட்டிக் காட்டவில்லை. ஆனால் அது அவருடைய முன் னைய இரண்டு அறிக்கைகளிலும் எதோ ஒரு விதத்தில் சுட்டிக்காட்டப் படுகிறது. கடந்த ஆண்டு வெளிவந்த மனித உரிமைகள் ஆணையகத்தின் அறிக்கையிலும் சுட்டிக்காட்டப்படு கிறது.

மேற்கண்ட கேள்விகளுக்கு விடை வேண்டும் என்று பாதிக்கப்பட்ட மக்கள் கேட்பார்கள். விடை கிடைத் தால் தான் தங்களுக்கு நீதி வழங்க ப்பட்டதாக அவர்கள் நம்புவார்கள். பேராசிரியரின் அறிக்கை வெளிவந்த பின் அது தொடர்பாக எழுதப்பட்ட செய்திக் கட்டுரைகளில், குறிப்பாக தென்னிலங்கை மைய ஆங்கில ஊடக ங்களில் ஒரு விடயம் சுட்டிக்காட்ட ப்படுகிறது. செம்மணி தொடர்பில் விஞ்ஞானபூர்வமான முடிவுகளை விடவும் அரசியல் உள்நோக்கம் உடைய விடையங்கள்தான் தலைப்பு கள் ஆக்கப்படுகின்றன என்பதே அது.

அந்த விடயம் உணர்ச்சிகரமானதாக உணர்வுபூர்வமானதாக காணப்படும் போது தான் அதை அரசியலாகக் கையாளும் நிலைமைகள் ஏற்படுகின் றன. செம்மணி தொடக்கத்தில் இருந்தே உணர்வுபூர்வமானது தான். உணர்ச்சிகரமானது தான். எனவே இந்த விடயத்தில் உள்ளூர் உணர்வு கள் உணர்ச்சி கரமானவைகளாக. அரசியல் கலப்பு உள்ளவைகளாக இருக்கும் என்று சந்தேகித்தால் அத ற்கு ஒரே வழி. வெளிநாட்டு நிபுணத் துவ உதவிகளை பெறுவதுதான். அதைத்த ான் தமிழ் மக்கள் பன்னாட்டு விசாரணை பொறிமுறை வேண்டும் என்று தொடர்ச்சியாக கேட்டு வரு கிறார்கள். ஒரு யானையின் மரணத் துக்கு எதிர்க்கட்சித் தலைவர் வெளி நாட்டு விசாரணை வேண்டும் என்று கேட்கும் ஒரு நாட்டில். மனிதப் புதை குழிகளுக்கு அவ்வாறான விசாரணை கள் வேண்டும் என்று தமிழ் மக்களும் கேட்கிறார்கள்.

புவிசார் அரசியலில் இயலாமை என்பது தான் இலங்கையின் யதார்த்தம்!

சில தினங்களுக்கு முன்னர் ஒரு நாட்டின் அரசியல் அதிகாரியுடன் பேசும் வாய்ப்பு கிடைத்தது. அந்த நாட்டின் தூதுவர், கடந்த காலத்தில் வடக்கு கிழக்கிற்கு வந்ததே இல்லை. வடக்கு கிழக்கில் எந்தவொரு ஆர்வமும் தங்களுக்கு இல்லை. அதனால் தான் அங்குள்ள விடயங்களில் நாங்கள் ஆர்வம் காண்பிப்பதில்லை என்றும் அந்த அதிகாரி கூறினார். பேசிக் கொண்டிருக்கும் போது, ஈரானிய கப்பல் விவகாரம் தொடர்பில் அவருடைய பேச்சு திரும்பியது. ஈரானிய கப்பல் விவகாரத்தில் ஏன் அரசாங்கம் இந்தளவு தடுமாறுகின்றது என்று கேட்டார்.

சிறிய நாடுகள், உலகின் அதிகார சக்திகள் கோபித்துக் கொள்ளாத வகையில் தானே நடந்து கொள்ள வேண்டும். ஒரு வேளை ஜனாதிபதி ட்ரம்ப் கோபப்பட்டால், அடுத்த நாளே நூறு விகிதம் வரி விதிப்பு என்று அறிவித்தால் இலங்கையின் நிலைமை என்னவாகும்? நான் சிரித்துக் கொண்டே கூறினேன்.

அவரும் அதனை ஆமோதிப்பது போன்று தலையை அசைத்தார். அண்மையில் பங்களாதேஷில் இடம் பெற்ற வங்காள விரிகுடா உரையாடல் நிகழ்வில், பங்கு கொண்டிருந்த போது இன்றைய உலக அரசியல் நெருக்கடிகள் தொடர்பில் புவிசார் அரசியல் நிபுனர்கள் பலருடைய உரைகளை கேட்க முடிந்தது.

அங்கு பேசியவர்களில் மாலைதீவின் முன்னைநாள் ஜனாதிபதியின் உரை என்னை கவர்ந்தது. அவர் தெளிவாக பேசினார். ஒரு சிறிய நாட்டின் அரசியல் தலைவரிடம் எவ்வாறான தெளிவும் புரிதலும் இருக்க வேண்டுமோ, அதனை அவரிடம் காண முடிந்தது. அவர் கூறினார். நாங்கள் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இருக்கும் ஒரு சிறிய நாடு. எங்களுக்கு அருகில் இந்தியா என்று ஒரு பெரிய நாடு இருக்கின்றது. இந்தியாவோடு நெருக்கமான உறவை தவிர்த்து வேறு நாடுகளுடன் நெருக்கத்தை ஏற்படுத்துவதால் எங்களுடைய நாட்டின் சுயாதீபத்தியத்தை பாதுகாக்க முடியுமென்று நான் நம்பவில்லை – அதனால், ‘முலில் இந்தியா என்பது தான் எங்களுடைய வெளிவிவகார நிலைப்பாடு.

மேலும் கூறுகின்ற போது நான் ஒரு அணி சாரா நபரல்ல – எங்களுக்கான அணி எதுவென்று நாம் தெரிவு செய்யத்தான் வேண்டும். இலங்கை போன்ற நாடுகள் எவ்வாறான வெளிவிவகாரக் கொள்கையை கடைப்பிடிக்க வேண்டும் என்பது ஒரு விவாதத்திற்குரியது.

ஏனெனில் இலங்கை இப்போதும் பனிப்போர் கால சொற்களையே பின்பற்றி வருகின்றது. அணிசாரா, நடுநிலை, சமநிலை – இவ்வாறான சொற்களின் வழியாகத்தான் இலங்கை இதுவரையில் அதன் வெளிவிவகாரக் கொள்கையை முன்வைத்து வருகின்றது. உண்மையில் இது வெளிவிவகாரக் கொள்கைஅல்ல மாறாக பலவான்களின் உலக அதிகாரப் போட்டி அரசியலுக்குள் அகப்பட்டுக் கொள்ளாமல் தப்பித்துக் கொள்வதற்கான, ஒரு உக்திசார் அணுகு முறை. ஆனால் இது பேசுகின்ற அளவிற்கு இலகுவானதல்ல. மிகவும் கடினமானதும் சிக்கலானதும் ஆகும். கரணம் தப்பினால் மரணம் போன்றது.

உண்மையில் அணிசாரா, நடுநிலை என்னும் சொற்களின் வழியாக விடயங்களை கையாளக் கூடிய உலகம் இப்போது இருக்கின்றதா என்பது ஒரு கேள்வி.

ஈரானிய கப்பல் விவகாரம் இதற்கு ஒரு மிகச் சிறந்த உதாரணம். இலங்கை பின்பற்றி வருவதாக கூறிவரும் அணிசாரா நடுநிலை அடிப்படையில் விடயங்களை கையாள முற்படுவதாயின், ஈரானிய கப்பல் விவகாரத்தில் இலங்கை உதவியிருக்க வேண்டும் ஆனால் அமெரிக்க அழுத்தம், மற்றும் அதன் கோபத்தை தவிர்க்க விரும்பினால் அதனை தவிர்க்கத் தான் வேண்டும். இப்போது அணிசாரா, நடுநிலை என்பதெல்லாம் கேள்விக்குள்ளாகி விடுகின்றதல்லவா!

சிறிய நாடுகள் என்ன தான் சுயாதீனம், மூலோபாய சுயாதீபத்தியம் பற்றி பேசினாலும் கூட வேண்டுமானால் இவ்வாறான சொற்களால், உள்ளூர் அரசியலை ருசிப்படுத்த முடியுமே அன்றி, பலம் பொருந்திய நாடுகளை கையாள முடியாது. இந்த அடிப்படையில் தான், புவிசார் அரசியலின் அடிப்படையில், நாடுகளுக்கு இறைமை என்று ஒன்றில்லை என்று நான் கருதுவதுண்டு.

இதற்கு இலங்கை தான் சிறந்த உதாரணம். யாழ்ப்பாணத்திலுள்ள தீவுப் பகுதிகளில், மூன்று கலப்பு – புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டத்திற்கான விலை மனுக் கோரலின் போது, சீனாவே அதனை பெற்றுக் கொண்டது. அது எவ்வாறான நடைமுறையில் பெறப்பட்டது என்பதில் கேள்விகள் இருந்தாலும் கூட, அதனை சீனா பெற்றுக் கொண்டது ஆனால் பின்னர் இலங்கை அரசாங்கம் அதனை இரத்துச் செய்தது. அப்போது சீனா ஒரு மூன்றாம் தரப்பு தலையீடு செய்வதாக குற்றம் சாட்டியது. மறைமுகமாக இந்தியாவின் மீதே குற்றம் சாட்டியது.

இந்த இடத்தில் ஒரு இறைமையுள்ள நாடான இலங்கை, தனது நாட்டின் எல்லைக்குள் எவருடன் இணைந்து வியாபாரம் செய்வது என்பதை தீர்மானிக்க முடியும் தான், அதற்கான அதிகாரம் இருக்கின்றது தான். ஆனால் முடியவில்லையே – ஏன் – இங்கு தான் புவிசார் அரசியல் என்பது மேலாதிக்கம் செலுத்தும் காரணியாக இருக்கின்றது.

புவிசார் அரசியலை தவிர்த்து எந்தவொரு அரசியல் உரையாடலும் முழுமை பெறாது என்பது தான் உண்மை. இறைமையின் அடிப்படையில், எந்த நாட்டுடன் இணைந்து பணியாற்றும் உரிமை இலங்கைக்கு இருக்கின்றது ஆனால் புவிசார் அரசியல் அடிப்படையில் அந்த முடிவு இந்தியாவின் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலானது என்று கருதப்பட்டால், இலங்கையின் இறைமை வாதம் அதனை பாதுகாக்காது. ஏனெனில் இந்தியாவின் தேசிய பாதுகாப்பின் மீதான அச்சுறுத்தலை இலங்கையால் உத்தரவாதப்படுத்த முடியாது. அதற்கான இராணுவ ஆற்றல் இலங்கையிடம் இல்லை.

ஏனெனில் சர்வதேச கட்டமைப்பில் ஒரு கருத்துண்டு – அதாவது, ஒரு பலம்பொருந்திய சக்தியின் உள் நோக்கங்களை மற்றைய நாடுகள் அறிந்து கொள்ள முடியாது. அந்த அடிப்படையில் அவர்கள் எதையும் செய்யலாம் என்னுமடிப்படையில் தான், ஏனைய நாடுகள் தங்களை தயார் படுத்தி வைத்திருக்க வேண்டிய கடப்பாடுண்டு.

அந்த அடிப்படையில் இந்தியாவிற்கு அருகாமையில், சில கிலோமீற்றர் தூரத்தில், பொருளாதார முதலீடு என்னுமடிப்படையில் சீனா, நிலை கொள்வதானது, இந்தியாவின் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலானது. எனவே இலங்கை தூர நோக்கின்றி அவ்வாறான முடிவுகளை மேற்கொளும் போது, ஒரு பிராந்தியசக்தி மற்றும், உடனடி அயல்நாடு என்னும் வகையில் இந்தியாவின் தலையீடு தவிர்க்க முடியாதது.

சீனா ஒரு உலக சக்தி, பொருளாதார அடிப்படையிலேயே அதன் நகர்வுகளை முன்னெடுத்து வருகின்றது. அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு அறிக்கையின்படி, அமெரிக்காவிற்கு அருகாமையில் வந்திருக்கும் ஒரு போட்டியாளர். இந்த பின்புலத்தில் நோக்கினால், சீனா போன்ற ஒரு பலமான நாடு, பொருளாதார ரீதியில் இலாபமற்ற வடக்கு மாகாணத்தில், யாழ்ப்பாணத்தில் அதன் நேரத்தை செலவிட வேண்டிய அவசியம் இல்லை. யாழ்ப்பாணத்தில் ஐஸ்கிறீம் கடைகளை திறப்பதால் சீனாவிற்கு என்ன பயன் உண்டு? யாழ்ப்பாணத் திற்குள் வர வேண்டும் என்று சீனா விரும்புவதற்கு பின்னால் என்ன காரணமுண்டு? பொருளாதார நோக்கில் எவ்வித காரணமும் இல்லை ஆனால் மூலோபாய ரீதியில் காரணமுண்டு.

யாழ்ப்பாணம் இந்தியாவிற்கு அருகில் இருப்பது தான் அந்த மூலோபாய காரணம். இதற்கு பின்னால் இரண்டு காரணங்கள் உண்டு. யாழ்ப்பாணத்தோடு, தரை வழி, கடல் வழி இணைப்பை இந்தியா முன்னிலைப் படுத்தி வருகின்ற நிலையில், பயனற்ற யாழ்ப்பாணம், நீண்டகால அடிப்படையில் சீனாவிற்கு பயனுடையது.

கட்டுரையாளர்:
தாயகத்தில் இருந்து
– யசீந்திரா –

அடுத்தது, இந்திய மத்திய அரசுடன் முரண்பாடான அரசியலை பிரதிநித்துவப்படுத்தி வரும் தென்னிந்திய (தமிழ் நாடு) சீனாவின் முதன்மையான இலக்கு. இவ்வாறானதொரு மூலோபாய நிலப்பகுதியில், தன் பிரசன்னத்தை அதிகரிப்பதன் ஊடாக, இந்தியாவின் மீது நிரந்தரமான தொந்தரவை ஏற்படுத்த முடியுமென்று சீனா கருதக் கூடும். அதற்கு வாய்ப்பில்லை என்று எவரும் வாதிடமுடியாது

ஏனெனில், அவ்வாறு வாதிட்டால் அதற்கான பதில், சர்வதேச அரசியல் கட்டமைப்பில் ஒருவரின் உள்நோக்கத்தை மற்றவர்களால் அறிந்து கொள்ள முடியாது என்பது தான். ஒருவருக்கு இந்த நோக்கம் மட்டுமதான் இருக்கிறது – இருக்கும் என்று சர்வதேச அரசியலில் வாதிட முடியாது. எதுவும் நடக்கலாம் என்னுமடிப்படையில் தான் விடயங்களை கையாள வேண்டும். எனவே யாழ்ப்பாணத்திற்குள் சீனா நுழைவதானது, நீண்டகால அடிப்படையில் சிக்கலானது என்று இந்தியா கருதினால், அதனை தவறு என்று வாதிட முடியாது. இந்தியாவின் கரிசனைகளை இலங்கை கருத்தில் கொள்ளாமலும் இருக்கவும் முடியாது. அதுதான் இலங்கையின் தப்பித்துச் செல்ல முடியாத புவியல் பலவீனம்.

பொருளாதார ரீதியில் பயனற்ற ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை 99 வருடங்களுக்கு குத்தகைக்கு எடுத்ததற்கு பின்னால் இருந்ததும் இந்தக் காரணம் தான். அதன் மூலோபாய முக்கியத்துவம் தான் அந்த துறைமுகத்தின் மீது, சீனா கண் வைத்தமைக்கு காரணம். இந்த அடிப்படையில் நோக்கினால் இலங்கை ஏற்கனவே புவிசார் அரசியல் போட்டிக்குள் தன்னை தேவையில்லாமல் உள்நுழைத்துக் கொண்டது.

இதன் விளைவிலிருந்து இலங்கை தப்பித்துக் கொள்வது மிகவும் கடினம். இலங்கையின் வடக்கு கிழக்கின் மீது, இந்தியாவின் ஈடுபாடு மூலோபாய ரீதியானது. ஏற்கனவே இந்திய – இலங்கை ஒப்பந்தத்தின் ஊடாக அதற்கான வலுவான அடித்தளம் இடப்பட்டிருக்கின்றது.

தேசிய மக்கள் சக்தி அரசின் ஆட்சி பற்றிய விமர்சனங்கள்

தேசிய மக்கள் சக்தி (NPP) அரசாங்கத்தின் இரண்டு ஆண்டுகால ஆட்சியைப் பற்றிய விமர்சனங்களும் மதிப்பீடுகளும் பல தரப்பிலும் நிகழ்கிறது. சில விமர்சனங்கள் ஆரோக்கியமானவை.

1.ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிப்பதில் NPPயின் துணிகரமான நடவடிக்கைகள் கவனத்தை ஈர்த்துள்ளன.

2.கடந்த காலங்களில் இடம் பெற்ற முக்கிய நிதி மோசடிகள், முறைகேடுகள், போதைப்பொருள் கடத்தல்கள் போன்றவற்றுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

3.முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்பட்டு வந்த அரசு நிதியுதவியுடனான வீடுகள், ஓய்வூதியம், வாகனங்கள் பணியாளர் சலுகைகள் நாடாளுமன்றத்தின் மூலம் ஒழிக்கப்பட்டுள்ளன.

4.நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான ஓய்வூதிய முறைகள் ஒழிக்கப்பட்டு, அவர்களுக்கான சொகுசு வாகன அனுமதிப் பத்திரச் சலுகைகளும் குறைக்கப்பட்டுள்ளன. இதெல்லாம் அரசாங்கத்தின் பொருளாதாரச் சிக்கனத் தன்மையை வெளிப்படுத்தும் நடவடிக்கைகள்.

5.இந்தத் தொடர்ச்சியில் அரசியல் செல்வாக்கு உள்ளவர்கள் சட்டத்திலிருந்து தப்பிக்கும் நிலையை மாற்றி, சட்டம் அனைவருக்கும் சமம்'' என்ற கொள்கை வலியுறுத்தப்பட்டு வருகிறது. இது மக்களுக்கு ஓரளவுக்கு நம்பிக்கையை அளித்திருக்கிறது.

6. போதைப்பொருள் கட்டுப்பாட்டு நடவடிக்கை ஓரளவுக்குக் கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளதாகவே தெரிகிறது. முன்னரெல்லாம் வட மாகாணத்தின் கடற்கரைகள் உள்பட பல இடங்களிலும் படையினரால் கைப்பற்றப்படும் போதைப்பொருள் பொதிகளைப் பற்றிய செய்திகளும் காட்சிகளும் ஊடகங்களில் வரும். இப்போது அவற்றைக் காண முடியவில்லை.

7.2022 பொருளாதார வீழ்ச்சிக்குப் பிறகு மெல்ல மெல்ல பொருளாதார ஸ்திரத்தன்மையை நோக்கி நாடு நகர்ந்து கொண்டிருக்கிறது. 2026 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் நாடு 5.1% பொருளாதார வளர்ச்சியைப் பெற்றதாகச் சொல்லப்படுகிறது.

8.மலையகத்தில் தோட்டத் தொழிலாளர்களின் குறைந்த பட்ச நாளாந்த சம்பளத்தை அதிகரிப்பதற்கான வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகள் மற்றும் வாழ்வாதார உதவிகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

9. கடுமையான எதிர்ப்புகளின் மத்தியில் ஞானசார தேரர் விடயத்தில் அரசின் உறுதியான நிலைப்பாடு. இவையெல்லாம் அரசாங்கத்துக்கும் அதனுடைய அபிமானிகள், ஆதரவாளர்களுக்கும் இனிப்பானவை.

மறுவளமாக சில விமர்சனங்களும் மதிப்பீடுகளும் வேறு விதமானவை. முக்கியமாக

1.முந்தைய ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துடன் (IMF) செய்துகொண்ட கடுமையான நிபந்தனைகளை மறுபரிசீலனை (Renegotiate) செய்து, மக்களின் வரிச்சுமையைக் குறைப்பதாக NPP தேர்தல் பிரச்சாரங்களில் உறுதியளித்தது. அது நடைமுறைக்கு வரவேயில்லை. பதிலாக வரிச் சுமையும் வாழ்க்கைச் சுமையுமே அதிகரித்துள்ளது.

2. NPP ஆட்சிக்கு வந்த பின்னர், முந்தைய அரசின் அதே நவதாராளவாதப் பொருளாதாரக் கொள்கைகளையும், IMF இன் அதே கடுமையான நிபந்தனைகளையும் எந்த மாற்றமும் இன்றி அப்படியே தொடர்ந்து நடைமுறைப்படுத்தி வருகிறது.

3. நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிக்கப்படும் என்று தேர்தல் மேடைகளில் NPPயினர் முழங்கினார்கள். ஆட்சியில் அதைச் சுலபமாக மறந்து விட்டனர்.

4. மாகாண சபைகளுக்கான தேர்தல் நடத்தப்படும் என்று உறுதியளிக்கப்பட்டது. அது நடத்தப்படவும் இல்லை. நடத்தப்படுவதற்கான அறிகுறிகளே தெரியவில்லை.

5. பல தசாப்தங்களாக நடைமுறையிலிருந்த சர்ச்சைக்குரிய பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்திற்கு (PTA) பதிலாக,

பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டம் (Protection of the State from Terrorism Act – PSTA) என்ற புதிய சட்டமூலம் கொண்டு வரப்பட்டுள்ளது

6.கல்விக்கான நிதி ஒதுக்கீட்டை நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) 6% ஆக படிப்படியாக உயர்த்துவதாகவும், ஆசிரியர்களின் சம்பளத்தை நாட்டின் மிக உயர்ந்த நிலைக்கு மாற்றுவதாகவும் NPP உறுதியளித்தது. 2026 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டத்தில் (Budget) கல்விக்கான ஒதுக்கீடு வெறும் 1.5% என்ற மிகக் குறைந்த மட்டத்திலேயே நீடிக்கிறது. அதேநேரம், இராணுவத்திற்கான பாதுகாப்புச் செலவினங்கள் 455 பில்லியன் ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது.

7.ஊழல்களை வெளிக் கொண்டு வந்து தண்டனை வழங்குவதாகக் கூறி 'ஊழல் ஒழிப்பு' முழக்கத்தை முன்னிறுத்தியே NPP வென்றது. ஆனால், கடந்த இரண்டு வருடங்களில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பெரும்பாலும் மேலோட்டமான நாடகமாகவே (Cosmetic Theatre) உள்ளதே தவிர, முறையான நிறுவன ரீதியான கட்டமைப்பு மாற்றங்களோ அல்லது பெரியளவிலான தண்டனைகளோ வழங்கப்படவில்லை.

8.மலையகத் தொழிலாளர்களின் சம்பளத்தை அதிகரிப்பதில் அரசாங்கம் சட்ட ரீதியான நகர்வுகளை மேற்கொண்ட போதிலும், பெருந்தோட்ட நிறுவனங்களின் தன்னிச்சையான பணிச்சுமை அதிகரிப்பைக் கட்டுப்படுத்தாததும், காணி மற்றும் வீட்டுரிமை போன்ற அடிப்படை வாழ்வாதாரக் கோரிக்கைகளை நிறைவேற்றாததும் மலையக மக்கள் மத்தியில் NPP அரசு மீதான அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக இந்த 1.750 ரூபா சம்பள உயர்வை வழங்குவதற்குப் பெருந் தோட்ட நிறுவனங்கள் தொழிலாளர்கள் மீது அதிகப்படியான வேலைப் பளுவை (Target) திணித்து வருகின்றன. ஒரு நாளில் பறிக்க வேண்டிய கொழுந்தின் அளவை நிறுவனங்கள் கணிசமாக உயர்த்தியுள்ளதால், வயதான மற்றும் பெண் தொழிலாளர்கள் கடும் அவதிக்குள்ளாகியுள்ளனர்.

9. மலையகத்தில் உள்ள பின் தங்கிய பெருந்தோட்டப் பாடசாலைகளின் கல்வித் தரத்தை உயர்த்த அரசு தவறியுள்ளதுடன், ஐஆகு பொருளாதாரச் சீர்திருத்தங்களின் ஒரு பகுதியாக, கிராமப்புற மற்றும் தோட்டப்புற சிறிய பாடசாலைகளை மூடும் அல்லது ஒன்றிணைக்கும் மறைமுக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

10. மலையகப் பகுதிகளின் உட்கட்டமைப்பு மற்றும் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக முந்தைய காலங்களில் உருவாக்கப்பட்ட "புதிய கிராமங்கள், அபிவிருத்தி அதிகார சபை'' (New Villages Development Authority) போன்ற பெருந்தோட்டப் பிராந்தியங்களுக்கான சிறப்பு நிறுவனங்கள் தற்போதைய NPP ஆட்சியில் முடக்கப்பட்டு அல்லது செயலற்றுப் போயுள்ளன.

11. தற்போதைய பொருளாதார நெருக்கடி மற்றும் ஐஆகு நிபந்தனைகளைக் காரணம் காட்டி, மலையக மக்களுக்கான புதிய வீட்டுத் திட்டங்களுக்குப் போதுமான நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை. மேலும், காணி வழங்குவது தொடர்பாகப் பிரதிநிதிகள் கோரிக்கை விடுக்கையில், நிலக் பற்றாக்குறை மற்றும் சட்டச் சிக்கல்களைக் காட்டி அரசு காலம் தாழ்த்தப்படுகிறது.

12. முஸ்லிம்களின் பாதுகாப்புத் தொடர்பான நிலை இன்னமும் உத்தரவாதப்படுத்தப்படாமலே உள்ளது.

13. முறைமை மாற்றம்' (System Change) நிறைவேற்றப்படும் என்று நம்பிக்கை அளிக்கப்பட்டாலும் இன்னும் அது சாத்தியமாகவில்லை.

14. முந்தைய ஆட்சியாளர்கள் கடைப்பிடித்த சிங்கள பௌத்த மேலாதிக்கச் சிந்தனையை விட்டு விலகாத, அதே பாணியிலான ஆட்சியைத் தொடருதல்.

கட்டுரையாளர்:
கிளிநொச்சியில் இருந்து
– கருணாகரன் –

15. சிறுபான்மைத் தேசிய இனங்களின் உரிமைகளில் அக்கறையற்ற தன்மை. அதிகாரப் பகிர்வுக்கும் அரசியல் தீர்வுக்கும் தயாரற்ற நிலைமை.

16. புதிய அரசியலமைப்பைக் கொண்டு வருவதில் காட்டப்படும் தயக்கம்.

17. தேசிய பொருளாதாரக் கொள்கையை உருவாக்க முடியாமல் தடுமாறுவது.

18. தேசியப் பிரச்சினைகள் எதையும் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தோடு, அவற்றுக்கான நிகழ்ச்சி நிரலை உருவாக்க வேண்டியிருந்தும், அதில் ஈடுபடாமல், காலத்தைக் கடத்துவது.

19. பெருந்திரள் மக்களின் அதிகாரத்தையும் அரசியல் அபிலாஷைகளையும் சிறு குழுவினரான JVP யினர் கட்டுப்படுத்தி வைத்திருப்பது. அல்லது அதில் ஆதிக்கம் செலுத்துவது.

20. ஜனநாயக அடித்தளத்தை NPP அரசாங்கம் பேணும். அரசியல் தலையீடுகளைக் கட்டுப்படுத்தும் என்று ஜனாதிபதி அநுர குமாரதிசநாயக்க அழுத்தமாகச் சொன்னாலும் நடைமுறையில், கட்சியினரே அனைத்தையும் கையாள்கின்றனர். அவர்களுக்கே அதிகாரம் அதிகளவு அளிக்கப்பட்டுள்ளது.

21. மக்களுடைய வாழ்க்கைச் சுமை மேலும் மேலும் கூடும் நிலையே உள்ளது. அதைக் குறைப்பதற்கான எத்தகைய நம்பிக்கைத் திட்டங்களையும் காண முடியவில்லை.

22. பௌத்தமயமாக்கல் இன்னும் கட்டுப்படுத்தப்படவில்லை. நாடு முழுவதிலும் உள்ள மலைச் சிகரங்களில் புத்தர் சிலைகளை வைப்பதையே அபிவிருத்தி என்று அரசாங்கம் நம்புவதாகத் தெரிகிறது.

23. புதிய அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில் பொருளாதார முன்னேற்றத்துக்காக எத்தகைய திட்டங்கள் உருவாக்கப்பட்டு, இயங்குகின்றன? அரசியல் தீர்வுக்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் விளைவு என்ன? என்று இதுவரையில் சொல்லப்படவில்லை. என்பதால் மக்கள் இருளுக்குள் கைத்தடியைத் தேடுகிறார்கள்.

இப்படி ஒரு நெடும்பட்டியல் NPP ஆட்சியின் மீதான குறைபாடுகளாகவும் குற்றங்களாகவும் உள்ளது. இவை அவ்வளவும் கவனித்துச் செயற்படுத்தப்பட வேண்டியவை. ஆட்சிக் காலம் இன்னும் மூன்று ஆண்டுகள் மட்டுமே உள்ளது. அதற்கிடையில் நிறைவேற்றப்பட வேண்டிய அவசியப்பணிகள் ஏராளம் உண்டு. செல்ல வேண்டிய பயணத் தூரம் மிக நீண்டது. அதைச் செய்து முடிப்பதும் பெரிய விடயமல்ல. தயக்கங்களை விட்டுத் துணிந்தாலே பாதித்தூரத்தை நடக்காமலே கடந்து விடலாம்.

இப்போது அநுரகுமார திசநாயக்க என்ற (18ம் பக்கம் பார்க்க)

செம்மணிக்குள் புதைக்கப்பட்டவர் யார்?

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
- நிலாந்தன் -

செம்மணி அகழ்வாராய்ச்சி தொடர்பான பேராசிரியர் ராஜ் சோமதேவவின் அறிக்கை வெளிவந்திருக்கிறது. அது ஓர் இடைக்கால அறிக்கை. இறுதி அறிக்கை அல்ல. ஆனால் பின் வரக் கூடிய முடிவுகளில் அது செல்வாக்குச் செலுத்தக் கூடியது. ஏற்கனவே இரண்டு இடைக்கால அறிக்கைகள் வெளிவந்திருக்கின்றன. இந்த அறிக்கைகளில் பேராசிரியர் என்ன சொல்லி இருக்கிறாரோ அதற்கு முரணான விதத்தில் கடைசியாக வந்த அறிக்கை காணப்படுகிறது. மேலும் கடந்த ஆண்டு வெளிவந்த இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அறிக்கையில் செம்மணி தொடர்பாகக் கூறப்பட்டிருப்பவற்றோடும் அது முரண்படுகிறது. இந்த முரண்பாடுகளை நாடாளுமன்றத்தில் கஜேந்திரகுமார் சுட்டிக்காட்டிப் பேசியிருக்கிறார்.

செம்மணியில் உடல்கள் தாறுமாறாக புதைக்கப்பட்டிருக்கின்றன என்பதைத்தான் அங்கிருந்து எடுக்கப்படும் எலும்புக்கூடுகள் நிரூபித்திருக்கின்றன. அதில் பெரும்பாலான உடல்களுக்கு உரிய பண்பாட்டு மரியாதை செலுத்தப்படவில்லை. வழமையாக உடல்களைப் புதைக்கும் போது பின்பற்றப்படும் பண்பாட்டு நடைமுறைகள் பின்பற்றப்படவில்லை என்ற சந்தேகத்தை அறிக்கையும் வெளிப்படுத்துகின்றது.

தமிழ் மக்கள் மத்தியில் அவர்களுடைய பண்பாட்டு நம்பிக்கைகளின் அடிப்படையில் இறந்தவர்களின் உடல்களை ஒன்றாகப் புதைக்கும் வழமை உண்டா? தாயின் உடலும் குழந்தையின் உடலும் ஒன்றாகப் புதைக்கப்படுவது உண்டா? தியானம் இருப்பது போன்ற நிலையில் உடல்களை இருத்தி சுடலைகளில் புதைப்பது உண்டா? சுடலைகளில் சந்நியாசிகளின் உடல்களை சமாதி வைப்பதுண்டா? ஓர் உடலை அடக்கம் செய்யும் போது அதற்குரிய சவஅடக்கப் பண்பாட்டு நடைமுறைகள் முழுமையாக பேணப்பட்ட எத்தனை எலும்புக்கூடுகள் செம்மணியில் அகழ்ந்து எடுக்கப்பட்டன?

இத்தனைக்கும் செம்மணி ஒரு சுடலை. அங்கே பெரும்பாலும் தகனங்கள் தான் இடம்பெறும். சில சமயம் சந்தேகத்துக்கிடமான விதங்களில் இறந்தவர்களின் உடல்கள் எரிக்கப்படுவதில்லை. புதைக்கப்படுவதுண்டு. ஆனால் அது ஒரு பெரும் போக்கோ அல்லது பொதுப் போக்கோ அல்ல. ஆனால் செம்மணியில் பெரும்பாலான உடல்கள் பண்பாடு வழமைகளின்றிப் புதைக்கப்படக் காரணம் என்ன?

ஒருவருடைய உடல் பண்பாட்டு மரியாதைகள் இன்றி சடங்குகள் இன்றி எப்பொழுது புதைக்கப்படுகிறது? புதைக்கப்படும் காலம் ஓர் அனர்த்த காலமாக இருந்தால் அது அவ்வாறு புதைக்கப்படும். அல்லது புதைப்பவர்கள் அந்த உடலை மரியாதைக்குரிய ஒன்றாக கருதவில்லை என்றாலும் அது தாறுமாறாகப் புதைக்கப்படும்.

பேராசிரியர் ராஜ் சோமதேவ கூறுகிறார். உடல்கள் அவ்வாறு அவசரமாக புதைக்கப்பட்டதற்கு காரணம் பெரும்பாலும் இயற்கை அனர்த்தங்கள் அல்லது பெருந்தொற்று நோய்கள் காரணமாக இருக்கலாம் என்று. ஆனால் யுத்த அனர்த்தத்தை அவர் அங்கே ஓர் ஊகமாகத்தானும் முன்வைக்கவில்லை.

நாட்டின் நவீன வரலாற்றில் கடந்த நூற்றாண்டின் முற்பகுதியில் 1934, 1935 ஆம் ஆண்டுகளில் நாட்டைத் தாக்கிய மலேரியா ஆயிரக்கணக்கானவர்களை (80.000)கொன்றிருக்கிறது. ஆனால் அதன் தாக்கம் யாழ்ப் பாணத்தில் இருக்கவில்லை என்று அறிக்கைகள் காட்டுகின்றன. அந்த அடிப்படையில் கடந்த சுமார் 90 ஆண்டு கால பகுதிக்குள். மலேரியாவைத் தவிர 2004ஆம் ஆண்டு சுனாமி தாக்கியது. அதன் பின் 2020 ஆம் ஆண்டு கோவிட் பெரும் தொற்று நோய் தாக்கியது. இந்த இரண்டு சந்தர்ப்பங்கள் தான் தமிழ் மக்களின் நவீன வரலாற்றில் கடந்த 90 ஆண்டுகாலப் பகுதிக்குள் நிகழ்ந்த இயற்கை அனர்த்தங்கள் மற்றும் பெருந் தொற்றுநோய்த் தாக்கங்கள் ஆகும்.

இக்காலப் பகுதியில் இறந்தவர்களின் உடல்கள் உரிய மரியாதைகள் இன்றி புதைக்கப்படும் அளவுக்கு ஒரு காலம் அதாவது யாரும் யாருக்கும் உதவ முடியாத ஒரு காலம் இருந்ததா என்று பார்த்தால் சுனாமிப் பேரலையில் கொல்லப்பட்டவர்களின் உடல்களை கொத்துக் கொத்தாக அகற்ற வேண்டிய நிலைமை இருந்தது. ஆனால் அகாலகட்டத்தில் செம்மணியில் உடல்கள் புதைக்கப்பட்டனவா? சுனாமியில் கொல்லப்பட்டவர்களின் உடல்கள் செம்மணிக்கு கொண்டு வரப்படவில்லை என்று தெரிகிறது.

2021பெருந் தொற்றுநோய் காலத்தில் உடல்கள் எரிக்கப்பட்டன. புதைக்கப்படவில்லை. அதனால் தான் அப்போதிருந்த அரசாங்கம் முஸ்லிம்களின் உணர்வுகளை புண்படுத்தும் முடிவுகளை எடுத்தது. எனவே தொகுத்துப் பார்த்தால் 1934ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரையிலுமான சுமார் 90 ஆண்டுகால பரப்பிற்குள் ஈழத் தமிழர்களின் வரலாற்றில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தங்கள் மற்றும் பெரும் தொற்று நோய்களின் போது ஒருவர் மற்றவருக்கு உதவ முடியாத ஒரு சூழல் அல்லது இறந்தவர்களை அமைதியாக அவர்களுக்குரிய சடங்குகளோடு மரியாதையாகப் புதைக்க முடியாத ஒரு கொடிய நிலைமை இருந்தது என்று கூறமுடியாது.

ஆனால் இக்காலப் பகுதிக்குள் சோமதேவ ராஜபக்ஷ கூறாத அல்லது கூற விரும்பாத ஒரு விடயம் உண்டு. அது தான் யுத்தம். யுத்த காலங்களில் அப்படி ஒரு கொடிய சூழல் நிலவியது. இறுதிக் கட்டப் போர்க்காலத்தில் வன்னி கிழக்கில் அச்சூழல் நிலவியது. அதற்கு முன்னரும் படை நடவடிக்கைகளின் போதும் இடப்பெயர்வுகளின் போதும் இறந்தவர்களின் உடல்களை உரிய மரியாதைகளோடு புதைக்க முடியாத கால கட்டங்கள் இருந்தன. அந்தச் சந்தர்ப்பங்களில் உடல்கள் அவசரமாக எரிக்கப்பட்டிருக்கலாம். அல்லது புதைக்கப்பட்டிருக்கலாம். அதிலும் குறிப்பாக கைது செய்யப்பட்ட தமிழ் மக்களை காணாமல் ஆக்கியவர்கள் கொல்லப்பட்டவர்களின் உடல்களை அவசரமாகத் தான் அகற்றுவார்கள். ஏனென்றால் அவர்களைப் பொறுத்தவரை அந்த உடல் ஒரு சான்று. அது ஒரு பூத உடலல்ல.

உறவினர்களுக்குத் தான் அது ஒரு பூத உடல். அது உயிருடன் இருந்தவரின் தொடர்ச்சி. எனவே உயிருடன் இருந்தவருக்கு உரிய மரியாதைகளை அதற்கும் கொடுத்து அதனை அடக்கம் செய்வார்கள். ஆனால் காணாமல் ஆக்குபவர்கள் தாங்கள் காணாமல் ஆக்கியவரின் உடலை ஒரு பூத உடலாகப் பார்க்க மாட்டார்கள். அதனை அவர்கள் ஒரு சான்றுப் பொருளாக மறைக்கப்பட வேண்டிய சான்றுப் பொருளாகத் தான் பார்ப்பார்கள். எனவே அந்தச் சான்றுப் பொருளை எப்படிப் புதைத்து அகற்றலாம் என்றுதான் சிந்திப்பார்கள். அல்லது எரிப்பார்கள்.

செம்மணியும் உட்பட மனித புதைகுழிகள் இருப்பதாக சோமரட்ன ராஜபக்ச கூறும் இடங்களில் அவ்வாறு தமிழ் உடல்கள் புதைக்கப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது. அதிலும் குறிப்பாக இப்பொழுது அகழ்ந்தெடுக்கப்படும் இடமானது சோமரட்ண ராஜபக்ஷ.கால் நூற்றாண்டுக்கு முன் சுட்டிக் காட்டிய இடமா? அவர் சுட்டிக் காட்டிய ஏனைய இடங்கள் இப்பொழுதும் அகழப்படாதுள்ளன. இப்பொழுது நடந்து கொண்டிருக்கும் அகழ்வுப் பணிகள் எதிர்பாராத விதமாக தொடங்கப்பட்டவை. சித்துப்பாத்தி மைதானத்தில் மின்தகன மேடை அமைப்பதற்காக நிலத்தைக் கிண்டிய பொழுது எலும்புக்கூடுகள் வெளிப்பட்டன. அங்கிருந்து தான் இந்தப் புதைகுழி அடையாளம் காணப்பட்டது.

நிச்சயமாக சோமரட்ண ராஜபக்ச கொடுத்த வாக்குமூலத்தின் அடிப்படையில் அல்ல. அல்லது அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்காக தமிழ் மாந்திரீகர்கள் செய்த பில்லி சூனியத்தின் விளைவும் அல்ல.

சோமரட்ண ராஜபக்சவின் வாக்கு மூலத்தின் அடிப்படையில் இப்பொழுதும் கிண்டப்படாத இடங்கள் உண்டு. பேராசிரியர் சோமதேவவின் அறிக்கை அந்தப் பிரதேசத்தில் மேலும் புதைகுழிகள் இருக்கலாம் என்ற ஊகத்தை முன் வைக்கின்றது. அந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட அன்று குற்றப் புலனாய்வுத் துறையினர் நீதிமன்றத்திடம் சோமரட்ன ராஜபக்சவையும் விசாரிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்திருக்கிறார்கள். அது ஒரு நல்ல திருப்பம். அவர் வாய் திறந்தால் கடந்த சுமார் இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக புதைக்கப்பட்டிருக்கும் எலும்புக்கூடுகள் பேசத் தொடங்குமா?

எனினும் கடந்த வாரம் வெளிவந்த பேராசிரியரின் இடைக்கால அறிக்கையானது தமிழ்மக்கள் மத்தியில் ஏற்கனவே அவர் தொடர்பாக நிலவிய சந்தேகங்களை உருப் பெருக்கியிருக்கிறது. பேராசிரியர் சோமதேவ ஏற்கனவே மன்னார் சதோச வளாகத்தில் உள்ள மனிதப் புதை குழி தொடர்பாகத் தெரிவித்த கருத்துக்கள் தமிழ் மக்கள் அவர் மீது சந்தேகப்படக் காரணமாயின. பல நூற்றாண்டுகளுக்கு முன்பு உடல்கள் புதைக்கப்பட்டதாக அவர் அடையாள கண்ட அந்த புதைகுழிக்குள் 1954ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட மலிபன் பிஸ்கட் கொம்பனியின் பிஸ்கற் பக்கற் ஒன்றின் உறை காணப் பட்டது. மேலும் அவர் கோத்தபாய ராஜபக்சவின் காலத்தில் உருவாக்கப்பட்ட சர்ச்சைக்குரிய செயலணிகளில் ஒன்றில் அங்கத்தவராக இருந்தவர். அது கிழக்கிற்கான பௌத்த மரபுரிமைச் சின்னங்களைப் பாதுகாப்பதற்கான செயலணியாகும்.

இப்படியாக ஏற்கனவே சோமதேவ மீது தமிழ்ச் சமூகத்துக்கு இருந்த சந்தேகங்களை கடந்த வாரம் வெளி வந்த அறிக்கை மேலும் பலப்படுத்தி இருக்கிறதா? அது ஓர் இடைக்கால அறிக்கை தான். அதுவே இறுதியானது அல்ல. அதை அந்த அறிக்கை தெளிவாகக் கூறுகிறது. ஏனைய துறைசார் நிபுணத்துவ ஆய்வு முடிவுகளின் பின்னரே இறுதி முடிவுக்கு வரலாம் என்றும் அங்கே கூறப்படுகிறது. பேராசிரியர் சோமதேவ போலவே ஏனைய துறைசார் நிபுணர்களும் செயற்படலாம் என்று தமிழ்மக்கள் சந்தேகிக்கக்கூடிய வாய்ப்புகள் இப்பொழுது அதிகமாக தெரிகின்றன. எனவே தமிழ் மக்கள் தங்களுக்கு நீதி வழங்கப்பட்டதாக நம்ப வேண் டும். அப்படிப் பார்த்தால் தமிழ் மக்களின் பிரதான கோரிக்கை ஆகிய பன்னாட்டு விசாரணைப் பொறி முறை ஒன்றுக்கூடாக உண்மை யைக் கண்டறிவது தான் தமிழ் மக்களின் நம்பிக்கையை வென்றெ டுப்பதற்கு அரசாங்கத்துக்கு உள்ள ஒரே வழியாகும். நாட்டில் இனவாதம் இல்லை என்பதை நிரூபிப்பதற்கும் அதுதான் வழி.

இந்தியாவும் இலங்கையும் பாக்கு நீரிணையைக் காப்பாற்ற கச்சதீவைத் தாண்டி சிந்திக்க வேண்டும்

இந்திய உச்ச நீதிமன்றத்தில் அண்மையில் நடைபெற்ற விசாரணைகள் கச்சத்தீவு தொடர்பான விவாதத்தை வழக்கமாக எழுப்பப்படும் இறைமை குறித்த கேள்விக்கு அப்பால் கொண்டு செல்வதற்கான வாய்ப்பை வழங்குகின்றன. 1974 மற்றும் 1976 ஆம் ஆண்டுகளில் இந்தியா—இலங்கை இடையே மேற்கொள்ளப்பட்ட கடல்சார் ஒப்பந்தங்களை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை விசாரித்த போது சர்வதேச கடல் எல்லையைத் தாண்டி இலங்கைக் கடற்பரப்புக்குள் நுழைவதால் ஏற்படும் விளைவுகள் குறித்து மீனவர்களுக்கு விழிப்புணர்வுட்டுமாறு மத்திய அரசையும் தமிழக அரசையும் நீதிமன்றம் வலியுறுத்தியது.

இதற்கிடையில், அந்த ஒப்பந்தங்களை மீண்டும் திறந்து பரிசீலிக்கும் நோக்கம் தமக்கு இல்லை என்றும், இந்திய மீனவர்கள் தொடர்பான பிரச்சினைகளை இராஜதந்திர வழிமுறைகள் ஊடாகக் கையாள்வதாகவும் இந்திய அரசாங்கம் தெளிவுபடுத்தியுள்ளது.

மேலும் முக்கியமாக இந்தியக் கடற்பரப்பில் மீன் வளம் குறைந்து வருவதே மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்புக்குள் நுழைவதற்கான காரணங்களில் ஒன்று என இந்தியச் சட்டமா அதிபர் சுட்டிக் காட்டினார். விசாரணையின்போது, மீன்பிடி நடைமுறைகள் மற்றும் இந்தியக் கரையோரக் கடற்பரப்பின் நிலைமை குறித்தும் நீதிமன்றம் கேள்விகளை எழுப்பியது.

இந்தக் கருத்துகள் ஓர் அடிப்படையான கேள்வியை முன்வைக்கின்றன: கச்சத்தீவு மீதான தொடர்ச்சியான கவனம், உண்மையான நெருக்கடியிலிருந்து இந்தியாவையும் இலங்கையையும் திசை திருப்புகிறதா? அந்த உண்மையான நெருக்கடி பாக்கு நீரிணையின் கடல் வளங்கள் அழிந்து வருவதும், சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் அழிவுகரமான மீன்பிடி முறைகள் தொடர்ந்து நிலவுவதும் தானா?

ஒரு தீவை விடப் பெரிய பிரச்சனை

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் இந்தியாவும் இலங்கையும் இரண்டு கடல்சார் எல்லை ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டன. அவற்றில் ஒன்று 1974 ஆம் ஆண்டிலும் மற்றொன்று 1976 ஆம் ஆண்டிலும் மேற்கொள்ளப்பட்டன. இந்த ஒப்பந்தங்கள் சர்வதேச கடல் எல்லைக் கோட்டை வரையறுத்ததுடன், கச்சத்தீவு மீதான இலங்கையின் இறைமை உள்ளிட்ட இரு நாடுகளினதும் கடல்சார் அதிகார வரம்புகளையும் நிறுவின.

இந்த ஒப்பந்தங்கள், இலங்கைக் கடற்பரப்பில் இந்திய மீனவர்களுக்கு பாரம்பரிய மீன்பிடி உரிமைகளை வழங்கவில்லை. அதேபோன்று இந்தியக் கடற்பரப்பில் இலங்கை மீனவர்களுக்கு பரஸ்பர மீன்பிடி உரிமைகளையும் அவை வழங்கவில்லை.

இந்த ஒப்பந்தங்களுக்கு எதிரான அரசியலமைப்பு மற்றும் சட்ட ரீதியான சவால்கள் இந்திய உச்ச நீதிமன்றத்தில் இன்னமும் நிலுவையில் உள்ளன. அவற்றின் அரசியலமைப்புச் செல்லுபடித்தன்மை குறித்து நீதிமன்றம் இதுவரை தீர்ப்பளிக்கவில்லை. இந்த விவகாரம் இன்னமும் விசாரணைக்காக நிலுவையில் உள்ளது.

எனினும் இருதரப்பு உறவுகளைப் பொறுத்தவரையில், அடுத்தடுத்து ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் இந்த ஒப்பந்தங்களின் மூலம் நிறுவப்பட்ட கடல்சார் எல்லையை இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை நிர்வகிப்பதற்கான அடிப்படையாகக் கருதி வந்துள்ளன.

தமிழகமீனவச் சமூகங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் உண்மையானவை. கடல் எல்லையைத் தாண்டியதன் பின்னர் படகுகள் தடுத்து வைக்கப்படுவதும் மீனவர்கள் கைது செய்யப்படுவதும் அவர்களுக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் பொருளாதார நெருக்கடிகளை ஏற்படுத்துகின்றன.

தடுத்து வைக்கப்பட்டுள்ள மீனவர்களையும் பறிமுதல் செய்யப்பட்ட படகுகளையும் விடுவிப்பதற்காக இந்திய அரசாங்கம் தலையிட வேண்டும் எனத் தமிழக முதலமைச்சர் சி. ஜோசப் விஜய் அண்மையில் வலியுறுத்தியதுடன், மீண்டும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்குமாறும் கோரியுள்ளார். ஆனால், இந்த உடனடிப் பிரச்சினைகள் ஒரு பெரிய கேள்வியை முன்வைக்கின்றன: மீன் வளம் ஏன் குறைந்து வருகிறது? அதை மீண்டும் மீட்டெடுப்பதற்கு என்ன செய்ய முடியும்?

மீண்டும் மீண்டும் இராஜதந்திர ரீதியில் கோரிக்கைகளை முன் வைப்பதன் மூலமோ, கைது செய்தல், விடுவித்தல் மற்றும் மீன்பிடிப் படகுகளைத் திருப்பிக் கொடுக்குமாறு கோருதல் போன்ற நடவடிக்கைகளின் மூலமோ இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது. கச்சத்தீவு குறித்த அரசியல் விவாதத்தைத் தொடர்ந்து மீண்டும் கிளறுவதன் மூலமும் இதனைத் தீர்க்க முடியாது.

பாக்கு நீரிணை என்பது இரு நாடுகளும் பகிர்ந்து கொள்ளும் ஓர் இயற்கைச் சூ ழலியல் அமைப்பாகும். அதன் வளங்கள் வரையறுக்கப்பட்டவை. கடல் வளத்தின் ஆரோக்கியமே, கடல் எல்லையின் இரு புறங்களிலும் வாழும் மீனவச் சமூகங்கள் தொடர்ந்து அதனை நம்பி வாழ்வாதாரத்தைப் பெற முடியுமா என்பதைத் தீர்மானிக்கிறது.

சூழலியலுக்கு ஏற்படும் பாதிப்பு

அடித்தள இழுவைமடி மீன்பிடியே இந்தப் பிரச்சினையின் மையத்தில் உள்ளது. கடற்படுகையின் மீது கனமான வலைகளை இழுத்துச் செல்வதால் கடல்வாழ் உயிரினங்களின் வாழிடங்கள் அழிக்கப்படுகின்றன. இளம் மீன்களும் பிடிக்கப்படுகின்றன. மேலும், இலக்காகக் கொள்ளப்படாத கடல்வாழ் உயிரினங்களும் கணிசமான அளவில் வலைகளில் சிக்குகின்றன. இதன் விளைவுகள் காலப்போக்கில் அதிகரிப்பதுடன், நீண்டகாலப் பாதிப்புகளையும் ஏற்படுத்தக்கூடும். எனவே பிரச்சினை என்பது மீனவர்கள் சர்வதேச கடல் எல்லையைத் தாண்டுகிறார்களா என்பதுடன் மட்டும் மட்டுப்படுத்தப்படுவதில்லை. பெரிய அளவில் மேற்கொள்ளப்படும் அழிவுகரமான மீன்பிடி நடவடிக்கைகள் கடல் சூழலியல் அமைப்பின் மீது ஏற்படுத்தும் தாக்கமும் இதில் முக்கியமானதாகும்.

ஒரு காலத்தில் செழிப்பான மீன்பிடித் தொழிலைக் கொண்டிருந்த இலங்கையின் வடக்கு மாகாணத்தில் மீன் பிடிப்பு கணிசமாகக் குறைந்துள்ளது. 1995 ஆம் ஆண்டில் 35,000 மெட்ரிக் தொன்னாக இருந்த மீன் பிடிப்பு, 2023 ஆம் ஆண்டில் 17,000 மெட்ரிக் தொன்னாக வீழ்ச்சியடைந்துள்ளது.

பல காரணிகள் இந்த வீழ்ச்சிக்குப் பங்களித்துள்ளன. பல தசாப்தங்களாக நீடித்த மோதல்களினதும் இடப்பெயர்வுகளினதும் தாக்கங்களும் அவற்றில் அடங்குகின்றன. எனினும், பாக்கு நீரிணையில் பெரிய அளவில் மேற்கொள்ளப்படும் இழுவைமடி மீன்பிடியினால் ஏற்படும் அழுத்தம், வடபகுதி மீனவச் சமூகங்கள் எதிர்கொள்ளும் சிரமங்களை மேலும் அதிகரித்துள்ளது.

எனவே இரு தரப்பிலும் உள்ள மீனவர்களின் நீண்டகால நலன்கள் ஒன்றாகவே இருக்க வேண்டும்: தமது வாழ்வாதாரம் சார்ந்துள்ள கடல் வளத்தைப் பாதுகாப்பது.

தொடர்ச்சியான ஆனால் செயலற்ற அணுகுமுறை

கச்சத்தீவு தொடர்பாக இலங்கை கடந்த ஐந்து தசாப்தங்களாகத் தொடர்ச்சியானதும் நிதானமானதுமான நிலைப்பாட்டைப் பேணி வந்துள்ளது. நிறுவப்பட்ட சட்ட மற்றும் இராஜதந்திரக் கட்டமைப்புகளுக்கு உட்பட்டே அது செயற்பட்டுள்ளது. இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால உறவுகளின் அடையாளமாகவும் கச்சத்தீவு இருந்து வருகிறது. குறிப்பாக, அங்குள்ள புனித அந்தோனியார் தேவாலயமும் இரு நாடுகளிலிருந்தும் பக்தர்கள் பங்கேற்கும் வருடாந்தத் திருவிழாவும் இந்த உறவுகளின் அடையாளங்களாக விளங்குகின்றன.

ஆனால் கச்சத்தீவுக்கு இன்றைய சூழலில் ஆக்கபூர்வமானதொரு பங்கை வழங்குவதற்கு இலங்கை மிகக் குறைந்தளவிலேயே முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. இந்த நிலைமை மாற வேண்டும். சில ஆண்டுகளுக்கு முன்னர், மூலோபாய விவகாரங்கள் தொடர்பான ஆய்வு நிறுவனமான பாத்ஃபைண்டர் அறக்கட்டளை (Pathfinder Foundation) கச்சத்தீவில் கடல்சார் ஆய்வு நிலையமொன்றை அமைக்கும் யோசனையை முன் வைத்தது. இலங்கை மீன்பிடித் திணைக்களம், தேசிய நீர்வாழ் உயிரின வள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவர் நிலையம் (NARA), இலங்கைப் பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றின் தலைமையில் இந்த நிலையம் இயங்க வேண்டும் என்பதே அந்த முன்மொழிவாகும். இந்த முன்மொழிவு மீண்டும் பரிசீலிக்கப்பட வேண்டியதாகும்.

கச்சதீவை அறிவியல் ஆய்வுக்கான தளமாக மாற்றுதல்

கடல்சார் ஆய்வு நிலையமொன்று அமைக்கப்படுவது, பாக்கு விரிகுடாவின் பரந்த சூழலியல் அமைப்பைப் பாதுகாப்பதில் பங்களிப்புச் செய்வதுடன், தனது கடற்பரப்பில் பொறுப்பான வள முகாமைத்துவத்தை மேற்கொள்வதற்கான நடைமுறை வாய்ப்பையும் இலங்கைக்கு வழங்கும். அத்தகைய நிலையம் பின்வரும் பணிகளை முன்னெடுக்க முடியும்:

கடல்வாழ் உயிரினப் பல்வகைமையையும் சூழலியல் சீரழிவையும் கண்காணித்தல்.

அடித்தள இழுவைமடி மீன்பிடியின் நீண்டகாலத் தாக்கங்களை மதிப்பிடுதல்.

(22ம் பக்கம் பார்க்க)

சீனாவின் நகர்வு அமெரிக்காவை கோபப்படுத்துமா?

சீன வங்கியின் கொழும்புக் கிளை, இலங்கையின் முதலாவது யுவான் தீர்வு வங்கியாகச் செயற்பட ஆரம்பித்துள்ளது.

இதனை ஒரு நிதிசார் செயற்பாடாக அல்லது பொருளாதார நடவடிக்கையாக மட்டும் கருத முடியாது. அதற்கு அப்பால் பூகோள அரசியல், பாதுகாப்பு, மூலோபாய நலன்களுடன் நெருங்கிய தொடர்புள்ள விடயம் இது.

இது இலங்கையின் நிதிச் சந்தையிலும் இருதரப்பு வர்த்தகத்திலும் மிக முக்கிய பொருளாதாரத் தாக்கங்களை ஏற்படுத்தக் கூடியது.

இதுவரை இலங்கை இறக்குமதியாளர்கள் சீனாவிலிருந்து பொருட்களை வாங்குவதற்கு, முதலில் இலங்கை ரூபாவை அமெரிக்க டொலராக மாற்றி, பின்னர் அதனை சீன யுவானாக மாற்ற வேண்டியிருந்தது.

புதிய வசதியின் ஊடாக வர்த்தகக் கொடுக்கல் வாங்கல்களை நேரடியாகவே சீன யுவான் நாணயத்தில் மேற்கொள்ள முடியும். இதனால் இடைத்தரகு வங்கிகளுக்கான கட்டணங்கள் மற்றும் நாணய மாற்றுக் கட்டணங்கள் கணிசமாகக் குறையும்.

அதைவிட இலங்கை அந்நியச் செலாவணி (டொலர்) அழுத்தங்களை எதிர் கொண்டுள்ள நிலையில், சீனாவுடனான வர்த்தகத்திற்கு டொலரைப் பயன்படுத்த வேண்டிய தேவை இல்லாமல் போவதால், அமெரிக்க டொலர் மீது தங்கியிருக்கும் நிலை குறைவடையும்.

இது மத்திய வங்கி தனது அமெரிக்க டொலர் கையிருப்பை மிகவும் அவசியமான வேறு தேவைகளுக்குப் பயன்படுத்தவும், அந்நியச் செலாவணி கையிருப்பு முகாமைத்துவத்தை பேணிக் கொள்ளவும் வாய்ப்பை ஏற்படுத்தும்.

உள்நாட்டு வங்கி வலையமைப்பு நேரடியாகச் சீன நிதி அமைப்புடன் இணைக்கப்படுவதால், மூன்றாம் தரப்பு சர்வதேச வங்கிகள் மூலமான தாமதங்கள் தவிர்க்கப்படும்.

உலக சந்தையில் அமெரிக்க டொலரின் மதிப்பில் ஏற்படும் திடீர் ஏற்ற இறக்கங்களால் வர்த்தகர்கள் பாதிக்கப்படுவது தடுக்கப்படும். சீன யுவானில் நேரடியாக விலை நிர்ணயம் செய்யப்படுவதால் வர்த்தக ஒப்பந்தங்களில் நீண்ட கால விலை உறுதித்தன்மை பேணப்படும்.

கொழும்பு துறைமுக நகரம் போன்ற சிறப்பு பொருளாதார வலயங்களில், சீன முதலீட்டாளர்கள் மற்றும் நிறுவனங்கள் நேரடியாக யுவான் நாணயத்தில் முதலீடு செய்வதற்கும் வணிகம் செய்வதற்கும் உந்துசக்தியாக அமையும்.பயண வழிகாட்டி

இலங்கை ஏற்றுமதியாளர்கள் சீனச் சந்தையை சுலபமாக அணுகுவதற்கும் இது வழிவகுக்கும்.

எனினும் சீன வங்கியின் யுவான் தீர்வு வங்கிச் சேவையைப் பயன்படுத்துவதில் பொருளாதார ரீதியாகப் பல நன்மைகள் இருந்த போதிலும், இலங்கை வர்த்தகர்கள் மற்றும் வணிக வங்கிகள் மத்தியில் இதனை உடனடியாக முழுமையாக ஏற்றுக்கொள்வதில் சில நடைமுறைத் தடைகளும் தயக்கங்களும் இருப்பதாக கருதப்படுகிறது.

பல தசாப்தங்களாக இலங்கை வர்த்தகர்கள் அனைத்தையும் அமெரிக்க டொலரிலேயே மேற்கொண்டு பழகிவிட்டனர். சர்வதேச விலைப்பட்டியல்கள், கணக்கியல் நடைமுறைகள் மற்றும் கடன் கடிதங்கள் அனைத்தும் டொலர் முறையிலேயே கட்டமைக்கப்பட்டுள்ளன. சீனாவில் உள்ள பல விநியோகத்தர்கள் கூட தங்களின் பொருட்களுக்கான விலையை யுவானில் நிர்ணயம் செய்வதை விட, அமெரிக்க டொலரில் நிர்ணயம் செய்வதையே இன்னும் விரும்புகின்றனர்.

ஒரு வர்த்தகர் சீனாவிற்கு ஏற்றுமதி செய்து யுவான் நாணயத்தை ஈட்டினால், அந்த நாணயத்தைக் கொண்டு சீனாவிலிருந்து மட்டுமே இறக்குமதி செய்ய முடியும். ஆனால், அதே வர்த்தகர் இந்தியா, ஐரோப்பா அல்லது மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து பொருட்களை இறக்குமதி செய்ய விரும்பினால், அவரிடம் இருக்கும் யுவான் பயன்படாது.

மீண்டும் அதனை டொலராக மாற்ற வேண்டியிருக்கும். இதனால் டொலரைப் போல யுவானை உலகளவில் சுதந்திரமாகப் பயன்படுத்த முடியாது என்ற தயக்கம் உள்ளது. அமெரிக்க டொலர் மற்றும் யூரோ போன்றவை சந்தை விதிகளின்படி சுதந்திரமாக இயங்கும் நாணயங்கள் ஆகும். ஆனால், சீன யுவான் ஓரளவுக்கு சீன மத்திய வங்கியின் கடுமையான கட்டுப்பாடுகள் மற்றும் கொள்கைகளுக்கு உட்பட்டது.

சீனாவின் உள்நாட்டுக் கொள்கை மாற்றங்களால் யுவானின் மதிப்பில் திடீர் மாற்றங்கள் ஏற்படுமோ என்ற அச்சம் மற்றும் அதன் தடையற்ற மாற்றுத்திறன் மீதான சந்தேகம் வர்த்தகர்கள் மத்தியில் உள்ளது.

சீன வங்கியின் கொழும்பு கிளை யுவான் தீர்வு வங்கியாகச் செயற்படத் தொடங்கியுள்ளமை, இலங்கைக்கு மட்டுமல்லாமல் சீனாவுக்கும் புவிசார் அரசியல் மற்றும் பொருளாதார ரீதியாக மிக முக்கிய மூலோபாய நலன்களை அளிக்கக் கூடியது. அமெரிக்க டொலருக்கு மாற்றாக சீன யுவான் நாணயத்தை உலகளாவிய வர்த்தக நாணயமாக மாற்றுவது சீனாவின் நீண்டகால இலக்காகும்.

இலங்கையில் இந்தத் தீர்வு வங்கியைத் தொடங்குவதன் மூலம், தெற்காசிய பிராந்தியத்தில் சீன நாணயத்தின் பயன்பாடும் அதன் சர்வதேச அங்கீகாரமும் மேலும் ஒரு படி முன்னேக்கி நகரும். உலகளாவிய நிதிப் பரிமாற்றங்கள் அனைத்தும் அமெரிக்காவின் 'SWIFT' கட்டமைப்பு மற்றும் டொலர் முறையையே பெரிதும் சார்ந்துள்ளன.

அமெரிக்காவுடன் ஏதேனும் புவிசார் அரசியல் மோதல்கள் ஏற்படும் பட்சத்தில் சீனாவுக்கு எதிரான நிதித் தடைகளின் தாக்கத்தைக் குறைக்க இத்தகைய யுவான் தீர்வு வங்கிகளின் வலையமைப்பு சீனாவுக்கு உதவும். இது சீனாவின் சொந்த எல்லை கடந்த கொடுப்பனவு முறையான CIPS கட்டமைப்பை வலுப்படுத்தும்.

அதேவேளை இலங்கை வர்த்தகர்கள் நேரடியாக யுவான் நாணயத்தைப் பயன் படுத்தத் தொடங்கும் போது அவர்கள் சீனப் பொருட்களை இறக்குமதி செய்வது இன்னும் எளிதாகும். நாணய மாற்றுச் சிக்கல்கள் இல்லாததால், இலங்கை சந்தையில் சீனப் பொருட்களுக்கான தேவை மற்றும் விநியோகம் மேலும் அதிகரிக்கும்.

இது சீன ஏற்றுமதியாளர்களுக்குச் சாதகமான சூழலை உருவாக்கும். கொழும்பு துறைமுக நகரம் மற்றும் அம்பாந்தோட்டை துறைமுகம் போன்ற சீனாவின் பாரிய திட்டங்களில் முதலீடு செய்வதையும், அதற்கான நிதியைக் கையாளுவதையும் இந்தத் தீர்வு வங்கி இலகுபடுத்தும். இந்தியாவின் அண்டை நாடான இலங்கையின் நிதி உள்கட்டமைப்பில் ஆழமாகத் தடம் பதிப்பதன் மூலம் இந்தப் பிராந்தியத்தில் சீனாவின் மூலோபாய மற்றும் பொருளாதார செல்வாக்கு மேலும் பலமடையும் சூழல் உருவாகியுள்ளது. இது சீனாவுக்கு ஒரு பெரிய இராஜதந்திர வெற்றியாகும்.

இலங்கையை ஒரு சோதனைக் களமாகப் பயன்படுத்தி, தனது நாணயத்தின் பலத்தை உலகிற்கு நிரூபிக்கவும், டொலரின் ஆதிக்கத்திற்கு சவால் விடுக்கவும், தனது பாதை மற்றும் அணை முன்னெடுப்பு திட்டங்களின் நிதிப் பாதுகாப்பை உறுதி செய்யவும் இந்த நடவடிக்கை சீனாவுக்கு ஒரு பெரும் வாய்ப்பாக அமைந்துள்ளது.

சீன மத்திய வங்கியான சீன மக்கள் வங்கி, உலகளவில் தனது நாணயத்தை சர்வதேசமயமாக்க 30இற்கு மேற்பட்ட நாடுகள் மற்றும் பிராந்தியங்களில் இத்தகைய அதிகாரப்பூர்வ யுவான் தீர்வு வங்கிகளை நிறுவியுள்ளது சீன வங்கி மட்டுமே 19 நாடுகளில் இந்தச் சேவையை வழங்குகிறது.

ஆசியாவில் ஹொங்காங், மக்காவு, தாய்வான், ஜப்பான், மலேசியா, பிலிப்பைன்ஸ், கம்போடியா, இந்தோனேசியா ஆகிய நாடுகளுக்கு அடுத்து இலங்கையில் இந்த வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அதேவேளை, சீனாவிடமிருந்து பெற்ற யுவான் நிதியை, இலங்கை பயன்படுத்திக் கொள்வதற்கான சூழலை ஏற்படுத்தியுள்ளது.

சீனமற்றும் இலங்கை மத்திய வங்கிகளுக்கு இடையே, 10 பில்லியன் யுவான் (சுமார் 1.4 பில்லியன் அமெரிக்க டொலர்) இருதரப்பு நாணயப் பரிமாற்ற ஒப்பந்தம் 2021 மார்ச்சில் கையெழுத்திடப்பட்டது.

இது தவிர, மத்திய அதிவேக நெடுஞ்சாலை திட்டப் பணிகளை மீண்டும் தொடங்குவதற்காக, சீனாவிடமிருந்து 500 மில்லியன் டொலர் மதிப்புள்ள யுவான் நிதியை கடனாகப் பெற இலங்கை 2025 இல் ஒப்புதல் அளித்துள்ளது. இதுவரை இந்த யுவான் நிதிகள் மத்திய வங்கியின் கையிருப்பில் இருந்தன.

முறையான உள்நாட்டுத் தீர்வு வசதி இல்லாததால் உள்ளூர் வணிகவங்கிகளோ அல்லது வர்த்தகர்களோ இந்த நிதியை தங்களின் அன்றாட சீனாவுடனான இறக்குமதிகளுக்கு நேரடியாகப் பயன்படுத்த முடியாத நிலை இருந்தது.

கட்டுரையாளர்:
தமிழகத்தில் இருந்து
கேணல் ஹரிகரன்



இப்போது கொழும்பில் திறக்கப்பட்டுள்ள சீன வங்கியின் தீர்வுச் சேவை, முடங்கிக் கிடந்த யுவான் நிதியைச் சந்தைக்குக் கொண்டு வருவதற்கான வாய்ப்பை உருவாக்கியுள்ளது.

சீனாவிடமிருந்து 500 மில்லியன் டொலர் மதிப்புள்ள யுவான் கடன் பெறப்பட்ட போது, இலங்கையிடம் யுவான் வருமானம் இல்லாததால், கடனைத் திருப்பிச் செலுத்த மீண்டும் டொலர்களை யுவானாக மாற்ற வேண்டியிருக்கும் என்ற விமர்சனம் எழுந்தது. ஆனால் இப்போது, இந்த தீர்வு வங்கியூடாக சீனாவுடனான வர்த்தகம் நேரடியாக யுவானிலேயே நடக்கும் என்பதால், சீனாவிடமிருந்து பெற்ற கடனை அல்லது மாற்று நிதியை டொலர் மாற்றீடு செய்யாமலேயே, சீனப் பொருட்களின் இறக்குமதிக்கு நேரடியாகச் செலுத்த முடியும்.

சீனா வழங்கிய யுவான் கடன்களும் நிதிகளும் இதுவரை 'பயன்படுத்த முடியாத காகிதப் பணம் போல' மத்திய வங்கியில் முடங்கியிருந்தன. புதிய யுவான் தீர்வு வங்கி, அந்த யுவான் நிதியைச் சந்தையில் புழங்கவிட்டு, இலங்கையின் அமெரிக்க டொலர் பற்றாக்குறைக்கு ஒரு பெரிய நிவாரணத்தை வழங்குவதற்கான சாதகமான சூழலை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

சீனாவின் இந்த நகர்வு, இந்தியா மற்றும் அமெரிக்காவை உற்றுப் பார்க்க வைத்திருக்கிறது.

அமெரிக்காவைப் பொறுத்த வரையில், நேரடியாக உடனடிப் பொருளாதாரப் பேரழிவை ஏற்படுத்தாது. ஆனால், அமெரிக்காவின் புவிசார் அரசியல் செல்வாக்கு மற்றும் அதன் நாணய ஆதிக்கத்திற்கு இ நீண்ட கால சவால்களையும் பாதிப்புகளையும் ஏற்படுத்தும்.

உலக வர்த்தகத்தில் 80 சதவீதத்திற்கும் அதிகமான கொடுக்கல் வாங்கல்கள் அமெரிக்க டொலரிலேயே இடம்பெறும் நிலையில் சீனா போன்ற நாடுகள் டொலரைத் தவிர்த்து விட்டு நேரடியாக யுவானில் வர்த்தகம் செய்யும் போது உலக சந்தையில் அமெரிக்க டொலருக்கான தேவைபடிப்டியாகக் குறையும். இது உலகளவில் தீவிரமடைந்து வரும் டொலர் மூலோபாயத்திற்கு வலுச் சேர்ப்பதாக அமையும்.

சர்வதேச நிதிப் பரிமாற்ற அமைப்பான SWIFT மற்றும் டொலர் கட்டமைப்பைத் (18ம் பக்கம் பார்க்க)

இவ்வாரம் உங்களுக்கு எப்படி?



மேடராசி அன்பர்களே! பலரா லும் செய்ய முடியாத காரியங் களை வெற்றிகரமாக முடிப்பீர் கள். தொழில் வியாபாரத்தில் வாக்கு வன்மையால் எளிதாக நல்ல லாபம் கிடைக்க பெறுவீர்கள். பிரச்சனை களை பேசியே தீர்த்து விடுவீர்கள். உத்யோகத்தில் இருப்பவர்கள் பதவி உயர்வு. கூடுதல் பொறுப்பு கிடைக்க பெறுவார்கள். எதிலும் திட்டமிட்டு செய லாற்றுவதால் மேலதிகாரிகளின் பாராட்டும் கிடைக்கும்.



ரஷபராசி அன்பர்களே! புத்தி சாதுர்யத்தை பயன்படுத்தி காரி யங்களை வெற்றிகரமாக செய்து முடிப்பீர்கள். செயல் திறன் அதிகரிக்கும். தொழில் வியாபாரம் தொடர்பாக அலைச்சல் உண்டாகும். புதிய ஆர்டர்கள் கிடைப்பதில் தாமதம் ஏற்படலாம். பணவரத்து திருப்தி தரும். புதிய வேலைக்கு முயற்சி செய்வது நன்மை தரும். வாழ்க்கை துணை உங்க ளுக்கு பல விதத்திலும் உதவிகள் செய் வார்.



மிதுனராசி அன்பர்களே! மனதில் வீண் குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். நெருக்கடியான சந்தர்ப் பத்தில் உதவிகள் கிடைப்பது கடினமாக இருக்கும். எந்த காரியங்களில் ஈடுபட்டாலும் மனத் தடு மாற்றம் இல்லாமல் இருப்பது நல்லது. தொழில் வியாபாரம் தொடர்பான காரியங் களில் இழுபறியான நிலை காணப்படும். அதிகாரிகள் கூறிய வேலையை செய்து முடிப்பதில் தாமதம் ஏற்படும். சகஊழியர் களிடம் அனுசரித்து செல்வது நல்லது.



கடகராசி அன்பர்களே! செயல் திறன் மேலோங்கும். மதிப்பும், மரியாதையும் கூடும். தொழில் வியாபாரம் தொடர்பாக பயணங் கள் சென்று வரவேண்டி இருக் கும். வியாபாரம் தொடர்பான செலவுகள் அதிகரிக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் வீண் அலைச்சலை சந்திப்பர். குற்றச்சாட்டு களுக்கும் ஆளாகலாம் கவனம் தேவை. குடும்பத்தினரிடம் வாக்குவாதத்தில் ஈடுபடா மல் அனுசரித்து செல்வது நல்லது. மரு த்துவம் தொடர்பான செலவும் ஏற்படலாம்.



சிம்மராசி அன்பர்களே! நண்பர் களுடன் சேர்ந்து செய்யும் காரி யம் சாதகமான பலன் தரும். திட்டமிட்டு செய்யும் பயணங் கள் வெற்றி பெறும். செலவு செய்வது பற்றி யோசனை செய்து தேவையென்றால் மட்டுமே செய் வீர்கள். உத்யோகத்தில் இருப்பவர்கள் சக பணியாளர்கள் மற்றும் உயர் அதிகாரிகளுடன் ஆலோசனை செய்து முக்கிய முடிவுகள் எடுப்பது நன்மை தருவதாக இருக்கும்.



கன்னிராசி அன்பர்களே! எதிர் காலம் தொடர்பான திட்டங்கள் மனதில் தோன்றும். எதையும் முன்னேற்பாட்டுடன் செய்வீர் கள். விவேகம் உண்டாகும். தொழில் வியாபாரம் தொடர்பான விஷயங்கள் சாதகமாக நடந்து முடிய திறமையாக செயல்படுவீர்கள். உத்யோகத்தில் இருப்ப வர்கள் ஏற்கனவே செய்த திறமையான பணிகளுக்கு உரிய நற்பலனை பெறுவார் கள். குடும்பத்தில் தாய்வழி உறவினர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும்.

துலாம்ராசி அன்பர்களே! அறிவு திறமை வெளிப்படும். உங்கள் வார்த்தைக்கு மதிப்பு உண் டாகும். அடுத்தவர்களின் குற்ற ச்சாட்டுக்கு ஆளாகநேரிடலாம். தொழில் வியாபாரம் தொடர்பான அலைச்சல் இரு க்கும். வாடிக்கையாளர்களிடம் சாமர்த்திய மாக பேசுவதன் மூலம் வியாபாரம் வளர்ச்சி பெறும். பிறர் கூறும் ஆலோசனைகளை ஆராய்ந்து பார்த்து செய்வது நல்லது. உத்யோகஸ்தர்கள் கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். வாக்குவாதத்தையும், கோபத்தையும் தவிர்ப்பது நல்லது.



விருச்சிகராசி அன்பர்களே! நீங் கள் நல்லதாக பேசினாலும் எதிரில் உள்ளவர்கள் அதை தவறான கண்ணோட்டத்துடனேயே பார்ப் பார்கள். மற்றவர்களின் செயல்களால் மன அமைதி கெடவும் வாய்ப்பு உண்டு. தொழில் வியாபாரம் தொடர்பான விஷயங்கள் கூடுதல் முயற்சிக்கு பிறகு எதிர்பார்த்தபடி நடந்து முடியும். வியாபாரத்தில் புது மையை செய்வீர்கள். உத்யோகத்தில் இருப் பவர்களுக்கு பிடித்தமான இடத்திற்கு வேலை மாற்றம் கிடைக்கலாம்.



தனுசுராசி அன்பர்களே! கடின மான பணிகளையும் செய்து முடிக்கும் துணிச்சல் ஏற்படும். காரிய வெற்றியால் மனதில் சந்தோஷம் உண்டாகும். இருக்கும் இடத்தை விட்டு வெளியில் சென்று தங்க நேரிடும். தொழில் வியாபாரம் பற்றி மன தில் இருந்த கவலை நீங்கி தைரியம் உண்டாகும் கணவன், மனைவிக் கிடையே இருந்த மனவருத்தம் குறை யும். உத்யோகத்தில் இருப்பவர்கள் வேலையை சிறப்பாக செய்து முடிப்பர்.



மகரராசி அன்பர்களே! எந்த ஒரு காரியமும் வெற்றியடை வதுடன் லாபகரமாகவும் இருக் கும். இழுபறியாக இருந்த ஒரு சில விஷயங்கள் நல்ல முடிவு க்கு வரும். வீடு, வாகனங்கள் வாங்கும் நிலை உருவாகும். தொழில், வியாபாரம் முன்னேற்றம் காணப்படும். வியாபார வளர்ச்சிக்கு புதிய திட்டங்களை தீட்டுவீர் கள். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு நிலு வையில் உள்ள பணம் கைக்கு கிடைக் கும். பயணங்களால் லாபம் கிடைக்கும்.



கும்பராசி அன்பர்களே! எதை யும் ஆராய்ந்து பார்த்த பிறகே அதை செய்ய முற்படுவீர்கள். தொட்ட காரியம் வெற்றியில் முடிந்தாலும் சற்று கால தாமதம் ஆக லாம். புதிய நண் பர்கள் கிடைப்பார்கள். தொழில், வியாபாரம் மிகவும் சிறப்பாக நடைபெறும். வியாபாரம் மற்றும் தொழிலை விரிவுபடுத்துவது பற்றி திட்டங்களை செயல்படுத்துவீர்கள். பயண ங்கள் சாதகமான பலனை தரும். உத்யோ கஸ்தர்கள் முன்னேற்றம் காண்பர்.



மீனராசி அன்பர்களே! ஆக்க பூர்வமான யோசனைகள் தோன் றும். கடித போக்குவரத்து அனு கூலமான பலனை தரும். புது வியாபாரம் தொடர்பான முயற்சிகள் சாதக மான பலன் தரும். தொழிலில் முன்னேற்றம் காணப்படும். சாமர்த்தியமாக வாடிக்கை யாளர்களுடன் பேசிஅவர்களை தக்க வைத் துக் கொள்வீர்கள். உத்யோகத்தில் இருப்ப வர்கள் எதிர் காலம் பற்றிய திட்டங்களை வகுப்பார்கள். குடும்பத்தில் இருப்ப வர்களி டம் தன்மையாக பேசி பழகுவது நல்லது.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

சீனாவின் நகர்வு அமெரிக்காவை கோபப்படுத்துமா?

(17ம் பக்கத் தொடர்ச்சி) தனது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதன் மூலமே, அமெரிக்கா பல நாடுகளுக்கு எதிராகப் பொருளாதாரத் தடைகளை விதித்து அச்சுறுத்துகிறது. சீனா தனது சொந்த கட்டணக் கட்டமைப்பான CIPS மூலம் இலங்கையுடன் நேரடியாக யுவானில் வர்த்தகம் செய்யும்போது, அமெரிக்காவின் நிதி மேலாதிக்கம் அல்லது கண்காணிப்பு எல்லைக்கு வெளியே இந்த நாடுகள் இயங்கத் தொடங்கும். இதனால் அமெரிக்காவின் பொருளாதாரத் தடைகளின் வீரியம் குறையும். இந்தோ-பசுபிக் பிராந்தியத்தில் சீனாவின் செல்வாக்கைக் கட்டுப்படுத்த, அமெரிக்கா தனது குவாட் கூட்டணி மூலம் பல உத்திகளை வகுத்து வருகிறது.

கடல்சார் வர்த்தகப் பாதையில் மிக முக்கியப் புள்ளியாக இருக்கும் இலங்கையின் நிதி உள்கட்டமைப்புக்குள் சீனா நேரடியாக நுழைவது, இந்தப் பிராந்தியத்தில் அமெரிக்கா மற்றும் அதன் நட்பு நாடான இந்தியாவின் புவிசார் அரசியல் மற்றும் இராஜதந்திர நகர்வுகளுக்கு ஒரு பின்னடைவாக இருக்கும். அதைவிட இலங்கை வர்த்தகர்கள் சீனாவுடன் வர்த்தகம் செய்யும் போது, அமெரிக்காவிலுள்ள இடைத்தரகு வங்கிமூலமாகவே பணம் பரிமாறப்பட்ட நிலை மாறுவதால், அமெரிக்க வங்கிகளுக்கு கிடைத்து வந்த கணிசமான பரிவர்த்தனைக் கட்டணங்கள் கிடைக்காமல் போகும்.

இலங்கை போன்ற சிறிய நாட்டின் பொருளாதார மாற்றம் அமெரிக்காவைப் பெரியளவில் பாதிக்காது என்றாலும், சீனா உலகளவில் 30 இற்கும் மேற்பட்ட நாடுகளில் இத்தகைய வலையமைப்பை உருவாக்கி பலப்படுத்துவது டொலரின் உலகளாவிய தனியாட்சிக்கு எதிராகப் பல நாணயங்கள் போட்டியிடும் நிலையை கட்டியெழுப்புவது அமெரிக்காவுக்கு ஒரு நீண்டகால மூலோபாய எச்சரிக்கையாகும். இலங்கையுடன் இருதரப்பு வர்த்தகத்தை விரிவுபடுத்த அமெரிக்கா முயன்று கொண்டிருக்கும் நிலையில் சீனாவின் இந்த நகர்வு அதற்குச் சவாலாகவே இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

ஒரு பிக்குவுக்காக சிறை விதிகளை மாற்ற...

(19ம் பக்கத் தொடர்ச்சி) அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவருக்கு மன்னிப்பு வழங்கினார். அப்போது ஞானசார தேரர் சுமார் ஒன்பது மாதங்களே சிறையில் இருந்திருந்தார். எனினும், செப்டெம்பர் 10ஆம் திகதி, உச்ச நீதிமன்றம் அந்த ஜனாதிபதி மன்னிப்பை இரத்துச் செய்தது. இதை யடுத்து, சில வாரங்களுக்குப் பின்னர் அவர் மீண்டும் கைது செய்யப்பட்டார்.

பிரதான பௌத்த பீடங்களின் மகாநாயக்கர்கள், ஒரு பிக்குவின் காவியுடையை அகற்றுவது சிறை நிர்வாகம் தொடர்பான சாதாரண விடயமாகவோ சிறை விதிகளால் மட்டும் தீர்மானிக்கப்பட வேண்டிய விடயமாகவோ கருத முடியாது என்று சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்துக்குக் கடிதம் எழுதினர் பின்னர், சிறை அதிகாரிகளிடம் காவியுடையை ஒப்படைப்பதற்கு முன்பு, இரண்டு மணித்தியாலங்களுக்கும் மேலாகத் தான் எதிர்ப்புத் தெரிவித்ததாக ஞானசார தேரர் தனது சட்டத்தரணியிடம் கூறினார்.

திருத்தப்பட்ட புதிய விதிகள் ஒக்டோபர் 23ஆம் திகதி முதன்முறையாகப் பயன்படுத்தப்படவிருந்தன. அன்றைய தினம், இஸ்லாத்தை அவமதிக்கும் வகையில் கருத்துத் தெரிவித்ததாகக் கூறப்படும் மற்றொரு வழக்கில், ஞானசார தேரர் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் முன்னிலையாக வேண்டியிருந்தது. திருத்தப் பட்ட விதிகளின்படி அவர் காவியுடை அணிந்தே நீதிமன்றத்தில் முன்னிலையாவார் என்று புத்தசாசன அமைச்சர் ஹினிதும சுனில் செனவி முன்னதாகத் தெரிவித்திருந்தார். ஆனால், வழக்கு தொடர்பாக நிலவிய பதற்றம் மற்றும் குழப்பங்கள் ஏற்படக்கூடும் என்ற அச்சம் காரணமாக, ஞானசார தேரரை மின்னணு வழிமுறையின் ஊடாக நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப் போவதாகச் சிறை அதிகாரிகள் நீதிமன்றத்துக்குத் தெரிவித்தனர்.

அவரது சட்டத்தரணி அசோக வீரசூரிய, கோட்டே பௌத்த பீடத்தின் மகாநாயக்கர், ஞானசார தேரருக்கு மீண்டும் சம்பிரதாயபூர்வமாகக் காவியுடை அணிவிக்கும் நிகழ்வொன்றை நடத்துமாறு சிறை அதிகாரிகளிடம் கோரியிருந்ததாகத் தெரிவித்தார். இதற்குப் பதிலளித்த நீதிபதி புத்திக சி. ராகல, அவ்வாறு செய்வதற்கு நீதிமன்றத்திற்கு அதிகாரம் இல்லை என்று கூறினார். அத்துடன், சிறையில் அடைக்கப்படும் ஒவ்வொரு பிக்குவும் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படுவதற்கு முன்னர் பௌத்த மதத் தலைவர்களால் காவியுடை அணிவிக்கப்பட வேண்டிய நிலை ஏற்படுமா என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

தேசிய மக்கள் சக்தி அரசின் ஆட்சி....

(14ம் பக்கத் தொடர்ச்சி) பிம்பத்தின் மீது அல்லது ஆளுமையின் மீது கட்டியெழுப்பப் பட்டிருக்கும் NPP ஆட்சியானது, ஆதரவு எதிர்ப்பு, பாராட்டு கண்டனம், மதிப்பீடு விமர்சனம் என்ற இருநிலைகளில் விவாதிக்கப்படும் அளவுக்கும் அவசியத்துக்கும் தள்ளப்பட்டுள்ளது. வெளிப்படுத்தப்படுகின்ற விமர்சனங்கள் அல்லது மதிப்பீடுகள் வெறுப்பின் விளைவானவை. குறிப்பாக எதிர்க்கட்சிகளின் விமர்சனங்கள் அல்லது எதிர்க்கட்சிகளுக்கு ஆதரவான தரப்பினரின் விமர்சனங்கள் ஏறக்குறைய எதிர்நிலையிலானவை. அவற்றைப் பொருட்படுத்த முடியாது என்று NPP யினரோ அவர்களுடைய ஆதரவாளர்கள்.அபிமானிகளோ சொல்லக்கூடும். அது தாமதங்களையும் தவறுகளைச் சீராக்காது. பதிலாகத் துணிச்சலும் அறிவுபூர்வமானதுமான நடவடிக்கைகளே மாற்றத்தை உருவாக்கும். நெருக்கடிகளைக் குறைக்கும். நம்பிக்கையை மக்களிடத்திலே ஏற்படுத்தும். அதைக்குறித்து அரசாங்கம் ஆழமாகச் சிந்திப்பது அவசியம்.

ஆனால் பொதுவாக ஆட்சியாளர்களைப் பற்றிய இத்தகைய மதிப்பீடுகளும் விமர்சனமும் அவசியமானவை. ஒரு ஆட்சியைச் சிறப்பாக்குபவை நியாயமான விமர்சனங்களும் காழ்ப்பில்லாத மதிப்பீடுகளுமேயாகும். இவற்றைக் காழ்ப்பும் வெறுப்பும் இல்லாமல் அரசாங்கமும் அணுக வேண்டும். எப்போதும் இனிப்பான சொற்கள்தான் வேண்டும். முதுகை யாராவது தடவிக் கொடுக்க வேண்டும் என்று கருதக் கூடாது.

இதேவேளை அரசாங்கம்.வெளியுறவுக் கொள்கையிலும் பிராந்திய நாடுகளைக் கையாள்வதிலும் முதிர்ச்சியோடு அல்லது நிதானத்தோடு செயற்படுவதாகத் தெரிகிறது. முக்கியமாக NPP அரசாங்கம் இந்தியா மற்றும் சீனா ஆகிய இரு நாடுகளின் புவிசார் அரசியல் போட்டிக்குள் (Geopolitical Rivalry) சிக்கி விடாமல், எந்தவொரு நாட்டிற்கும் அடிபணியாத தன்னாட்சி வெளியுறவுக் கொள்கையை (Strategic Autonomy) பேண முற்படுகிறது. நாட்டின் கடுமையான பொருளாதார நெருக்கடியை சமாளிக்க இரு வல்லரசுகளின் நிதி மற்றும் மூலோபாய உதவிகளையும் (22ம் பக்கம் பார்க்க)

ஒரு பிக்குவுக்காக சிறை விதிகளை மாற்ற மாட்டோம் எனக் கூறிய NPP அரசாங்கம் 4 நாட்களுக்கு பின் விதிகளை மாற்றியது?

கடந்த ஒக்டோபர் 16ஆம் திகதி, எந்தவொரு தனி நபருக்கும் சலுகை வழங்குவதற்காகச் சட்டத்தை வளைக்கவோ திருத்தவோ போவதில்லை என்று இலங்கை அரசாங்கத்தின் அமைச்சரவைப் பேச்சாளர் தெரிவித்தார். ஆனால், நான்கு நாட்களுக்குப் பின்னர், சிறையில் அடைக்கப்பட்டுள்ள ஒரு பௌத்த பிக்குவைச் சுற்றிய சர்ச்சையின் மையமாக இருந்த சிறை விதிகளை அரசாங்கம் திருத்தியது.

இலங்கை அரசாங்க வர்த்தமானி இலக்கம் 2511-30 மூலம் வெளியிடப்பட்ட திருத்தங்களின்படி சிறையில் அடைக்கப்படும் ஒரு பௌத்த பிக்கு தனது காவியுடையை இழக்க வேண்டுமா என்பதைத் தீர்மானிப்பதில் பௌத்த மகா சங்கத்தின் பீடங்களுக்கு இறுதி முடிவெடுக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அத்துடன், தண்டனை பெற்ற பிக்குகள் சிறையிலிருந்து வெளியே அழைத்துச் செல்லப்படும் போது, நீதிமன்றத்திற்குக் கொண்டு செல்லப்படுவது உட்பட, காவியுடை அணியவும் அனுமதிக்கப்படுகிறது. தேவையான மாற்றங்களுடன் ஏனைய மதங்களின் குருமார்களுக்கும் இந்த விதிகள் பொருந்தும்.

இதன் மூலம், கடும்போக்கு சிங்கள பௌத்த தேசியவாதப் பிக்குவான கலகொட அத்தே ஞானசார தேரரை மையமாகக் கொண்டு அரசாங்கத்திற்கும் நாட்டின் மூத்த பௌத்த மதத் தலைவர்களுக்கும் இடையில் இரண்டு வாரங்களாக நீடித்த மோதல் முடிவுக்கு வந்துள்ளது.

ஒக்டோபர் 6ஆம் திகதி, கொழும்பு மேல் நீதிமன்றத்தில் ஞானசார தேரர் சிறை உடையில் முன்னிலைப்படுத்தப்பட்டார். அதற்கு முன்னர், நடைமுறையிலிருந்த சிறை உத்தரவுகளின்படி சிறை அதிகாரிகள் அவரது காவியுடையை அகற்றியிருந்தனர். ஆரம்பத்தில், இந்த விதிகள் அனைத்து கைதிகளுக்கும் ஒரே மாதிரியாகப் பொருந்தும் என்று அரசாங்கம் தெரிவித்திருந்தது.

வர்த்தகமானி என்ன கூறுகிறது?

சிறைச்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவின் ஒப்புதலுடன், சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்தினால் இந்த உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன. பதில் கடமையாற்றும் ஆணையாளர் நாயகமான ஆர். பிரசாத் ஹேமந்த குமார, ஒக்டோபர் 19ஆம் திகதி இவற்றில் கையொப்பமிட்டார்.

புதிய நிலையான உத்தரவு 356A-இன்படி ஒரு பௌத்த பிக்கு சிறையில் அடைக்கப்படும் போது, அவர் சிறைக்கு வரும் போது அணிந்திருந்த காவியுடையை அகற்றுவது தொடர்பாக ஆணையாளர் நாயகம் பௌத்த விவகாரத் திணைக்களத்துடன் கலந்தாலோசிக்க வேண்டும்.

அந்தத் திணைக்களம், குறித்த பிக்கு சார்ந்த நிகாயம் அல்லது பௌத்த பீடத்துக்கு இது பற்றி அறிவிக்க வேண்டும். அந்தப் பீடம் எடுத்த நடவடிக்கை தொடர்பான அறிக்கையைப் பத்து நாட்களுக்குள் ஆணையாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்க வேண்டும்.

குறித்த காலப்பகுதிக்குள் பதில் கிடைக்கா விட்டால், தொடர்புடைய விதிகளுக்கு அமைவாக ஆணையாளர் நாயகம் நடவடிக்கை எடுக்கலாம் என உத்தரவு குறிப்பிடுகிறது. ஆனால், அந்தத் தொடர்புடைய விதிகள் எவை என்பது அதில் தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை.

நிலையான உத்தரவு 550இல் மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தின்படி, கைதியாகச் சிறையிலிருந்து வெளியே அழைத்துச் செல்லப்படும் ஒரு பிக்கு, சிறையில் அடைக்கப்பட்டபோது அணிந்திருந்த காவியுடையை அணிய அனுமதிக்கப்படுகிறார்.

அவரது பௌத்த பீடம் அதற்கு அனுமதி வழங்கவில்லை என்றால், ஆணையாளர் நாயகம் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். மேலும், ஒரு பிக்கு சிறையில் அடைக்கப்பட்ட ஏழு வேலை நாட்களுக்குள், அவரது பீடத்தின் அனுமதியைப் பெறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பௌத்த விவகாரத் திணைக்களத்திடம் ஆணையாளர் நாயகம் கோர வேண்டும். எனினும், பிக்குவின் காவியுடை தொடர்பாக அவரது பீடம் தீர்மானிக்கும் வரை, அவர் சிறைக்குள் என்ன உடையை அணிய வேண்டும் என்பது குறித்து இந்த உத்தரவு எதையும் குறிப்பிடவில்லை.

அரசாங்கம் என்ன கூறியது?

ஒக்டோபர் 6ஆம் திகதி ஞானசார தேரர் காவியுடை இன்றி நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட நாளன்று, அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ, சிறை அதிகாரிகள் சிறைச்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் படியே செயற்பட்டதாகத் தெரிவித்தார். அப்போது சிறைத்தண்டனை அனுபவித்துக் கொண்டிருந்த 63 பௌத்த பிக்குகளுக்கும் இதே நடைமுறைதான் பொருந்துவதாக அவர் கூறினார்.

சிறைச்சாலைகள் திணைக்களத்தின் பேச்சாளர் சேனக பல்லேதென்னவும், கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட கைதிகள் தங்களுடைய சமூக அந்தஸ்து எதுவாக இருந்தாலும் சிறை உடையையே அணிய வேண்டும் என்று தெரிவித்தார்.

இரண்டு நாட்களுக்குப் பின்னர், ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க, ஜனாதிபதி செயலகத்தில் மூத்த பௌத்த பிக்குகளைச் சந்தித்த போது, சிறைச் சட்டங்களை மீறி அதிகாரிகள் செயற்படுமாறு தாம் உத்தரவிடப் போவதில்லை என்று கூறினார்.

பொருத்தமற்ற விதிகள் இருப்பின், உரிய சட்ட நடைமுறையின் ஊடாக அவற்றைத் திருத்த வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

எனது தனிப்பட்ட விருப்பங்கள் சட்டமாக மாறிவிடக் கூடாது என்று அவர் கூறியதாக டெய்லி மிரர் செய்தி வெளியிட்டது.

ஏனைய தண்டனை பெற்ற பிக்குகளும் இதே விதிக்கு உட்பட்டவர்கள் என்பதையும், ஞானசார தேரர் 2018ஆம் ஆண்டு முன்னர் சிறையில் இருந்த போதும் சிறை உடையை அணிந்திருந்தார் என்பதையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். அதே சந்திப்பில், தற்போதைய நிலையான சிறை உத்தரவுகள் காலத்திற்குப் பொருந்தாதவை என்று குறிப்பிட்ட ஜனாதிபதி, அவற்றை மீளாய்வு செய்து திருத்துவதற்காகக் குழுவொன்றை நியமித்தார். சட்டத் திருத்தங்களை இரண்டு வாரங்களுக்குள் நிறைவு செய்யுமாறு நீதியமைச்சரிடம் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது.

புத்தசாசன அமைச்சின் செயலாளர் டபிள்யு . பி. சேனதீர தலைமையிலான குழு தனது இடைக்கால அறிக்கையை ஒக்டோபர் 14ஆம் திகதி நீதியமைச்சரிடம் கையளித்தது. இதையடுத்து, நிலையான சிறை உத்தரவுகளைத் திருத்துமாறு பதில் கடமையாற்றும் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்துக்கு நீதியமைச்சர் நாணயக்கார அறிவுறுத்தினார்.

ஒக்டோபர் 16ஆம் திகதி, ஞானசார தேரரை விடுதலை செய்யுமாறு கோரி கண்டியிலிருந்து கொழும்பு வரை பிக்குகள் பேரணியாக வந்திருந்த நிலையில் ஜயதிஸ்ஸ மீண்டும் அரசாங்கத்தின் நிலைப்பாட்டை வலியுறுத்தினார்.

முந்தைய அரசாங்கங்களின் காலத்தில் சட்டம் சமத்துவமின்றிப் பயன்படுத்தப்பட்டதற்கு எதிரான அதிருப்தியும், ஜனாதிபதிக்கும் அரசாங்கத்திற்கும் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை மக்கள் வழங்கியதற்கான காரணங்களில் ஒன்றாகும் என்று அவர் கூறினார். எனவே, ஒருவரின் அடையாளம் அல்லது சமூக அந்தஸ்தின் அடிப்படையில் விதிவிலக்குகளை வழங்க முடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

விவசாய அமைச்சர் கே.டி. லால் காந்தவும், நீதிமன்றத் தீர்ப்புக்கு மாறாக ஒரு பிக்குவை விடுதலை செய்யும் அதிகாரம் ஜனாதிபதிக்கோ அரசாங்கத்திற்கோ இல்லை என்று கூறினார்.

விதியும் விதி விலக்கும்

அரசாங்க அதிகாரிகள் இரண்டு கோரிக்கைகளையும் வெவ்வேறாகப் பார்க்கின்றனர். ஞானசார தேரருக்கு மீண்டும் ஜனாதிபதி மன்னிப்பு வழங்குவதற்கு அரசாங்கம் மறுத்துள்ளது. அதே வேளை, பிக்குகள் அணியும் காவியுடை தொடர்பான விதிகளை மாற்றுவதற்கு இணங்கியுள்ளது.

ஞானசார தேரருக்கு விதிக்கப்பட்ட சிறைத் தண்டனை தொடர்கிறது. புதிய உத்தரவுகள் சிறையில் உள்ள அனைத்து பிக்குகளுக்கும், ஏனைய மதங்களைச் சேர்ந்த குருமார்களுக்கும் பொருந்தும். எனினும், இந்த விதி பல ஆண்டுகளாக நடைமுறையில் இருந்துள்ளது. 2018ஆம் ஆண்டில் ஞானசார தேரருக்கும் இது பயன்படுத்தப்பட்டது. அப்போது இந்த விதிகளை மீளாய்வு செய்ய வேண்டும் என்ற கோரிக்கை எழவில்லை.

ஆனால், பௌத்த மதத் தலைவர்கள் எதிர்ப்புத் தெரிவித்த இரண்டு நாட்களுக்குள் அரசாங்கம் இந்த விதியை மீளாய்வு செய்யத் தொடங்கியது. ஏனைய சமூகத்தினர் தங்களது மத உடைகள் தொடர்பான விதிகளை மாற்றுமாறு விடுத்த கோரிக்கைகள் இதைவிட மெதுவாகவே கையாளப்பட்டுள்ளன.

ஒகஸ்ட் மாதம், கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையில் பணியாற்றும் முஸ்லிம் சுகாதார உதவியாளர்கள், மத அடையாளம் கொண்ட உடைகளை அணிந்து பணியாற்றுவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தனர். சுகாதார அமைச்சராகவும் பதவி வகிக்கும் ஜயதிஸ்ஸ, விதிகளில் மாற்றம் செய்வது குறித்து முறையாகப் பரிசீலித்து ஒப்புதல் அளிக்கப்படும் வரை 2019ஆம் ஆண்டின் சுற்றறிக்கையைப் பின்பற்றுமாறு அவர்களிடம் கூறினார்.

பிக்குவும் பௌத்த மதத் தலைவர்களும்

நீதிமன்ற அவமதிப்பு மற்றும் 2010 ஆம் ஆண்டு காணாமல் ஆக்கப்பட்ட கேலிச்சித்திரக் கலைஞர் பிரகீத் எக்னெலிகொடவின் மனைவி சந்தியா எக்னெலிகொடவை குற்றவியல் ரீதியாக அச்சுறுத்தியமை ஆகிய குற்றச்சாட்டுகளின் அடிப்படையில், 2018ஆம் ஆண்டு ஞானசார தேரருக்கு ஆறு ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. 019ஆம் ஆண்டு, (18ம் பக்கம் பார்க்க)

தமிழகத்தில் அதிக வருவாய் ஈட்டும் 10 கோவில்களின் பட்டியல் வெளியீடு!

தமிழ்நாட்டில் பிரசித்தி பெற்ற கோவில்கள் ஏராளமாக உள்ளன. முருகப்பெருமானின் அறுபடை வீடுகள், மதுரை மீனாட்சி அம்மன், திருவண்ணாமலை அண்ணாமலையார் கோவில் என பிரபலமான கோவில்கள் பல உள்ளன. தமிழக அரசின் இந்து சமய அறநிலையத்துறை இந்த கோவில்களின் நிர்வாகங்களை கவனித்து வருகிறது. இந்த கோவில் களில் பக்தர்கள் காணிக்கையாக செலுத்தும் பண த்தை குறிப்பிட்ட இடைவெளியில் அறநிலையத் துறை சார்பில் எண்ணப்படுகிறது. இதன் விவரங் களை ஒவ்வொரு ஆண்டும் இந்து சமய அறநிலை யத்துறை வெளியிட்டு வருகிறது.

அந்த வகையில் அதிக வருமானம் ஈட்டும் 10 கோவில்களின் பட்டியல் வெளியிட்டப்பட்டுள்ளது. இதில் ரூ.233 கோடி வருவாயுடன் பழனி முருகன் கோவில் உள்ளது. 2 ஆம் இடத்தில் திருவண்ணா மலை அருணாச்சலேஸ்வரர் முருகனின் அறுபடை வீடுகளின் முதல் வீடாக உள்ள பழனிக்கு இந்தியா மட்டுமின்றி வெளிநாடுகளில் இருந்து கூட ஏராள மான பக்தர்கள் வந்து சாமி தரிசனம் செய்து விட்டு செல்கிறார்கள்.

இந்த பட்டியலில் இரண்டாம் இடத்தில் திரு வண்னாமலை அருணாச்சலேஸ்வரர் திருக்கோவில் உள்ளது. இந்த கோவிலின் ஆண்டு வருமானம் ரூ.139.06 கோடியாக உள்ளது. திருவண்ணாமலை கோவிலுக்கு கார்த்திகை தீ திருவிழா, பவுர்ணமி கிரிவலம் நாட்களில் லட்சக்கணக்கான பக்தர்கள் கூடுவது வழக்கம்.

திருச்செந்தூர் முருகன் கோவில் அதிக வருமானம் ஈட்டும் கோவில்களின் பட்டியலில் 3 ஆம் இடத்தில் திருச்செந்தூர் முருகன் கோவில் உள்ளது. அறு படை வீடுககளில் கடலோரத்தில் அமைந்து இருக் கிற ஒரே ஸ்தலம் இதுவேயாகும். இந்த கோவிலில் நடைபெறும் கந்தசஷ்டி மற்றும் சூரசம்ஹாரம் போன்ற நாட்களில் தமிழகம் முழுவதிலும் இருந்து லட்சகணக்கான பக்தர்கள் முருகனை தரிசிக்க வருவார்கள். இந்த கோவிலில் 131.38 கோடி ஆண்டு வருமானம் ஈட்டியுள்ளது.

சமயபுரம் மாரியம்மன் கோவில் 4வது இடத்தில் சமயபுரம் மாரியம்மன் கோவில் உள்ளது. திருச்சியில் உள்ள இந்தக் கோவிலின் ஆண்டு வருமானம் ரூ.111.09 கோடியாகும்.

சென்னையை அடுத்த திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள திருத்தணியில் அமைந்துள்ள முருகன் கோவில் முருகப்பெருமானின் 5ஆம் படை வீடா கும். இந்த கோவிலில் ஆடிக்கிருத்திகை மற்றும் திருப்படி திருவிழா போன்ற சிறப்பு நாட்களின் போது பக்தர்கள் கூட்டம் அலை மோதும். இந்த கோவிலின் ஆண்டு வருமானம் ரூ.74.98 கோடியாக உள்ளது.

பட்டியலில் 6வேது இடத்தில் உலகப் புகழ் பெற்ற மதுரை மீனாட்சி அம்மன் கோவில் உள்ளது. இந்தக் கோவிலின் ஆண்டு வருமானம் ரூ.73.72 கோடியாக உள்ளது.

7வது இடத்தில் ராமேஸ்வரம் ராமநாதசுவாமி கோவில் உள்ளது. வட இந்திய பக்தர்கள் உள்பட நாடு முழுவதும் இந்த கோவிலுக்கு அதிக அளவில் பக்தர்கள் வருகை தருவதுவது வழக்கம். இந்த கோவிலின் ஆண்டு வருமானம் ரூ.64.33 கோடி யாகும்.

8வது இடத்தில் திருச்சி ஸ்ரீரங்கம் ரங்கநாத சுவாமி திருக்கோயில் உள்ளது. இந்தக் கோவிலின் வரு மானம் ரூ.50.57 கோடியாகும்.

9வது இடத்தில் மதுரை அழகர் கோவிலில் உள்ள சுந்தரராஜ பெருமாள் கோவில் உள்ளது. இந்த கோவிலின் வருமானம் ரூ.34.20 கோடியாகும். 10வது இடத்தில் ஈரோடு அருகே உள்ள பண்ணாரி அம்மன் திருக்கோவில் உள்ளது. இந்தக் கோவிலில் ஆண்டு வருமானம் ரூ.29.16 கோடியாகும்.

ஜனவரி 10, 2027 • ஞாயிற்றுக்கிழமை • மாலை 6.00

கடந்த 14 ஆண்டுகளாக அன்பு இல்லம், பாரதி இல்லம், செஞ்சோலை இல்லம் ஆகியவற்றில் வாழும்சிறார்களின் உணவு மற்றும் அத்தியாவசியத் தேவைகளுக்காக முன்னெடுக்கப்பட்டு வரும் இந்நிகழ்வு, இம்முறை ஒரு புதிய மனிதநேயப் பணிக்காகப் பயன்படுகிறது.

ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க அரசாங்கத்தின் புதிய திட்டத்தின் கீழ், சிறுவர் இல்லங்களில் வளர்ந்து 18 வயதைத் தாண்டும் இளைஞர், யுவதிகளுக்கு புதிய வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கும் நோக்கத்தோடு; காணியுடன் கூடிய வீடுகளை நிர்மாணிக்க ரூ.20 இலட்சம் அரசாங்க உதவி வழங்கப்படுகிறது.

அந்த மனிதநேயத் திட்டத்தின் பயனாக, எமது இல்லத்தில் வாழும் 9 பெண் பிள்ளைகளுக்கும் காணியுடன் கூடிய வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கான வாய்ப்பு கிடைத்துள்ளது.

எனினும், ஒரு வீட்டை முழுமையாக நிர்மாணிக்க சுமார் ரூ.30 இலட்சம் தேவைப்படுவதால், ஒவ்வொரு வீட்டுக்கும் மேலதிகமாக ரூ.10 இலட்சத்தை கனடா வாழ் தமிழ்சமூகத்தின் அன்புக் கரங்களிலிருந்து திரட்ட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. ஒன்பது பெண் பிள்ளைகளின் எதிர்காலத்திற்காக இந்த உதவிக்கரம் நீட்டப்பட வேண்டியுள்ளது.

இன்னிசையும் இராப்போசனமும் இணையும் இந்த சிறப்பு நிகழ்வில் கலந்து கொண்டு ஆதரிப்பதுடன், வசதிவாய்ப்புள்ள அன்புள்ளங்களும் தங்களால் இயன்ற நிதியுதவியை வழங்கி, இந்த ஒன்பது பெண் பிள்ளைகளுக்கும் ஒரு சொந்த வீடு என்ற கனவை நனவாக்குமாறு அன்புடன் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

உதவிக்கரம் நீட்டுவோர் தங்கள் பெயரிலோ அல்லது உங்கள் அன்புக்குரியவர்களின் பெயரிலோ வழங்கினால் அவர்களது பெயர் விபரங்கள் வீட்டு சுவரில் பதியப்படும் என்பதையும் கவனத்தில் கொள்ளுங்கள்.

ஒரு வீடு என்பது வெறும் கட்டிடம் அல்ல. அது ஒரு பெண் பிள்ளையின் எதிர்காலத்திற்கான பாதுகாப்பும், நம்பிக்கையும், புதிய வாழ்வின் வாசலுமாகும்.

10 லட்சம் இலங்கை ரூபா என்பது கனடிய டொலரில் ஏறக்குறைய 4500.00 டொலர்கள் மாத்திரமே. நாம் இந்த 90 லட்சம் ரூபாவை வழங்காது விட்டால் அரச உதவிப் பணம் கிடைக்காமல் போகலாம்.

எனவே அன்புக்குரியவர்களே! இந்த 9 பெண் பிள்ளைகளின் வாழ்விடத்திற்காக உங்களால் முடிந்தளவு உதவ முன்வாருங்கள்! எமது நிகழ்வில் கலந்து கொள்வதன் மூலம் உங்கள் பங்களிப்பை வழங்குங்கள்!

மேலதிக விபரங்களுக்கு
ஈழநாடு பரமேஸ் - 416 841 9600
தொலைபேசி அல்லது WhatsApp மூலம் தொடர்புகொள்ளலாம்.

நவராத்திரி விழாவும் உணவுத் திருவிழாவும் நமது எண்ணங்களும்!

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
-க. அருந்தவபாலன் -



சமயம்.சாதி மற்றும் இது போன்ற சில விடயங்கள் உணர்வுபூர்வமானவையாக மாறியிருப்பதன் காரணமாக அவை தொடர்பான அறிவியல் ரீதியான கருத்துக்களைக் கூட பொதுவெளியில் சொல்வதற்கும் எழுதுவதற்கும் நமது சமூகத்தில் தொடர்ந்து தயக்கம் நிலவி வருகிறது. அந்நிலை சமூகத்தில் அவை தொடர்பிலான ஆரோக்கியமான கலந்துரையாடல்களுக்கு தடையேற்படுத்தி வருவதன் காரணமாக அறிவியல் ரீதியான சிந்தனைக்கும் வளர்ச்சிக்கும் தடைக்கல்லாக அமைந்து விடுகிறது. தவறான கருத்துக்கள் தொடர்ந்து கடத்தப்பட்டு சரியானவையாகப் பதிய வைக்கப்படுகின்றன.

இதனால் இன்று சாதாரண மக்கள் தொடக்கம் உயர்கல்வி கற்றவர்கள் வரையில் பலர் அவற்றின் அடிப்படைகளை விளங்கிக் கொள்ளாமலும் அல்லது அதனை விளங்கிக் கொள்ள எத்தனிக்காமலும் சமூக மாற்றங்களை உள்வாங்கத் தவறுவதாலும் தாம் கருதுவதே அல்லது தனக்குக் கற்பிக்கப்பட்டதே சரியானது என்ற எண்ணத்தில் இருப்பதைக் காண முடிகிறது. அந்த எண்ணத்துக்கு அல்லது சிந்தனைக்கு மாறான நிலைப்பாட்டில் இருப்பவர்களை அவர்கள் இழிவுபடுத்தவும், அழுத்தங்களைப் பிரயோகிக்கவும் உரிமைகளை மட்டுப்படுத்தவும் முரண்பாடுகளை உருவாக்கவும் முயல்வதையும் அவதானிக்க முடிகிறது. இது எல்லாச் சமூகங்களிலும் எல்லாச் சமயங்களிலும் உள்ள ஒன்றே.

அண்மையில் நிறைவு பெற்ற நவராத்திரி விழாக் காலத்தின் போது நீச்சா சுற்றுலா மையத்தில் நடந்த உணவுத் திருவிழா பற்றிய பல எதிர்மறையான விமர்சனங்கள் சமூக ஊடகங்களில் நிறைந்திருந்ததைக் காணமுடிந்தது. அந்த விமர்சனங்களில் பலரின் மேற்கூறியவாறான எண்ணம் அல்லது சிந்தனையே வெளிப்பட்டிருந்ததைக் காண முடிந்தது.

அவ்விமர்சனங்கள் எல்லாம் அடிப்படையில் நவராத்திரி விழாக்காலத்தில் அந்நிறுவனம் எப்படி புலால் உணவுகளைக் கொண்ட உணவுத் திருவிழாவை நடத்த முடியும் என்ற கேள்வியை அல்லது கண்டனத்தைக் கொண்டிருந்தன. அதற்கு மேலாக சில பதிவுகள் அந்நிறுவனத்தின் உரிமையாளரைத் தனிப்பட்ட வகையில் வசைபாடுவதையும் கொண்டிருந்தன. சிலர் ஒருபடி மேலே சென்று தமிழ்ப் பண்பாட்டுக்கு இழுக்கு என்று குறிப்பிடவும் தவறவில்லை. இது தொடர்பாக இங்கு எழுகின்ற கேள்வி ஒரு சமயத்தவரின் விழாக் காலத்தில் இது போன்ற எந்த முயற்சியும் செய்யக்கூடாதா என்பதாகும்.

இந்தக்கேள்விக்கு விடை தேடுவதற்கு நாம் பல விடயங்களைக் கவனத்திற் கொள்ள வேண்டும். மதம் அல்லது சமயம் என்பது ஒருவரது தனிப்பட்ட நம்பிக்கை மற்றும் உரிமையுடன் தொடர்புடையதாகும். இறை நம்பிக்கை கொள்வதற்கு எவ்வாறு ஒருவருக்கு உரிமை உள்ளதோ அதேபோல இறை நம்பிக்கையற்று இருப்பதற்கும் இன்னொருவருக்கு உரிமையுள்ளது. இறைநம்பிக்கை உடையவர் ஒருவர் கூட நடைமுறையில் உள்ள கோயில் வழிபாட்டு முறைகள் கிரியைகள் போன்றவற்றில் நம்பிக்கை கொள்ளாதவராக இருக்கக் கூடும். இறை நம்பிக்கையுடைய சைவசமயி

ஒருவர் எக்காலத்திலும் புலால் உண்பது தவறல்ல என்ற கருத்தைக் கொண்டிருக்கக்கூடும். அதே போல இறைநம்பிக்கையற்ற ஒருவர் ஒரு போதும் புலால் உண்ணாதவராக இருக்கலாம். சைவத்துக்கும் புலால் மறுப்புக்கும் இடையிலான பிணைப்பு ஏற்படுத்தப்பட்ட ஒன்றேயன்றி நியதியன்று. நவராத்திரியில் புலாலை ஒதுக்குபவர் கௌரி விரதம், கந்தஷஷ்டி, பிள்ளையார் கதை காலங்களில் அதனை விரும்பலாம். அதே போல கந்த சஷ்டி காலத்தில் புலாலை ஒதுக்கும் ஒருவர் நவராத்திரி காலத்தில் அதனை உண்ணலாம். புலால் உண்பதா இல்லையா என்பதும் அதை எப்போது உண்ணுவது எப்போது ஒதுக்குவது என்பதும் அவரவர் அறிவு, மனப்பாங்கு, விருப்பம் மற்றும் சூழ்நிலைகளைப் பொறுத்தது.

இது தொடர்பான ஒருவரது தனிப்பட்ட நம்பிக்கை, விருப்பு, வெறுப்பு மற்றும் உரிமைகளில் தலையிடுவதற்கு மற்றவர்களுக்கு எவ்வித உரிமையும் கிடையாது. அவ்வாறு தலையிடுபவர்களுக்கும் சைவ அல்லது இந்துக் கடவுள்களை சாத்தான் என்று சொல்பவர்களுக்கும் இடையில் அதிக வேறுபாடில்லை. நவராத்திரி நாட்களில் புலாலா என்று கேட்பவர்களுக்கும் இது பௌத்த நாடு என்று கூறுபவர்களுக்கும் இடையில் அதிக வேறுபாடில்லை.

சைவ சமயம் அல்லது இந்து மதம் புலாலை நிராகரிக்கிறதா? அன்பு கருணை அடிப்படையில் எந்தவொரு உயிருக்கும் தீங்கு விளைவிக்கக்கூடாது என்று எல்லா மதங்களும் தான் கூறுகின்றன. ஆனால் அந்த மதங்களைப் பின்பற்றுவோரில் பெரும்பாலானவர்கள் புலால் உண்டே வாழ்கிறார்கள். உண்மையில் ஒருபோதும் புலால் உண்ணாது வாழ்வது வரவேற்கக் கூடியதே. அதை விடுத்து ஆண்டில் முன்னூறு நாட்களும் அதை முழுங்கி விட்டு ஒருசில நாட்கள் மட்டும் புனிதம் என்று முழங்குவது நம்மை நாமே ஏமாற்றும் ஒரு செயலேயன்றி வேறில்லை. அதைவிட மோசம் நான் உண்ணாத நாட்களில் மற்றவர்களும் உண்ணக்கூடாது என்று எதிர்பார்ப்பது. இந்துமதம் அல்லது சைவ சமயத்தின் வரலாற்றை நோக்கினால் கூட புலால் என்பது மறுக்கப்பட்ட ஒன்றல்ல என்பதை அறிய முடியும். வேத காலம் தொடக்கம் இன்றுவரை இந்து மதத்தவர்கள் புலால் உண்டே வருகின்றனர். இன்றும் கூட இந்தியாவின் சில பகுதிகளில் உள்ள பிராமணர்களும் புலால் உண்டு வருகின்றனர். ஆரியர்கள் குதிரைகள் மாடுகள் போன்றவற்றை வேள்வித் தீயில் ஆகுதியாக்கி அதனை உண்டும் பரிமாறியும் வந்துள்ளனர்.

அதேபோல தமிழர்களும் தமது குல தெய்வங்களுக்கு மாமிச வகைகளைப் படைத்து வழிபட்டு வந்துள்ளனர். இன்றும் கூடத் தமிழ் நாட்டில் பரவலாகவும் ஈழத்தில் கணிசமாகவும் அவ்வாறு குல தெய்வங்களுக்கு மாமிசம் படைத்து வழிபட்டு உண்ணும் முறை இருந்தே வருகிறது. புலாலை முற்றாக ஒதுக்கிய சமணம் மற்றும் பௌத்தம் ஆகியவற்றின் போட்டி காரணமாகவே பிராமணர்களும் புலால் உண்பதைக் கைவிட வேண்டியேற்பட்டது என்று வரலாறுகள் கூறுகின்றன. முதலில் உயிரக் கொலையை நிராகரித்த பௌத்தம் கூட பின்னாளில் உணவுக்காக உயிர்கொலை செய்ய அனுமதித்ததையும் காணமுடியும்.

சமயம் சார்ந்து உருவாகும் சில சர்ச்சைகளை தமிழ்ப்பண்பாட்டுடன் இணைத்து அப்பண்பாடு அழிகிறது என ஒப்பாரி வைக்கும் போக்கும் இப்போது இங்கு அதிகரித்து வருவதைக் காணமுடிகிறது. ஓரிரு மாதங்களுக்கு முன் கோயில் திருவிழாக்களில் இடம்பெற்ற சதுர் நடனங்கள் தொடர்பான விமர்சனங்களும் இதேவகையில் இடம்பெற்றதைக் காண முடிந்தது. இவ்வாறு ஒப்பாரி வைப்போர் உண்மையான தமிழ்ப்பண்பாடு எதுவென்று அறிந்திருந்தால் அவ்வாறு செய்ய மாட்டார்கள் என்று துணிந்து கூறலாம். உலகில் எந்தவொரு இனமும் அதற்கேயுரித்தான தூய பண்பாடுகளுடன் இப்போது இல்லை என்ற உண்மையை முதலில் நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். அவ்வாறு இருக்கவும் முடியாது.இந்நிலையில் தமிழ்ப்பண்பாடு என்று எதனைக் குறிப்பிடுவது?

இங்கு சமயம் பேசுபொருளாக இருப்பதால் அதனுடன் தொடர்புறுத்திக் கதைப்பதே பொருத்தமாக இருக்கும். இன்று சைவக்கோயில்களின் கட்டிட அமைப்புத் தொடங்கி தெய்வங்கள், அவர்களின் பெயர்கள் வழிபாட்டு முறைகள் எதிலும் தமிழ்ப் பண்பாட்டைக் காணமுடிவதில்லை. தமிழர்களின் பாரம்பரிய வழிபாட்டுத் தெய்வங்கள் சில இடங்களில் கோயில்களுக்கு புறத்தே தள்ளப்பட்டுள்ளதுடன் பல இடங்களில் ஒடுக்கப்பட்டவர்களின் கடவுளர்களாகத் தரம்குறைக்கப்பட்டு விட்டனர்.

முருகன் சுப்ரமணிய சுவாமியாக தரமுயர்த்தப்படு விட்டார். தெய்வங்களையே பெரும் தெய்வங்கள் என்றும் சிறு தெய்வங்கள் என்றும் கூறு போட்ட நாங்கள் தமிழ்ப் பண்பாடு பற்றிக் கதைப்பதற்கு அருகதை உடையவர்கள் தானா? மாரியம்மன் இன்று ராஜராஜேஸ்வரியாகவும் பரமேஸ்வரியாகவும் நாகபூஷணியாவும் மாறி விட்டார்கள். இறைவழிபாடு இன்று யாருக்கும் புரியாத தேவபாசையில் இயற்றப்படுகிறது. தமிழ்க் கடவுள் என்று கூறப்படும் முருகனுக்கும் இதே நிலைதான். ஈழத்திலிருந்து கொண்டு கங்கை யமுனை சரஸ்வதி ஆறுகளையும் பாரததேசத்தையும் தானே நமது கோயில்களில் இன்னும் உச்சரித்துக் கொண்டு இருக்கிறோம். ஆண்டவனின் உடல் முழுக்க ஆபரணங்களால் அலங்கரிக்கும் நாங்களே அடியவர்கள் கோயிலுக்கு வரும் போது எளிமையாக வர வேண்டும் என்றும் உபதேசம் செய்கிறோம்.

திருஞானசம்பந்தர் ஓர் அந்தணராக இருந்தும் முழுக்க முழுக்க திருமுறைகளிலேயே வழிபாடு இயற்றி வந்தார். பல்லவர் காலம் வரை அது தான் தமிழர்களின் வழிபாட்டுமுறை. தமிழர்களின் பெருமைகளை உலகுக்கு உணர்த்திய சோழர்கள் தான் தமிழ் பண்பாடு மாறுவதற்கும் வழிவகுத்தனர் என்பது கசப்பான உண்மை. இதையொத்ததே ஈழத்தில் ஆறுமுகநாவலரும் நவராத்திரி விழா கூட சோழர் காலத்தில் தோன்றி நாயக்கர் காலத்தில் நிலைபெற்ற ஒன்றுதான். நல்லூர்க் கந்தன் கோயில் உட்பட இன்று கம்பீரமாக உயர்ந்து நிற்கும் கோயில்கள் தமிழ்க் கட்டிடக் கலையை முழுமையாகக் கொண்டவையா? எடுத்துக் காட்டுக்கு இக்கோயில்களின் முகப்பிலுள்ள வளைவான மண்டபங்கள்(Arch) மொகாலய மற்றும் பாரசீகக் கட்டிடக் கலையில் அமைந்தவை என்பது சைவத்தமிழ்ப் பண்பாடு பற்றிக் கதைக்கும் எத்தனை பேருக்குத் தெரியும்?

எல்லாக் கோயில்களிலும் காணப்படும் மணிக்கோபுரம் எமது பண்பாட்டிலிருந்து வந்ததா? இல்லை. அது (22ம் பக்கம் பார்க்க)

இந்தியாவும் இலங்கையும் பாக்கு நீரிணையைக் காப்பாற்ற கச்சதீவைத் தாண்டி சிந்திக்க வேண்டும்

(16ம் பக்கத் தொடர்ச்சி) கடல்வாழ் உயிரினங்களின் இடம்பெயர்வு முறைகளையும் இனப்பெருக்கச் சுழற்சிகளையும் கண்காணித்தல்.

மீன்பிடிக் கொள்கைகளை உருவாக்குவதற்குத் தேவையான அறிவியல் தரவுகளைச் சேகரித்தல்.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான கடல்சார் இராஜதந்திரத்துக்கும் கலந்துரையாடல்களுக்கும் தளமொன்றை வழங்குதல்.

இந்தியாவிடம் ஏற்கெனவே கணிசமான கடல்சார் ஆய்வுத் திறன்கள் உள்ளன. கடல் எல்லையின் தனது பக்கத்தில் அதற்குத் துணையாக விளங்கக்கூடிய ஆய்வுத் திறனை இலங்கை வளர்த்துக்கொள்ள வேண்டும். சூரியசக்தி, கடல்நீரைக் குடிநீராக்கும் தொழில்நுட்பம் மற்றும் தொகுதிமுறை கட்டுமானம் ஆகிய துறைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள், இத்தகைய நிலையத்தை அமைப்பதில் முன்னர் இருந்த நடைமுறைச் சிரமங்களைக் குறைத்துள்ளன.

சுற்றுச்சூழலுக்கு மிகக் குறைந்த பாதிப்பை ஏற்படுத்தும் அதேவேளை, அதிக பயனை வழங்கக்கூடிய ஆய்வு நிலையமொன்றை அமைப்பது இப்போது சாத்தியமான முன்மொழிவாக உள்ளது.

சர்ச்சையிலிருந்து ஒத்துழைப்பை நோக்கி

தற்போதைய விவாதம், இரு நாடுகளுக்கும் இடையிலான உரையாடலின் தன்மையை மாற்றுவதற்கான வாய்ப்பை வழங்குகிறது. தமிழகத்தின் மீனவர்கள் குறித்த அக்கறை நியாயமானது. சட்டவிரோத மீன்பிடி மற்றும் தனது கடல் வளங்கள் சீரழிவது குறித்த இலங்கையின் கவலையும் அதேபோன்று நியாயமானது. ஒரு தரப்பின் கவலையைச் செல்லுபடியானதாகவும் மற்றொரு தரப்பின் கவலையைத் தடையாகவும் கருதுவது நீடித்த தீர்வை உருவாக்காது.

இறைமை குறித்த கேள்விக்குத் திரும்பத் திரும்பச் செல்வதன் மூலமும் தீர்வைக் காண முடியாது. மாறாக, பாக்கு விரிகுடாவை இரு நாடுகளும் பகிர்ந்துகொள்ளும் ஓர் இயற்கைச் சூழலியல் அமைப்பாகக் கருதி, அதன் முகாமைத்துவத்தில் இந்தியாவும் இலங்கையும் கவனம் செலுத்த வேண்டும். கூட்டு அறிவியல் கண்காணிப்பு, கடல் வளப் பாதுகாப்புத் திட்டங்கள், ஒழுங்குபடுத்தப்பட்ட மற்றும் நிலைபேறான மீன்பிடி தொடர்பான கலந்துரையாடல்கள் ஆகியவை நடைமுறைச் செயற்பாடுகளுக்கான அடித்தளத்தை உருவாக்க முடியும். இத்தகைய ஏற்பாடுகள், மீனவர்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாப்பதுடன், அடித்தள இழுவைமடி மீன்பிடி போன்ற அழிவுகரமான நடைமுறைகளைப் படிப்படியாக முடிவுக்குக் கொண்டுவருவதற்கும் உதவக்கூடும். இத்தகைய ஒத்துழைப்புக்கு எந்தவொரு நாடும் தனது இறைமையையோ சட்டரீதியான நிலைப்பாட்டையோ விட்டுக் கொடுக்க வேண்டிய அவசியமில்லை

அரசியல் எல்லைகளை கடல் சூழலியல் அமைப்புகள் மதிப்பதில்லை என்பதை இரு நாடுகளும் அங்கீகரிக்க வேண்டும் என்பதே இதற்குத் தேவையானதாகும்.

உணர்ச்சிகளை விட அறிவியலுக்கு முன்னுரிமை

கச்சத்தீவு தொடர்பான விவாதம் பல தசாப்தங்களாகத் தொடர்ந்து வருகிறது. தடுத்து வைக்கப்பட்டுள்ள மீனவர்கள் மற்றும் மீனவச் சமூகங்கள் எதிர்கொள்ளும் உடனடிப் பிரச்சினைகள், ஏற்கெனவே நடைமுறையில் உள்ள இராஜதந்திர மற்றும் சட்ட வழிமுறைகள் ஊடாகத் தீர்க்கப்பட வேண்டும். ஆனால், இந்த நடவடிக்கைகள் நீண்டகாலத் தீர்வுக்கு மாற்றாக அமைய முடியாது.

கச்சத்தீவை யார் சொந்தமாகக் கொண்டிருக்கிறார்கள் என்பது மட்டுமே உண்மையான சவாலல்ல. அந்தத் தீவைச் சூழவுள்ள கடற்பரப்பு, அதை நம்பி வாழும் மக்களின் வாழ்வாதாரத்தைத் தொடர்ந்து தாங்கி நிற்குமா என்பதே உண்மையான சவாலாகும். இலங்கையைப் பொறுத்தவரையில், இதற்கான பதில் வெறும் வார்த்தைப் போராட்டமாகவோ செயலற்ற இராஜதந்திரமாகவோ இருக்கக் கூடாது. அது அறிவியல் ஆய்வு, பொறுப்பான கடல் வள முகாமைத்துவம் மற்றும் ஆக்கபூர்வமான பிராந்திய ஒத்துழைப்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும். கச்சத்தீவு தொடர்ந்து சர்ச்சையின் அடையாளமாகவே இருக்க வேண்டியதில்லை. முறையாகப் பயன்படுத்தப்பட்டால், இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான கடல்சார் ஆய்வு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் நிலைபேறான ஒத்துழைப்புக்கான தளமாக அது மாறக்கூடும்.

(கட்டுரையாளர் மிலிந்த மொரகொட இலங்கையின் முன்னாள் அமைச்சரவை அமைச்சர், இராஜதந்திரி மற்றும் மூலோபாய விவகாரங்கள் தொடர்பான ஆய்வு நிறுவனமான பாத்ஃபைண்டர் அறக்கட்டளையின் நிறுவனர் ஆவார். 2021 செப்டெம்பர் முதல் 2023 செப்டெம்பர் வரை இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகராகப் பணியாற்றினார். இவரது ட்விட்டர் கணக்கு: @MilindaMoragoda. இக் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துகள் அவருடைய தனிப்பட்ட கருத்துகளாகும்.)

நவராத்திரி விழாவும் உணவுத் ....

(21ம் பக்கத் தொடர்ச்சி) ஐரோப்பியரின் கிறிஸ்தவ தேவாலயங்களிலிருந்து நாம் கடன் பெற்றவை. திருமணம் உள்ளிட்ட அனைத்து தமிழ்க் கொண்டாட்டங்களிலும் புலால் விருந்தளிப்பதே நாவலருக்கு முந்திய ஈழத் தமிழ்ப் பண்பாடு. அது இன்று யாழ்ப்பாணத்திலுள்ளதா? தமிழர்களின் வாழ்க்கை, மணமுறைகள், விழாக்கள், வழிபாடுகளின் சில எச்சங்கள் ஈழத்தில் இன்றும் அவ்வாறே எஞ்சி இருப்பது மட்டங்களப்பில் தான். இவ்விடயங்கள் தொடர்பாகக் கதைக்கும் நேரங்களில் நல்லகாலம் இங்கு ஒரு ஆறுமுகநாவலர் பிறக்கவில்லை என்று அங்குள்ள சிலர் இன்றும் நகைச்சுவையாகக் கூறுவதுண்டு.

றீச்சாவோ அன்றி அது போன்ற நிறுவனங்களோ முயற்சியாண்மையின் வடிவங்கள். அவை மதநிறுவனங்களோ அன்றி பாடசாலைகளோ அல்ல. எதை எப்போது எவ்வாறு செய்ய வேண்டும் என்பது அந்நிறுவனங்கள் சார்ந்த தனிபபட்ட முடிவு. அதனால் வரக்கூடிய இலாப நட்ட விளைவுகளுக்கும் அந்நிறுவனங்களே பொறுப்பு. றீச்சா மகிழ்வு மையத்துக்கு உள்ளூரில் இருந்து மட்டும் சுற்றுலாவிகள் வருவதில்லை. நாட்டின் பல்வேறு பகுதி மக்களும் வெளிநாட்டவர்களும் அங்கு வந்து செல்கிறார்கள். தனது பயனாளிகளை அல்லது வாடிக்கையாளரைத் திருப்திப்படுத்துவதும் அதன் மூலம் வருமானத்தை ஈட்டுவதுமே ஒவ்வொரு வர்த்தக நிறுவனத்தினதும் நோக்கம். அதனையே றீச்சாவும் செய்து வருகிறது. சமூகத்தைப் பாதிக்கும் வகையிலான செயற்பாடுகள் இடம்பெற்றால் முறைப்பாடு செய்யமுடியும். அதனைத் தடுப்பதற்குச் சட்டங்களும் அதிகாரிகளும் உள்ளனர். நவராத்திரி நாளில் இறைச்சிக்கடைகள் மூடப்படுவதில்லை. மீன்சந்தைகள் அடைக்கப்படுவதில்லை. அசைவ உணவகங்களும் வழமை போலவே திறந்திருக்கின்றன. அவ்வாறிருக்கையில் றீச்சாவை மட்டும் சமயத்துக்கு எதிரானதாக ஏன் சித்தரிக்க வேண்டும். தமிழ் அரசியலில் துரோகிப்பட்டம் வழங்குவதற்கும் இதற்கும் என்ன வேறுபாடு?

றீச்சா போன்று இன்னும் பலநூறு சுற்றுலா மையங்களும் விடுதிகளும் அவை சார்ந்த தொழில்முயற்சிகளும் நமது பிரதேசத்தில் தோன்றவேண்டும். அவை உலக வழக்கத்துக்கும் தரத்துக்குமேற்ப இயங்குவதற்கு அனுமதிக்கப்பட வேண்டும். ஊக்குவிக்கப்படவேண்டும்.எமது வடக்கு சிறந்த சுற்றுலா மையமாக வளரவேண்டும் எனக் கனவுகாணும் நாம் அங்கு சிறப்பாகச் செயற்படுகின்ற ஒரு சில சுற்றுலா நிறுவனங்களையும் நமது சமயத்துடனும் நாம் விரும்பும் பண்பாடுகளுடனும் கட்டிப்போட்டு நசுக்க முனையக்கூடாது. தனிநபர் அல்லது குழுவொன்றின் விருப்பு வெறுப்புகளைச் சமூகத்திற்கானதாகப் பொதுமைப்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும். அதே போலவே ஒருவரின் பொதுவாழ்வு தொடர்பான விமர்சனங்களை அவரது தனிப்பட்ட முயற்சிகளுடன் இணைக்கக்கூடாது. ஆன்மீகம் என்பது தனிமனித விடுதலைக்கானது. தொழில்முயற்சிகள் சமூகத்தின் வளமான வாழ்வுக்கானவை என்பதைப் புரிந்து கொண்டால் இங்கு எந்த சிக்கலுக்கும் இடமில்லை.

(18ம் பக்கத் தொடர்ச்சி) ஒரே நேரத்தில் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்துவதே NPP அரசாங்கத்தின் தற்போதைய பிரதான சர்வதேச நலனாகும். அதாவது, அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான அரசாங்கம், தனது இடதுசாரி - தேசியவாதப் பின்னணியையும் தாண்டி, சர்வதேச — பிராந்திய மட்டங்களில் முற்றிலும் நடைமுறைச் சாத்தியமான (Pragmatic) மற்றும் அணிசேராக் கொள்கையை கையாண்டு வருகிறது. கடந்த இரண்டு ஆண்டு கால ஆட்சியில், குறிப்பாக இந்தியா, சீனா ஆகிய இரு வல்லரசுகளுடனான மூலோபாய சமநிலையை பேணுவதில் அரசாங்கம் பெற்றுள்ள நம்பிக்கையும் அதன் பின்னாலுள்ள நலன்களும் பாராட்டுக்குரியவை. ஆனால், இதை அது மேலும் பல அடுக்குகளில் வளர்த்தெடுத்துச் செல்ல வேண்டும்.

தொற்றுநோய் - மரணங்களா? சாட்சியங்களை அழிக்கும் முயற்சியா?

கட்டுரையாளர்:
வைத்தியகலாநிதி முரளி வல்லிபுரநாதன்

யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் தொல்பொருள் பேராசிரியர் ராஜ் சோமதேவாவினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள செம்மணி இடைக்கால அறிக்கை பெரும் சர்ச்சையையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது. செம்மணியில் புதைக்கப்பட்ட உடல்கள் போர்க்காலப் படுகொலைகள் அல்ல என்றும், அவை ஏதோ ஒரு தொற்றுநோய், இயற்கை அனர்த்தம் அல்லது வழக்கமான மதச் சடங்கு ரீதியான புதைப்புகள் என்றும் நிறுவுவதற்கு அவ்வறிக்கை முயல்கிறது.

நீதித்துறைப் பதிவுகள், தடயவியல் உண்மைகள் மற்றும் வரலாற்று ஆதாரங்களை திட்டமிட்டுப் புறந்தள்ளும் இந்த அறிக்கையின் அடிப்படையற்ற கூற்றுகளை அம்பலப்படுத்த வேண்டியது அவசியமாகும்.

1) எலும்புக்கூடுகளின் காயங்களையும் தளைகளையும் திட்டமிட்டு மறைத்தல்

தியான நிலை (சமாதி) என்ற போலி விளக்கம் 227ஆம் இலக்க எலும்புக்கூடு வழக்கமான மதச் சடங்கின்படி தியான நிலையில் (சமாதி) புதைக்கப்பட்டதாக அறிக்கை சித்திரிக்கிறது. ஆனால் முந்தைய நீதிமன்ற நடவடிக்கைகள் மற்றும் தடயவியல் பதிவுகளின்படி அதே எலும்புக்கூட்டின் கைகள் பின்புறமாகக் கட்டப்பட்டிருந்ததும், மண்டை ஓடு மற்றும் தாடை எலும்புகள் கொடூரமான ஆயுதங்களால் அடித்து நொருக்கப்பட்டிருந்ததும் புகைப்படச் சான்றுகளுடன் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

கைகள் கட்டப்பட்டு, மண்டை ஓடு பிளக்கப்பட்ட கொலையை தியான நிலை என வர்ணிப்பது தடயவியல் மோசடியாகும்.

முறையற்ற புதைப்புகள் பல எலும்புக்கூடுகள் தலை துண்டிக்கப்பட்ட நிலையிலும், ஒன்றன் மேல் ஒன்றாக அவசரக் கோலத்தில் வீசப்பட்ட நிலையிலும் காணப்பட்டதை அறிக்கை திட்டமிட்டு மூடிமறைக்கிறது.

2)சமகாலப் பொருட்களும் சான்றுகளும் புறக்கணிக்கப்படல்

குழந்தைகளின் பொருட்கள் 25ஆம் இலக்க எலும்புக்கூடு ஒரு 4-5 வயதுக் குழந்தையினுடையது. அக்குழந்தையின் அருகே ஆங்கில எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட நவீன பாடசாலைப் பை, விளையாட்டு பாதணிகள் மற்றும் பால் போத்தல்கள் மீட்கப்பட்டுள்ளன.

சவப்பெட்டி என்ற புனைவு அங்கிருந்த சிறு ஆணிகளையும் உக்கிய துணித் துண்டுகளையும் வைத்து, அது ஏதோ மரபுவழிச் சவப்பெட்டிப் புதைப்பு என அறிக்கை அனுமானிக்கிறது. ஆனால் பாடசாலைப் பையுடனும் விளையாட்டுப் பொருட்களுடனும் ஒரு குழந்தை புதைக்கப்பட்டிருப்பது, அது திட்டமிட்ட கடத்தல் மற்றும் படுகொலை என்பதையே திட்டவட்டமாக நிரூபிக்கிறது.

3) நோயியல் மற்றும் மூலக்கூற்று ஆதாரங்கள் இன்மை

ஒரு பெரும் தொற்றுநோயால் மக்கள் கொத்துக்கொத்தாக இறந்தார்கள் என்று வாதிடுவதற்கு, பற்களின் கூழ்மத்திலிருந்து (dental pulp) பெறப்படும் பண்டைய மரபணு (DNA) பரிசோதனைகள் மூலமாகவோ அல்லது எலும்புகளில் உள்ள நோய்க் கூற்று அடையாளங்கள் (காலரா, பிளேக், டைபாய்டு போன்றவை) மூலமாகவோ உயிரியல் சான்றுகள் நிறுவப்பட வேண்டும்.

சோமதேவாவின் அறிக்கையில் இத்தகைய எந்தவொரு விஞ்ஞானபூர்வ ஆய்வுகளோ, ஆய்வக நோயியல் (pathological) உறுதிப்படுத்தல்களோ கிடையாது. வெறும் அனுமானங்களை மட்டுமே அறிக்கையாக அவர் தந்துள்ளார்.

5) யாழ்ப்பாணத்தின் சுகாதார மற்றும் மரணப் பதிவேடுகளில் சான்றுகள் இல்லை.

செம்மணியில் மீட்கப்பட்ட உடல்களில் 60 சதவீதத்திற்கும் அதிகமானவை பச்சிளங்குழந்தைகள் மற்றும் சிறுவர்களுடையவை. அப்படியொரு கொடிய தொற்றுநோய் பரவி நூற்றுக்கணக்கான மக்கள் ஒரேயடியாக இறந்திருந்தால், அதற்குரிய ஆவணங்கள் யாழ்ப்பாணத்தின் பொதுச் சுகாதாரத் துறை, போதனா வைத்தியசாலை அல்லது தேவாலயங்களின் மரணப் பதிவேடுகளில் பதிவாகியிருக்க வேண்டும். ஆனால் அப்படியொரு தொற்றுநோய் அனர்த்தம் நிகழ்ந்ததற்கான எந்தவொரு நிர்வாகப் பதிவும் வரலாற்றில் இல்லை.

5)இராணுவத்தினரின் நீதிமன்ற வாக்கு மூலங்களை மூடிமறைத்தல்

செம்மணி புதைகுழி என்பது தொல்பொருள் ஆய்வின் போது தற்செயலாகக் கண்டெடுக்கப்பட்ட ஒன்றல்ல. 1998ஆம் ஆண்டு கிருஷாந்தி குமாரசுவாமி வழக்கு விசாரணையின் போது, முன்னாள் இராணுவச் சிப்பாய் சோமரத்ன ராஜபக்ச உள்ளிட்ட படையினரால் நீதிமன்றில் பகிரங்கமாக அளிக்கப்பட்ட சாட்சியங்களின் அடிப்படையிலேயே இந்த புதைகுழிகள் அடையாளம் காணப்பட்டன.

பாதுகாப்புப் படையினரால் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டனர் என்ற உறுதிப்படுத்தப்பட்ட வாக்குமூலங்களையும் சாட்சியங்களையும் ஒதுக்கி விட்டு, இதனைத் தொற்றுநோய் மரணம் என்று திசை திருப்புவது அப்பட்டமான நீதிமறுப்பாகும்

யார் இந்த ராஜ் சோமதேவா?

பேராசிரியர் சோமதேவாவின் முந்தைய வரலாற்று மற்றும் தொல்பொருள் நிலைப்பாடுகளைக் கவனித்தால், அவரது அணுகுமுறை எப்போதுமே பக்கச்சார்பானதாகவே இருந்து வந்துள்ளது:

விஜயனுக்கு முற்பட்ட தமிழர் வரலாற்றை மறுத்தல் இலங்கையில் விஜயனின் வருகைக்கு முந்தைய பெருங்கற்காலப் பண்பாடு (Megalithic Iron Age), பொம்பரிப்பு, கந்தரோடை, ஆனைக்கோட்டை முத்திரை (கோவேதா), மற்றும் தமிழ் பிராமிச் சான்றுகள் என தமிழர்களும் சைவ வழிபாட்டு எச்சங்களும் இந்த மண்ணில் தொன்று தொட்டு வாழ்ந்ததற்கான உறுதியான தொல்பொருள் ஆதாரங்கள் நிரூபிக்கப்பட்டுள்ளன. ஆனால், பேராசிரியர் சோமதேவா இந்த வரலாற்று உண்மைகளை ஒருபோதும் ஏற்றுக் கொண்டதில்லை.

திஸ்ஸமஹாராம பானை ஓட்டு முரண்பாடு. திஸ்ஸமஹாராமவில் கண்டெடுக்கப்பட்ட பானை ஓட்டு எழுத்துக்களை (எண் 53) ஐராவதம் மகாதேவன் மற்றும் பேராசிரியர் ப. புஷ்ப

ரட்ணம் ஆகியோர் திரளி முறி என்ற தமிழ் பிராமி எழுத்தாக வாசித்த போது அதனை மறுத்து அது சிங்கள-பிராகிருத வடிவம் என வலிந்து திரித்தவர் சோமதேவா.

ஹெல (Hela) மேலாதிக்கக் கோட்பாடு இலங்கையின் தொல்வரலாறு முழுவதும் சிங்கள பௌத்தர்களின் பூர்வீகத்திற்கு மட்டுமே சொந்தமானது என்ற ஒருதலைப்பட்சமான நிலைப்பாட்டை தொல்பொருள் ரீதியாக நிலைநிறுத்தவே அவர் தொடர்ச்சியாக முயன்று வந்துள்ளார். இப்போது இந்துக்களின் சமாதி என்ற புனித வழிபாட்டு முறையையும் போர் வன்முறைகளை மறைக்கத் தவறாகப் பயன்படுத்துகிறார்.

சர்வதேசம் தலையிட வேண்டிய கட்டாயம்:

இலங்கையின் தொல்பொருள் திணைக்களமும் அரச அதிகார நிறுவனங்களும் எத்தகைய அரசியல் மற்றும் இன ரீதியான பக்கச்சார்புடன் இயங்குகின்றன என்பது ஏற்கனவே பல்வேறு சர்வதேச மற்றும் உள்நாட்டு ஆய்வுகளிலும், கொழும்பு டெலிகிராப் உள்ளிட்ட ஊடகப் பதிவுகளிலும் ஆதாரங்களுடன் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

சோமதேவாவின் அறிக்கையை நிராகரித்தல் தமிழ்த்தரப்பும் மனித உரிமைச் செயற்பாட்டாளர்களும், சட்டத்தரணிகளும் எந்தவித விஞ்ஞானபூர்வ அடிப்படையும் அற்ற இந்த போலி அறிக்கையை முழுமையாக நிராகரிக்க வேண்டும்.

வரலாற்றுத் திரிபுகளையும் தடயவியல் மூடி மறைப்புகளையும் செய்யும் உள்நாட்டு ஆய்வாளர்கள் தமிழ் பகுதிகளில் ஆய்வு என்ற போர்வையில் தொடர்ந்து குழப்பங்களை விளைவிக்க அனுமதிக்கக் கூடாது.

சர்வதேச நிபுணர்களின் நேரடி ஆய்வ் உள்நாட்டுப் பொறிமுறைகள் திட்டமிட்டு உண்மைகளைத் திரிக்கும் சூழலில், ஐக்கிய நாடுகள் சபையின் 'மினசோட்டா நெறிமுறைக்கு' (Minnesota Protocol) அமைய, நடுநிலையான சர்வதேச தடயவியல் நிபுணர்கள், நோயியல் வல்லுநர்கள் மற்றும் தொல்பொருள் ஆய்வாளர்களின் கண்காணிப்பில் மட்டுமே செம்மணி உள்ளிட்ட அனைத்துப் புதைகுழிகளும் மீளாய்வு செய்யப்பட வேண்டும்.

30வது ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
10.11.1964

உதிர்வு
26.10.1096

அரியாலையைப் பிறப்பிடமாகவும்
பிரான்ஸை வதிவிடமாகவும் கொண்டிருந்த
திரு கந்தையா பேரின்பநாதன்
(லெப்.கேணல் நாதன்)

தமிழர் தலைவனுக்கு அகவை எழுபத்து இரண்டு!
தம்பி நாதனுக்கு அறுபத்து இரண்டு!
பத்து வருட இடைவெளியில் உதித்தாலும்
நாட்டுப் பற்றில் இருவரும் ஒன்றாமே!
தம்பி நீ வித்தாகி முப்பது ஆண்டுகள்!
முப்பது வருடமும் உனை நினையா நாளில்லை!
மாண்டார் வருவரோ வையகத்தில் என்பது உமக்கல்ல
வித்தாகிய வீர வேங்கைக்கு என்றுமே சாவில்லை
என்னத்தைக் கூறி மனதைத் தேற்றினாலும்
உடன்பிறந்த பாசம் உதைக்கிறதே என் மனதை
நாதனின் அக்கா என்றால் தனியான மரியாதை
உனது மதிப்பை ஏற்க நீ இன்று இல்லையே?
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி! உன் பிரிவால் வாடும் குடும்பத்தினர்

தகவல்:- சகோதரி யோகாம்பிகை இலங்கேஸ்வரன் 416 754 1221

2009 ஏப்ரல் ஆனந்தபுரச் சமரில் காயமடைந்த 300 விடுதலைப்புலிகள் படுகொலை செய்யப்பட்டனர்?

இலங்கை இராணுவம் 2009 ஏப்ரல் மாதம் ஆனந்தபுரத்தைக் கைப்பற்றிய போது கடுமையாகக் காயமடைந்த நிலையில் ஒரே கட்டடத்துக்குள் விட்டுச் செல்லப்பட்ட 300க்கும் மேற்பட்ட விடுதலைப்புலிகள் இயக்கப் போராளிகள் படுகொலை செய்யப் பட்டதாக சர்வதேச உண்மைக்கும், நீதிக்குமான செயற்திட்டத்தின் புதிய அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டு ள்ளது.

இறுதிக்கட்டப் போரில் தப்பிப்பிழைத் தவர்கள் அளித்த வாக்குமூலங்களின் அடிப்படையில் சர்வதேச உண்மை க்கும், நீதிக்குமான செயற்திட்டத் தினால் தயாரிக்கப்பட்டு, ஆனந்தபுர மோதல்' எனும் தலைப்பில் வெளி யிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

ஆனந்தபுரத்தின் முற்றுகையிடப் பட்ட பகுதியின் கிழக்குப் புறமாக இருந்த கணினி மையப்பகுதியில் போரின் இறுதி நாட்களில் காய மடைந்த நூற்றுக்கணக்கான போராளிகள் கூடியதாகவும், 2009 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 3 ஆம் திகதியன்று காயமடைந்தவர்கள் அங்கு விட்டுச் செல்லப்பட்டதாகவும், அதன்பின்னர் அவர்கள் யாரையும் காணவில்லை என்றும் அவ்வறிக்கை யில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது பற்றி அங்கிருந்து தப்பிப்பிழை த்த ஒருவர், 'நான் வெளியேறியபோது காயமடைந்தவர்கள் உயிருடன் இருந்தனர். அவர்களிடம் துப்பாக்கி களோ, வெடிபொருட்களோ அல்லது சயனைட்டோ இருக்கவில்லை' எனக் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை அங்கு விட்டுச்செல்லப் பட்ட 30க்கும் மேற்பட்டோருடன் பயிற்சி பெற்று, அவர்களது குடும்பத் தினரையும் நன்கறிந்த மற்றொருவர், 'அவர்கள் மீண்டும் திரும்பி வர வில்லை. அவர்கள் அனைவரையும் படுகொலை செய்து விடுவார்கள் என நாங்கள் ஒருபோதும் நினைக்க வில்லை. அங்கு விட்டுச் செல்லப் பட்ட காயமடைந்தவர்கள் உயிரு டன் கொளுத்தப்பட்டதாகப் பின்னர் அறிந்து கொண்டோம்' எனக் கூறி யுள்ளார்.

INTERNATIONAL TRUTH AND JUSTICE PROJECT

இதுபற்றி அவ்வறிக்கையில் கருத்து வெளியிட்டுள்ள சர்வதேச உண்மை க்கும் நீதிக்குமான செயற்திட்டத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் யஸ்மின் சூக்கா, 'ஆனந்தபுரம் படுகொலைகள் குறித்து சாட்சியமளிப்பதற்கு யாரும் தப்பவில்லை என்றே நாம் பல வருடங்களாக நம்பிக் கொண்டிருந் தோம். இருப்பினும் அங்கிருந்து தப்பிப் பிழைத்தவர்கள் சிலர் இப் போது அவர்களது மௌனத்தைக் கலைத்துள்ளனர். இராணுவ வெற்றி என்பது காயமடைந்தவர்களைக் கொல்வதற்கான உரிமையை வழங்கி விடாது. கடந்த 17 வருடங்களாகத் தொடரும் தண்டனைகள் ஏதுமற்ற நிலைமை, குற்றவியல் பொறுப்பை அழித்துவிடாது. இவ்வாறானதொரு பின்னணியில் கடந்த காலங்களில் நிகழ்ந்தவற்றை இலங்கை வெளிப் படுத்துவதுடன், மீறல்களுடன் தொடர்புடையவர்களை நீதியின் முன் நிறுத்த வேண்டும்' என வலியுறுத்தி யுள்ளார்

கட்டுநாயக்காவில் கைதானவரை மல்லாகம் நீதிமன்றம் பிணையில் விடுவிப்பு!

இந்தியாவிலிருந்து தாயகம் திரும் பிய வேளையில் கட்டுநாயக்க சர்வ தேச விமான நிலையத்தில் வைத்துப் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட நபர், நேற்று யாழ்ப்பாணத்திற்கு அழைத்து வரப் பட்டு மல்லாகம் நீதிவான் நீதிமன்ற த்தில் ஆஜர்படுத்தப்பட்டதையடு த்து பிணையில் விடுவிக்கப் பட்டுள் ளார்.

யாழ்ப்பாணம், சண்டிலிப்பாய் பிரதேச த்தைச் சேர்ந்த 50 வயதான இவர், விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைந்து சு.ப. தமிழ்ச்செல்வனின் சாரதியாகப் பணியாற்றியுள்ளார்.

அதன் பின்னர், அவ்வமைப்பிலிரு ந்து விலகி 2009 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 13 ஆம் திகதி திருச்சிக்குத் தப்பிச் சென்று, அங்கு தற்காலிகமாக வசித்து வந்தவாறே சாரதியாகப் பணியாற்றி வந்துள்ளார்.

அங்கு வசித்து வந்த வேளையில், 2015 ஜீலை 20 ஆம் திகதி அயலவர் கள் அளித்த தகவலின் பேரில், தமிழ்நாடு பொலிஸாரால் கைது செய்யப்பட்டு 10 நாட்கள் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டார்.

இதனைத் தொடர்ந்து, 2018 ஏப்ரல் 27 ஆம் திகதி இந்திய நீதிமன்றம் இவருக்கு 10 ஆண்டுகள் சிறைத் தண்டனையும், 45,000 இந்திய ரூபாயை தண்டப்பணமாகச் செலுத் தவும் உத்தரவிட்டது.

குறித்த தீர்ப்புக்கு எதிராக 2022 ஆம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்ட மேல் முறையீட்டைத் தொடர்ந்து, இவ ரது சிறைத்தண்டனை 7 ஆண்டு களாகக் குறைக்கப்பட்டது. இதன் படி திருச்சி சிறப்பு முகாமில் தடு த்து வைக்கப்பட்டிருந்த கந்தசாமி கிருஷ்ணகுமார், தண்டனைக் காலம் நிறைவடைந்த நிலையில் விடுவிக்கப்பட்டு இந்தியாவில் இரு ந்து நாடு கடத்தப்பட்டார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை (26) மாலை 04:55 மணியளவில் திருச்சியிலிருந்து ஸ்ரீலங்கன் ஏர்லை ன்ஸ் நிறுவனத்திற்குச் சொந்தமான 'யு.எல்.-134' (UL-134) விசேட விமானத்தின் மூலம் அவர் கட்டு நாயக்க விமான நிலையத்திற்கு அனு ப்பி வைக்கப்பட்டார். இந்தியாவிலிரு ந்து விமானம் மூலம் இலங்கை திரும்பிய போதே கட்டுநாயக்க விமான நிலையத்தில் பயங்கரவாதத் தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவினரால் இவர் கைது செய்யப் பட்டிருந்தார்.

கைது செய்யப்பட்ட நபர், மேலதிக விசாரணை மற்றும் வழக்கு நடவடி க்கைகளுக்காகப் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு அதிகாரிகளால் நேற்று யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வரப் பட்டு பின்னர் மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.

இந்த நிலையிலேயே நீதிவான் அவரைப் பிணையில் செல்ல அனு மதித்து உத்தரவிட்டார். அத்துடன், வழக்கு விசாரணையின் அடுத்த தவணையை எதிர்வரும் நவம்பர் மாதம் 12ஆம் திகதிக்கு நீதவான் ஒத்திவைத்துள்ளார்.